# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:17 வள்ளுவர் ஆண்டு 2032 கார்த்திகை 12 செவ்வாய்க்கிழமை (27-11-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:01


# மூன்று முக்கிய விடயங்களை பிரபாகரன் இன்று மாவீரர் தின உரையில் விவரிப்பார்

## புலிகள் மீதான தடை, பயங்கரவாத முத்திரை, பேரினவாதக் கொடுமை ஆகியவையே அவை

வவுனியா,நவம்பர்27

**இவ்வருடத்துக்குரிய - முக்கியத்துவம் வாய்ந்த - மாவீரர் தின உரையை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் இன்று மாலை நிகழ்த்துவார்.**

**இந்த உரையில் புலிகள் இயக்கம் மீதான தடை, பயங்கரவாத முத்திரை, பேரினவாதக் கொடுமை ஆகிய மூன்று முக்கிய விடயங்களை அவர் குறிப்பிடுவார் என்று நம்பப்படுகிறது.**

பன்னிரண்டாவது மாவீரர் தினத்தின் உரையை இன்று மாலை 5.45 மணிக்கு (பழைய நேரப்படி) தலைவர் பிரபாகரன் ஆற்றத் தொடங்குவார். மாலை 6.02 மணி வரை - 17 நிமிடங்களுக்கு - இந்த உரை நீடிக்கும்

'புலிகளின் குரல்' வானொலி அந்த உரையை ஒலிபரப்பும்.

மாவீரர் தின உரையை அடுத்து தொடர்ந்து மூன்று நிமிடங்களுக்கு ஆலயங்களில் மணி ஒலிக்கப்படும். 6.05 மணிக்கு ஈகைச்சுடர் ஏற்றும் நிகழ்வு இடம்பெறும்.

பிரபாகரனின் மாவீரர் தின உரை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கொள்கைகள், கோட்பாடுகள் மற்றும் எதிர்காலத் திட்டங்கள்

(2ஆம் பக்கம் பார்க்க)

## இருபாலைப் பகுதியில் நேற்று இளைஞர் சுட்டுக்கொலை!

யாழ்ப்பாணம்,நவ.27

இருபாலைப் பகுதியில் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிரிழந்ததாகத் தெரிவித்து இளைஞர் ஒருவரின் சடலம் கோப்பாய் பொலீஸாரால் நேற்று மாலை யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

சுமார் 25 வயது மதிக்கத்தக்க இந்த இளைஞனின் சடலத்தில் வாய்ப்பகுதியிலும் மார்பிலும் துப்பாக்கிச் சூட்டுக்காயங்கள் காணப்பட்டன.

இருபாலை - கோண்டாவில் வீதியில் டச்சு வீதி இணையும் சந்தியில் நேற்றுக் காலை 10 மணியளவில் இந்த இளைஞன் சுடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. படையினரின் மோட்டார் சைக்கிள் பிரிவே (பீல்ட் பைக் குறூப்) இவரைச் சுட்டுக்கொன்றதாகவும் கூறப்பட்டது.

இந்த இளைஞரை படையினர் சோதனையிட முற்பட்டபோது அவர் சயனைட்டைக் கடித்தவாறு படையினரை நோக்கி கிரனேட் வீச முற்பட்டதாகவும் -

அதனால் படையினர் அவரைச் சுட்டுக்கொன்றதாகவும் -

கோப்பாய்ப் பொலீஸார் தெரிவித்தனர்.

கொல்லப்பட்ட இளைஞனிடம் இருந்து வரதராஜா ஸ்ரீராமன் (பண்டத்தரிப்பு) என்ற விவரமடங்கிய அடையாள அட்டைகள் கைப்பற்றப்பட்டதாகவும் பொலீஸார் மேலும் கூறினர்.

(2ஆம் பக்கம் பார்க்க)

## நிமால் படுகொலை தொடர்பாக இருவரைக் கைதுசெய்யப் பணிப்பு

யாழ்ப்பாணம்,நவ.27

ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜனின் படுகொலையுடன் தொடர்புடைய இரு சந்தேகநபர்களையும் உடனடியாகக் கைதுசெய்து எதிர்வரும் 12ஆம் திகதிக்கு முன்னர் யாழ். நீதிமன்றில் ஆஜர் செய்யுமாறு நீதிவான் இ.த.விக்னராஜா குற்றப் புலனாய்வுப் பொலீஸ் பொறுப்பதிகாரிக்கு உத்தரவிட்டுள்ளார்.

நிமலராஜனின் " படுகொலை தொடர்பாக விசாரணைகளை நடத்தி வரும் குற்றப் புலனாய்வுப் பொலீஸ் பொறுப்பதிகாரியினால் அது குறித்த அறிக்கை நேற்று யாழ். நீதிமன்றுக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

அந்த அறிக்கையின் பிரகாரம் பொலீஸாரினால் இரு சந்தேகநபர்களின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டதாகவும் -

(2ஆம் பக்கம் பார்க்க)

வாசகர்களே!
உங்கள் உதயனுக்கு
இன்று
16ஆவது
பிறந்த நாள்
உங்களின் அன்பையும் அரவணைப்பையும் இந்நாளில் நன்றியுடன் நினைவுகூர்வதில் 'உதயன்' பெருமகிழ்வடைகிறான்.

## புலிபாய்ந்தகல் பிரதேசத்தில் கிளைமோருக்கு 2 புலிகள் பலி!

மட்டக்களப்பு மாவட்டம் புலிபாய்ந்த கல்லில் நேற்றுக் காலை 9 மணியளவில் மரம் ஒன்றில் கட்டப்பட்டிருந்ததாகக் கூறப்படும் கிளைமோர்க்குண்டு வெடித்ததால் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர் இருவர் பலியாகினர்.

கிரான் பாலத்தடி பொலீஸ் நிலையத்திலிருந்து சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் இந்தப் பிரதேசம் அமைந்துள்ளது.

இராணுவத்தின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கும் இடைப்பட்ட பகுதியை அண்டி இச் சம்பவம் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

(உ)

## நகரில் சுவரொட்டிகள்!

யாழ்ப்பாணம்,நவ.27

தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரனின் 47ஆவது பிறந்த தினமான நேற்று அவருக்கு பிறந்த தின வாழ்த்துத் தெரிவிக்கும் சுவரொட்டிகள் குடாநாட்டின் பல பகுதிகளிலும் ஒட்டப்பட்டிருந்தன.

மாவீரர் தினத்தையொட்டிய சுவரொட்டிகளும் யாழ்நகரப் பகுதி உட்பட பல இடங்களிலும் ஒட்டப்பட்டிருந்தன.

கணனியில் அச்சிடப்பட்டிருந்த இந்தச் சுவரொட்டிகள் யாழ். நாவலர் வீதிப்பகுதியில் உள்ள சுவர்களில் பரவலாகக் காணப்பட்டன.

இதனால் நேற்றுக்காலை 7.30 மணியளவில் அந்த வீதியில் சென்ற இளைஞர்கள் அனைவரும் படையினரால் தடுத்து வைக்கப்பட்டு தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(2ஆம் பக்கம் பார்க்க)

ஐ.தே. கட்சிக்கு ஆதரவாகச் செயற்படுகின்றாராம்!

## தேர்தல் ஆணையாளரைப் பதவி நீக்குமாறு அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் வற்புறுத்து

கொழும்பு,நவ.27

தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்காவை பதவி நீக்கும்படி அரசுத் தரப்பின் ஆறு சிரேஷ்ட அமைச்சர்கள் மற்றும் பல பிரதி அமைச்சர்கள், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை கடிதம் மூலம் கோரியிருக்கின்றனர்.

ஐ.தே.கட்சி சார்பாகவே முடிவுகளை எடுக்கின்றார் என்றும் -

பல திணைக்களங்கள் மற்றும் அதிகாரிகளின் நடவடிக்கைகளில் அத்துமீறித் தலையிடுகின்றார் என்றும் -

தேர்தல் ஆணையாளருக்கு எதிராக அவர்கள் தமது கடிதத்தில் குற்றம் சுமத்தியிருக்கின்றார்கள்.

(2ஆம் பக்கம் பார்க்க)

### கொழும்பில் பிக்குமார் ஊர்வலம்

வடக்கு - கிழக்குக்கு இடைக்கால நிர்வாக சபை அமைக்கப்படுவதாகக் கூறப்படுவதை ஆட்சேபித்து தலைநகர் கொழும்பில் நேற்று நூற்றுக் கணக்கான பிக்குகள் ஊர்வலம் ஒன்றை நடத்தினர்.

பொரளை திலகராம விகாரையிலிருந்து புறப்பட்ட பிக்குமார் விகாரமாதேவி பூங்காவுக்கு முன்னால் கூட்டம் ஒன்றை நடத்தினர்.

வடக்கு - கிழக்குக்கு உத்தேச

(2ஆம் பக்கம் பார்க்க)

### தேர்தல் களத்தில் பாடசாலை மாணவன்!

கொழும்பு,நவ.27

சிஹல உறுமய கட்சியின் சார்பில் பாடசாலை மாணவர் ஒருவர் தேர்தலில் போட்டியிடுகின்றார். பாடசாலைச் சீருடை அணிந்து தேர்தல் பிரசார மேடைகளைக் கலக்கி வருகின்றார் அந்த மாணவ வேட்பாளர்.

கடுகண்ணாவை தேசியக் கல்லூரியில் பயிலும் விஞ்ஞானப் பிரிவு மாணவரான பந்துல ரொன் ஜெயக்

(2ஆம் பக்கம் பார்க்க)

## ஐரோப்பிய ஒன்றியக் கண்காணிப்புக் குழுவின் உயரதிகாரிகள் நாளை யாழ்ப்பாணம் வருகை

### முறைப்பாட்டுக்குத் தயாராகின்றன தமிழ்க் கட்சிகள்

யாழ்ப்பாணம்,நவ.27

ஐரோப்பிய யூனியன் தேர்தல் கண்காணிப்பாளர்களின் உயர்மட்டக் குழு ஒன்று நாளை யாழ்.வருகின்றது. நாளைமறுதினம் வரை இக்குழு யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும்.

இக்குழுவினர் தீவுப்பகுதி உட்பட குடாநாட்டில் பல்வேறு இடங்களுக்கும் சென்று தேர்தல் நிலைமைகளை நேரில் அவதானிப்பர்.

பல்வேறு கட்சிகளின் பிரதிநிதிகளையும், யாழ்.உதவித் தேர்தல் ஆணையாளரையும், பொதுமக்களையும் இவர்கள் சந்தித்து உரையாடுவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஐரோப்பிய யூனியன் தேர்தல் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஜோன் குஸ்ணஹான், ஐரோப்பிய யூனியனின் இலங்கைத் தூதர் இல்கா உசிற்றாலோ மற்றும் மேரி

(18ஆம் பக்கம் பார்க்க)




நான்கு தமிழ்க் கட்சிகள் கூட்டமைப்பின் முதன்மை வேட்பாளர்

வீ.ஆனந்தசங்கரி அவர்களின்

முதன்மை ஸ்தானத்தை உறுதிப்படுத்துவோம்

தமிழர் விடுதலைக் கூட்டணி



# கடந்த வருடம் மாவீரர் தின நிகழ்வில்....




இன்று மாவீரர் தினம். கடந்த வருடம் மாவீரர் தினத்தன்று தலைவர் வே. பிரபாகரன் ஈகைச் சுடரேற்றி மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்துவதையும் அந் நிகழ்வில் அணிவகுப்பு மரியாதை செய்யும் விடுதலைப் புலிகளின் சிறுத்தைப் படைப் பிரிவையும் படங்களில் காணலாம்.

# தமிழ்த் தேசியப் போராட்டத்துக்கு வலுவூட்டவே முஸ்லிம் காங்கிரஸ் யாழ்.மாவட்டத்தில் போட்டி!

## அதன் பிரதம வேட்பாளர் கூறுகின்றார்

யாழ்ப்பாணம்,நவ.27

தமிழ் - முஸ்லிம் மக்களின் உறவைப் பயன்படுத்தி தமிழ்த் தேசிய போராட்டத்துக்கு வலுவூட்டு வதற்காகவே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எதிர்வரும் பொதுத் தேர்தலில் யாழ்.மாவட்டத்தில் போட்டியிடுகின்றது.

- இவ்வாறு தெரிவித்தார் அக்கட்சியின் யாழ்.மாவட்ட முதன்மை வேட்பாளர் மௌலவி பி.ஏ.எஸ். சுபியான்.

நேற்று முஸ்லிம் தெருவிலுள்ள கட்சியின் யாழ்.அலுவலகத்தில நடைபெற்ற செய்தியாளர்களுடனான சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் புதிய தலைமை நாட்டின் இனப்பிரச்சினைக்கான தீர்வைக் காண்பதில் புதிய அணுகுமுறைகளைக் கையாண்டு, உறுதியான அழுத்தங்களைப் பிரயோகித்து வருகின்றது. யுத்தம் நிறுத்தப்பட்டு, புலிகளுடன் பேச்சுக்கள் நடத்தப்பட்டாலேயே அரசியல் தீர்வு எட்டப்படும் என்பதை நாம் ஆணித்தரமாக வலியுறுத்தி வருகின்றோம்.

கடந்த காலங்களில் முஸ்லீம் காங்கிரஸ் பொ.ஐ.மு. அரசுக்கு ஆதரவு வழங்கி வந்தது. எனினும் அரசு யுத்த நிறுத்தம், அரசியல் தீர்வு ஆகிய விடயங்களில் உண்மைத் தன்மையுடன் நடந்துகொள்ளவில்லை. எதிர்வரும் நாள்களில் ஐ.தே.க. அரசின் பங்காளிகளாக நாம் இருக்கப் போகின்றோம். அப்போதும் நாம் இவ்விடயங்களையே வலியுறுத்துவோம். பேச்சுக்கள் மூலமான தீர்வு - தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்கள மக்களின் உரிமைகள் மதிக்கப்படுவதை உறுதி செய்வதாக அமைய வேண்டும்.

வடமாகாண முஸ்லிம்கள் தொடர்பான பிரச்சினையை ஒரு புதிய எழுச்சியுடன் - புதிய நோக்கில் - ஆராய்ந்து வருகின்றோம். வடமாகாண முஸ்லிம்களின் பிரச்சினை தனித்துவம் வாய்ந்த ஒன்றென்பதை ஏற்றுக் கொண்டுள்ளோம். தமிழ் மக்களுடனான முஸ்லிம்களின் ஒன்றுபட்ட வாழ்வையும், ஐக்கியத்தையும் எமது புதிய தலைமை சரியாகப் புரிந்திருக்கின்றது.

**தேர்தல் களம் [X]**

நான் முஸ்லிம் காங்கிரஸில் இணைவதற்கு முன்னதாகவே யுத்த நிறுத்தம், சமாதானப் பேச்சு என்பவற்றை வலியுறுத்தி பல ஆர்ப்பாட்டங்களையும் உயர்மட்ட சந்திப்புக்களையும் கடந்த ஒன்பது ஆண்டுகளாக மேற்கொண்டு வருவதை நீங்கள் அறிவீர்கள். யாழ்ப்பாணத்திலிருந்து முஸ்லிம்கள் கடந்த 1990ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதமளவில் வெளியேற்றப்பட்ட சம்பவம் தமிழ்த் தேசியப் போராட்டத்தில் ஒரு விபத்து. ஆனாலும் முஸ்லிம்கள் விரக்தி நிலையை அடைந்து, போராட்டத்தில் இருந்து ஒதுங்கவில்லை. தமிழ்த் தேசிய போராட்டத்திற்கு துரோகமிழைக்கக்கூடிய, பழிவாங்குகின்ற எந்த ஒரு செயற்பாட்டிலும் அவர்கள் ஈடுபடவில்லை. மாறாக இது தொடரும் இனப்பிரச்சினையின் ஒரு விளைவு என்பதைப் புரிந்து கொண்டார்கள்.

கடந்த காலங்களில் அரசியல் தீர்வு மூலமே சமாதானத்தை அடைய முடியும் என்ற கோரிக்கையை முன்னிறுத்தி நாம் நடத்திய போராட்டங்களுக்கு அரசியல் பலம் போதாமல் இருந்தது. இதன் காரணமாகவே நாம் தேர்தலில் - யாழ்.மாவட்டத்தில் போட்டியிட முடிவுசெய்தோம்.

ஆரம்ப கட்டத்தில் எமது ஸ்ரீலங்கா முஸலிம் காங்கிரஸ் கட்சி யாழ். மாவட்டத்தில் தனித்துப் போட்டியிடுவதைத் தவிர்க்க விரும்பியது. இதனால் - தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் ஏற்கனவே எமக்கிருந்த நல் லுறவைப் பயன்படுத்தி, அவர்களுடன் இணைந்து உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடுவது குறித்தும் -

அதில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முதன்மை வேட்பாளராக என்னை நிறுத்துவது குறித்தும் -

ஆலோசிக்கப்பட்டது. ஆனால் அவ்வேளை நான்கு கட்சிக் கூட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டமையால் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பிரதிநிதித்துவம் ஏழு ஆகக் குறைந்துவிட்டது. இதனால் எம்மையும் இணைத்துக்கொள்வதில் அவர்கள் சிரமங்களை எதிர்நோக்கினர். இவ்விடயத்தை அவர்கள் எம்மிடம் தெளிவுபடுத்திய பின்னரே நாம் தனித்துப் போட்டியிட முடிவுசெய்தோம்.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை முஸ்லிம் மக்களின் வாக்குப்பலம் குறைவாகவே உள்ளது. இங்கிருந்து வெளியேறிய முஸ்லிம்களின் வாக்குகளும் தென்பகுதியிலேயே சிதறுண்ட நிலையில் உள்ளன. எமக்கு தமிழ் மக்கள் போதிய ஒத்துழைப்புத் தருவார்கள் என்ற நம்பிக்கையுடனேயே இத்தேர்தலில் வேட்பாளராக நான் போட்டியிடுகின்றேன் - என்றார்.(ம-9)



நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் முதன்மை வேட்பாளர் அகமட் சுல்தான் சுபியான் மற்றும் வேட்பாளர் சுபைர் மொகமட் மனாப்தீன் ஆகியோர் காணப்படுகின்றனர். இரு மருங்கிலும் கட்சியின் ஆதரவாளர்களான காசீம், ராசீக் ஆகியோரும் காணப்படுகின்றனர்.

### இருபாலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இளைஞனின் சடலத்தில் இருந்ததாகத் தெரிவித்து பொன் நிறக் கடிகாரம் ஒன்றும் 'லவ்' (LOVE) என ஆங்கிலத்தில் எழுதிய மோதிரமும் பொலீஸாரால் யாழ்.ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

யாழ். நீதிமன்ற மேலதிக நீதிவான் திருமதி ச.இளங்கோவன் நேற்று மாலை சம்பவ இடத்துக்கு நேரில் சென்று சடலத்தைப் பார்வையிட்டார். பிரேத பரிசோதனை மற்றும் மரண விசாரணையின் பொருட்டு சடலம் யாழ்.ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளது. (ம-4-9-10-15-180)

### தேர்தல்களத்தில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொடி என்ற 19 வயது மாணவனே சிஹல உறுமய சார்பில் கேகாலை மாவட்டத்தில் தேர்தலில் போட்டியிடுகின்றார்.

1982ஆம் ஆண்டு மார்ச் 18ஆம் திகதி பிறந்த இந்த மாணவன் இந்தத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களில் வயதில் குறைந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

### தேர்தல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர்கள் டி.எம். ஜெயரத்ன, அநுருத்த ரத்வத்த, பட்டி வீரக்கோன் தினேஷ் குணவர்த்தன, இந்திக குணவர்த்தன, மங்கள சமரவீர ஆகியோரும் இந்தக் கடிதத்தில் ஒப்பமிட்டுள்ளனர்.

தயானந்த திஸநாயக்காவை பதவியிலிருந்து அகற்றி, அந்த இடத்துக்கு வேறு பொருத்தமான ஒருவரை நியமிக்கும்படி அவர்கள் ஜனாதிபதியைக் கோரியுள்ளனர். (உ-4)

### நிமால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள் இருவரும் படுகொலை பற்றிய குற்றச்சாட்டை ஏற்றுக்கொள்ளாத காரணத்தினால் அந்த இருவரும் விடுதலை செய்யப்பட்டதாகவும் -

அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனைக் கவனத்தில் எடுத்துக் கொண்ட நீதிமன்று, அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள இருவரும் கொலை வழக்குச் சந்தேகநபர்களாகக் கருதப்படுபவர்கள். இவர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட பின்பு சட்டமா அதிபரின் பணிப்பின் பேரில் அல்லது மேல் நீதிமன்றினால் பிணையில் விடவேண்டும் என்பதே குற்றவியல் சட்டத்தின் அடிப்படைத் தன்மையாகும்.

ஆகவே அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள இரு சந்தேக நபர்களையும் உடனடியாகக் கைது செய்து நீதிமன்றின் முன்பு ஆஜர்ப்படுத்துமாறு யாழ். பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி மூலம் குற்றப் புலனாய்வுப் பொலீஸ் பொறுப்பதிகாரிக்கு உத்தரவிட்டுள்ளார்.(ம-10-ரி)

### கூட்டணி அலுவலகம் தீக்கிரை

கடந்த சனிக்கிழமை இரவு காரைதீவில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் அலுவலகம் ஒன்று இனந்தெரியாதோரால் தீயிட்டுக் கொளுத்தப்பட்டிருக்கின்றது. அத்துடன் மேலும் இரு அலுவலகங்கள் சேதமாக்கப்பட்டிருக்கின்றன.

தமிழர் விடுதலைக் கூட்டணியின வேட்பாளர் க.பத்மநாதனின் அலுவலகங்களே இவ்வாறு எரிக்கப்பட்டும் சேதமாக்கப்பட்டும் இருக்கின்றன.

இது தொடர்பாக அவர் சம்மாந்துறைப் பொலீஸில் முறைப்பாடு செய்துள்ளார். (ம-4)

### நகரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின்பு அந்த இளைஞர்களைக் கொண்டே சுவரொட்டிகள் யாவும் கிழிக்கப்பட்டன. இறுதியில் இளைஞர்கள் அனைவரும் எச்சரிக்கை செய்யப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

இதேவேளை - தேசியத் தலைவரின் பிறந்த தினத்தை முன்னிட்டு யாழ்பல்கலைக்கழகத்திலும் வேறுபல இடங்களிலும் இனிப்புப் பண்டங்களும் விநியோகிக்கப்பட்டன.(ம-4-10-ரி-27-117)

### கொழும்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடைக்கால நிர்வாக சபையை அமைப்பதன் மூலம் நாட்டைக் காட்டிக் கொடுக்க முயலுவோரை சிங்கள மக்கள் தோற்கடிக்க வேண்டும் என இந்தக் கூட்டத்தில் பேசிய பலரும் வற்புறுத்தினர். (உ)

### மூன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆகியவற்றின் விளக்கமாக அமைகிறது. அதனால் உலகம் முழுவதும் அந்த உரையை எதிர்பார்த்து ஆவலுடன் காத்திருக்கிறது.

புலிகள் இயக்கத்தை இலங்கை, இந்தியா, அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகளோடு இப்போது கனடாவும் பயங்கரவாத இயக்கம் என்று முத்திரைகுத்தித் தடைசெய்து விட்டது.

தமிழீழ மக்களின் விடுதலைக்கும் உரிமைக்குமாகப் போராடும் இயக்கத்தை உலக நாடுகள் பயங்கரவாத இயக்கம் என்று தப்பாகப் புரிந்துகொண்டு தடைசெய்தது எவ்வளவு அபத்தம் என்பதை பிரபாகரன் தனது உரையில் தெளிவுபடுத்துவார் என்று நம்பப்படுகின்றது.

'தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு அரசுடன் பேசர் நடத்த விடுதலைப் புலிகள் எப்போதும் தயார். ஆனால் தடை செய்யப்பட்ட இயக்கமாக ஒருபோதும் பேச்சுவார்த்தைக்கு போகமாட்டோம். தடை நீக்கப்பட்டால்தான் பேச்சுவார்த்தை நடக்கும் என்பதை பிரபாகரன் தனது உரையில் தெரிவிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கை அரசு அடக்குமுறைகள், இன ஒழிப்பு நடவடிக்கைகள் ஆகியவற்றில் ஈடுபட்டு வருவது குறித்து பிரபாகரன் இந்த உரையில் பலத்த கண்டனம் தெரிவிப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பேரினவாத சக்திகளின் கைப்பொம்மையாக இருந்து அரசு செயலாற்றுவது தமிழ் இனத்தின் எதிர்காலத்தைக் கேள்விக் குறியாக்கிவிடும் அதனால் அரசு தனது போக்கை மாற்றிகொள்ளவேண்டும். தவறினால் பாரதுரமான விளைவுகளை அரசு எதிர்நோக்க வேண்டி வரும் என்று அவர் அரசுக்கு எச்சரிக்கை விடுப்பார் என்றும் நம்பப்படுகின்றது.

பொதுத் தேர்தல் பற்றி பிரபாகரன் தனது உரையில் பெரிதாக எதனையும் குறிப்பிடும் சாத்தியம் இல்லை என்றும் எதிர்வு கூறப்படுகிறது. (உ)


## நன்றியுடன் வாழ்த்துகின்றோம்

**வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மன் ஆலய**

புனரமைப்பு திருப்பணிக்கும்

**யா/வேலணை கிழக்கு மகா வித்தியால**

புனரமைப்பு வேலைக்கும் நிதியுதவி அளித்தமைக்காக



மாண்புமிகு அமைச்சர்

**K.N.டக்ளஸ் தேவானந்தா**

அவர்களையும்

மக்கள் சேவையே மகேசன் சேவையென

உழைக்கும் வேலணை

பிரதேச சபை தலைவர்

**திரு.N.கருணாகரகுருமூர்த்தி**

J.P.U.M. அவர்களையும்



**நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.**

(94988)

வேலணை கிழக்கு மகா வித்தியாலய
பாடசாலைச் சமூகம்.
வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்.

# வடக்குக் கூட்டணி வசம் குண்டூஸ் நகரம் வீழ்ந்தது!

காபூல்,நவ.27

வடக்கு ஆப்கானிஸ்தானில் தலிபான்களின் கட்டுப்பாட்டிலிருந்த கடைசி நகரான குண்டூஸ் நேற்றுத் தமது பூரண கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டதாகக் கூட்டணித் தளபதி ஜெனரல் டாவூட்கான் தெரிவித்தார்.

நகரின் பிரதான பகுதிகள் வடக்குக் கூட்டணித் துருப்புகளின் கையில் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சுமார் ஆயிரம் தலிபான் போராளிகள் நகரைவிட்டு வெளியேறி சரணடைந்ததாகவும் -

மேலும் பலர் வடக்குக் கூட்டணியினரால் சிறைப்பிடிக்கப்பட்டதாகவும் -

அப்போது இடம்பெற்ற மோதலில் நூற்றுக்கணக்கான தலிபான்கள் உயிரிழந்ததாகவும் -

ஜெனரல் டாவூட்கான் கூறினார்.

குண்டூஸில் சிக்கியிருந்த தலிபான் படையினரில் வெளிநாட்டுப் போராளிகள் பலர் கடந்த சனிக்கிழமை இரவு அங்கிருந்து வெளியேற அனுமதிக்கப்பட்டதாக நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர். அவர்கள் பாகிஸ்தானியப் போராளிகளாக இருக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

குண்டூஸ் நகரின் பிரதான பகுதி தமது பிடிக்குள் உள்ளபோதும், சுற்றிலுமுள்ள மலைகளிலும், குகைகளுக்குள்ளும் மறைந்துள்ள தலிபான்கள் வடக்குக் கூட்டணிப் படையினர்மீது துப்பாக்கி மற்றும் சிறுரக மோட்டார்க் குண்டுத் தாக்குதலை நடத்தி வருகின்றனர்.

ஆப்கானிஸ்தானின் பெரும்பகுதியை இழந்துவிட்ட தலிபான்கள் கந்தகாரின் உட்பகுதி உட்பட சில இடங்களில் மட்டுமே தற்போது நிலைகொண்டுள்ளனர். (ஒ-ரி)



குண்டூஸிலிருந்து சரணடையச் செல்லும் தலிபான்களையும் மலைப்பகுதியிலிருந்து அவர்களைக் கண்காணிக்கும் வடக்குக் கூட்டணியினரையும் படத்தில் காணலாம்.

# தெற்காசியாவின் பிரபல பெண்களான பெனாஸிரும் சோனியாவும் முக்கியத்துவமான சந்திப்பு!

புதுடில்லி,நவ.27

தெற்காசியாவின் பிரபலமான இரு எதிர்க்கட்சித் தலைவர்களான இந்தியாவின் சோனியா காந்தியும், பாகிஸ்தானின் பெனாஸிர் பூட்டோவும் சந்தித்து உரையாடினர்.





இந்தியாவுக்கு 4 நாள்கள் விஜயம் மேற்கொண்டுள்ள பெனாஸிர் பூட்டோ, சோனியா காந்தியுடன் அரை மணித்தியாலம் பேச்சு நடத்தினார்.

தமது அரசியல் எதிர்காலத்துக்காக போராடிவரும் இரு பெண்மணிகளும் சந்தித்தது, இந்திராகாந்தி மற்றும் பூட்டோ சகாப்தத்தை நினைவுபடுத்துவதாக இந்திய காங்கிரஸ் கட்சி கூறியுள்ளது.

இந்தச் சந்திப்பு, எதிர்காலத்தில் தத்தமது நாடுகளில் இவர்கள் தலைமைப் பதவிகளைக் கைப்பற்றும்போது, இரு நாடுகளின் உறவுகளை வளர்க்க உதவும் என்றும் அக்கட்சி தெரிவித்தது.

இந்தியப் பிரதமர் வாஜ்பாய், அமைச்சர் அத்வானி ஆகியோரையும் பெனாஸிர் சந்தித்து உரையாடினார்.

எதிர்பார்த்ததைவிட இந்திய அரசு பெனாஸிருக்கு அமோக வரவேற்பை வழங்கியுள்ளதாகவும் -

இதன் மூலம் பாகிஸ்தானிய அதிபர் ஜெனரல் முஷாரப்புக்கு அடி கொடுத்திருப்பதாகவும் -

பிரதமர் அலுவலகப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

ஊழல் குற்றச்சாட்டில் பாகிஸ்தானிய நீதிமன்றத்தால் தண்டனை விதிக்கப்பட்டுள்ள பெனாஸிர் பூட்டோ, தாய்நாடு திரும்பினால் கைது செய்யப்படுவார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ)

# கந்தகாரைக் கைப்பற்ற அமெரிக்கா இறுதி முயற்சி

தலிபான்களின் வலுக்கோட்டையான கந்தகாரைக் கைப்பற்றும் நோக்கில் இறுதித் தாக்குதலை நடத்த அமெரிக்கா தயாராகி வருகிறது.

இதற்காக கந்தகாரின் அருகே அமெரிக்கா தலைமையிலான கூட்டுப் படை வீரர்கள் குவிக்கப்பட்டு வருகின்றனர்.

அமெரிக்கச் சிறப்புப் படையைச் சேர்ந்த சுமார் ஆயிரத்து ஐந்நூறு துருப்புகள், ஹெலிகள் மூலம் கந்தகாரின் வடபகுதியில் நேற்று அதிகாலை தரையிறக்கப்பட்டதாகவும் -

அமெரிக்க விமானப் படையின் கனரக ஹெலிகள் மூலம் டாங்கிகள், ஆயுதங்கள், வாகனங்கள் என்பவை அப்பகுதியில் இறக்கப்பட்டதாகவும் -

நேரில் கண்டவர்கள் கூறியதாக சுயாதீனச் செய்தி நிறுவனங்கள் தெரிவித்தன.

தலிபான் தலைவர் முல்லா முகமட் ஒமர் தங்கியிருப்பதாகக் கூறப்படும் கந்தகாரைக் கைப்பற்றுவதற்கு, அமெரிக்காவும், வடக்குக் கூட்டணிப் படைகளும் அதிக விலைகொடுக்க நேரிடும் என்று முன்னாள் முஜாஹிதீன் தளபதி ஹிக் மதியார் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-ரி)

# மஷார்-ஏ-ஷெரீபில் பிடிபட்ட தலிபான் கைதிகள் கிளர்ச்சி!

காபூல்,நவ.27

மஷார்-ஏ-ஷெரீப் நகரில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தலிபான் வீரர்கள் திடீர் கிளர்ச்சியில் ஈடுபட்டனர்.

வடக்குக் கூட்டணியினர் மஷார்-ஏ-ஷெரீப் நகரைப் கைப்பற்றிய போது, பிடிபட்ட தலிபான்கள் முகாமொன்றில் தடுத்துவைக்கப்பட்டிருந்ததாகவும் -

நேற்று முன்தினம் இரவு அங்கிருந்த தலிபான்கள் திடீர்க் கிளர்ச்சியில் இறங்கியதாகவும் -

தெரிவிக்கப்பட்டது.

முகாமில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த வடக்குக் கூட்டணிப் படையினரின் ஆயுதங்களைக் கைப்பற்றிய தலிபான்கள், தாக்குதல் நடத்தினர்.

பல மணித்தியாலங்களாகத் தொடரும் மோதலில் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் இறந்ததாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

தலிபான் கைதிகளின் கிளர்ச்சியை அடக்குவதற்காக மஷார்-ஏ-ஷெரீப் நகருக்கு அமெரிக்கப் படை அணி ஒன்று சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-ரி)

# இஸ்ரேலிய இராணுவம் சுட்டதில் பலஸ்தீனச் சிறுவன் உயிரிழப்பு!

## காஸாவிலும் தற்கொலைத் தாக்குதல்

பெத்தலகேம்,நவ.27

மேற்குக்கரை நகரான பெத்தலகேமில் பலஸ்தீனர்கள் நேற்றுமுன்தினம் நடத்திய ஆர்ப்பாட்ட ஊர்வலத்தின் மீது இஸ்ரேலியப் படைகள் சுட்டதில் 14வயதுப் பலஸ்தீனச் சிறுவன் ஒருவன் உயிரிழந்தான்.

கிபா ஒபெய்ட் என்ற அந்தச் சிறுவனும் வேறுசிலரும் தம்மீது மதுப் போத்தல்களை வீசித் தாக்கியதாகவும் -

அதனாலேயே தாம் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் -

இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்தது.

நேற்று காஸாவுக்கும் இஸ்ரேலுக்கும் இடைப்பட்ட 'எரேஜ்' எல்லைச் சோதனை நிலையத்தில் பலஸ்தீனத் தற்கொலைக் குண்டுதாரி நடத்திய தாக்குதலில் இரண்டு இஸ்ரேலியப் படையினர் படுகாயமடைந்தனர்.

தினமும் நூற்றுக்கணக்கான பலஸ்தீனத் தொழிலாளிகள் இஸ்ரேலுக்கு வேலைக்காகச் சென்று வரும் 'எரேஜ்' சோதனை நிலையத்தில் நடந்த இத்தாக்குதலுக்கு 'ஹமாஸ்' தீவிரவாத இயக்கம் பொறுப்பேற்றுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை 'ஹமாஸ்' தலைவர் ஒருவரை இஸ்ரேலியப் படைகள் கொன்றதற்குப் பதிலடியாகவே இத்தற்கொலைத் தாக்குதல் நடத்தப்பட்டதாகக் கருதப்படுகிறது.

இதற்கிடையில் இஸ்ரேலியர்களுக்கும் பலஸ்தீனர்களுக்கும் இடையே கடந்த 14 மாதங்களாக நடந்துவரும் வன்முறை மோதல்களை முடிவுக்குக் கொண்டுவந்து அமைதிப் பேச்சுக்களை மீண்டும் தொடங்கும் அமெரிக்க முயற்சியை முன்னெடுக்க, அமெரிக்கப் பிரதிநிதிகள் இருவர் நேற்று மேற்காசியா வந்தடைந்தனர்.

மேற்குக்கரைப் பகுதிகளில் தொடரும் வன்முறைகள் அமெரிக்கப் பிரதிநிதிகளின் முயற்சிகளைச் சீர்குலைக்கும் என்று கருதப்படுகிறது. (ஒ)



இஸ்ரேலிய இராணுவத்தினர் மீது கல்லெறிந்து தாக்கும் பலஸ்தீன இளைஞர்கள். அம்புக்குறி இட்டுக் காட்டப்பட்ட சிறுவனே துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டவராவார்.

# ஆப்கான் எதிர்காலம் பற்றிய 'பொன்' மாநாடு இன்று ஆரம்பம்

பொன்,நவ.27

ஆப்கானிஸ்தானின் எதிர்காலம் குறித்து ஆராய ஐ.நா. ஏற்பாடுசெய்த கூட்டம் ஜேர்மனியின் 'பொன்' நகரில் இன்று ஆரம்பமாகிறது.

ஆப்கானின் பிரதான இனக் குழுக்களான பஸ்தூன், குத்தூன், அஸாரா மற்றும் வடக்குக் கூட்டணி உட்பட மொத்தம் 21 பிரதிநிதிக் குழுக்கள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்கின்றன.

வடக்குக் கூட்டணிப் பிரதிநிதிக் குழுவுக்குத் தலைமையேற்று செல்லும் முன்னாள் அதிபர் பர்கானுதீன் ரபானி காபூலில் செய்தியாளர்களிடம் பேசுகையில், 'பொன்' மாநாட்டில் இன்னொரு ஆப்கான் அதிபராகத் தெரிவுசெய்யப்பட்டால் தாம் பதவிப் போட்டியிலிருந்து ஒதுங்கிக் கொள்வதாகத் தெரிவித்தார்.

ஆப்கானின் மிகப்பெரிய இனக் குழுவான பஸ்தூன்களின் தலைவர் ஹமீட் ஹிலானி, ஆப்கானிஸ்தானின் தற்போதைய பிரச்சினைக்கு இந்த ஒரே கூட்டத்தில் தீர்வுகாண முடியாது என்று கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது.

# நேபாளத்தில் அவசர காலநிலை?

நேபாளத்தில் கம்யூனிஸ அரசொன்றை ஏற்படுத்தப் போராடிவரும் மாவோயிஸத் தீவிரவாதிகள் தமது போராட்டத்தைத் தீவிரப்படுத்தியிருப்பதையடுத்து, அவசரகாலநிலையைப் பிரகடனப்படுத்த நேபாள அரசு தீர்மானித்துள்ளது.

4 மாதகால போர் நிறுத்தத்தை கடந்த வெள்ளிக்கிழமை முறித்துக் கொண்ட தீவிரவாதிகள், நடத்திய தாக்குதல்களில் இராணுவத்தினர், பொதுமக்கள் உட்பட நாற்பதிற்கும் மேற்பட்டோர் பலியாகினர்.

நாட்டின் கிழக்குப் பகுதி நகரான இடாகாரிபில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் பொதுமக்கள் மூவர் உயிரிழந்தனர்.

அதேதினத்தின பின்னிரவில் சலேரி நகரில் பொலீஸ் நிலையம் மற்றும் அரசு அலுவலகங்கள் மீது தீவிரவாதிகள் தாக்கினர். சலேரி விமான நிலையக் கட்டுப்பாட்டுக் கோபுரத்தையும் அவர்கள் முற்றாக அழித்தனர்.

இதுவரை நிகழ்ந்த மோதல்களில சுமார் 100 தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாக உள்துறை இணை அமைச்சர் தேவேந்திரராஜ் காடா தெரிவித்தார். (ஒ-6)

# ஆப்கானின் எதிர்காலத்தை சீர்குலைக்கும் குழு மோதல்

ஆப்கானிஸ்தானில் அதிகாரத்தில் இருந்த தலிபான்கள் விரட்டப்பட்டதால் அங்கு மக்கள் சுதந்திரமாகவும், மகிழ்ச்சியுடனும் வாழத் தொடங்கிவிட்டதாக மேற்குலக ஊடகங்கள் பிரசாரம் செய்யும் அதேசமயத்தில், ஆப்கானின் எதிர்காலம் குறித்து பலத்த ஐயங்கள் எழுப்பப்பட்டு வருகின்றன.

தலிபான்களை விரட்டி அதிகாரத்தைக் கைப்பற்றிய வேளையில் வடக்குக் கூட்டணியினரிடம் காணப்பட்ட ஒற்றுமையும், இணக்கப்பாடும், காபூலை கைப்பற்றிய பின்னர் காணாமற் போய்விட்டதே இந்தச் சந்தேகங்களுக்குக் காரணமாகும்.

வடக்குக் கூட்டணியில் பதவி ஆசை மற்றும் அதிகாரவெறி காரணமாக குழுச்சண்டைகளும், பிளவுகளும் பரவலாகத் தலைதூக்கியுள்ளன.

ஆப்கானின் எதிர்காலம் தொடர்பாக ஜேர்மனியின் ஆரம்பமாகும் பேச்சில் கலந்துகொள்வதற்கு எவரை அனுப்புவது என்பது பற்றி வடக்குக் கூட்டணியில் இடம்பெற்றுள்ள குழுக்களிடையே ஏகப்பட்ட சர்ச்சைகள். எந்தெந்தக் குழுக்களிடமிருந்து எத்தனை பேரை அனுப்பவேண்டும் என்பது முதல் பல விடயங்களில் பெரும் வாதப் பிரதிவாதங்கள் நடக்கின்றன.

வடக்குக் கூட்டணியின் இந்த நிலைவரம் போலவே, ஆப்கானின் இனத் தலைவர்கள் மத்தியிலும் அபிப்பிராயபேதங்கள் ஏற்பட்டுள்ளன.

குறிப்பாக பஸ்தூன், குஸ்தூஸ் இனத் தலைவர்கள் தத்தமது இனங்களின் ஆதிக்கத்தைக் கட்டியெழுப்புவதில் குறியாக உள்ளனர். இதில் அவர்கள் கடும் மூர்க்கத்தனத்தைக் காட்டி வருவதால், பிரச்சினையை இலகுவில் தீர்க்கமுடியும் என்ற நம்பிக்கை எவருக்குமில்லை.

இதைவிட, தத்தமது இன மக்களிடையே தங்களில் எவருக்கு செல்வாக்கு அதிகம் என்கின்ற பலப்பரீட்சையில் இனத் தலைவர்கள் இறங்கியிருப்பது மற்றொரு அவலம்.

தலிபான்கள் விட்டுச்சென்ற காபூல் உட்பட பல நகரங்களில் மக்கள் சகஜ வாழ்க்கைக்குத் திரும்பிக் கொண்டிருப்பதை தமது சாதனையாக வடக்குக் கூட்டணியும், அமெரிக்காவும் தனித்தனியே பிரலாபிக்கின்றன. தமது வீரர்களை ஆப்கான் மக்கள் நன்றியுணர்வுடனும், உற்சாகத்துடனும் வரவேற்பதாக இரண்டும் கூறி வருகின்றன.

ஆயினும், தலிபான்களை வெற்றி கொண்ட களிப்பில் வடக்குக் கூட்டணிப் படைகள் நடந்துகொள்ளும் முறைகள் குறித்து, ஐ.நா. உட்பட சர்வதேச அமைப்புகள் பலவும் இப்போதே கவலை தெரிவிக்க ஆரம்பித்துள்ளன.

சிறுபான்மை இனத்தவர் மற்றும் பெண்கள் ஆகியோரின் சமுதாய நலன்கள் குறித்து வடக்குக் கூட்டணி பாரபட்சமின்றி செயற்படுமா என்றும சந்தேகம் எழுந்துள்ளது.

வடக்குக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் பலர், முன்னர் தலிபான் படையில் இருந்தவர்கள் என்பதால், பெண்களின் உரிமைகள் தொடர்பாக பரந்த மனப்பான்மையுடன் அவர்கள் செயற்படுவார்களா என்ற கேள்வியும எழுப்பப்படுகிறது.

ஆப்கானிஸ்தானின் இன்றைய அரசியல் சூழ்நிலையில், பிரச்சினைகள் பல இருந்தாலும் - சந்தேகங்களும், அச்சங்களும் எழுந்தாலும் - பல்லின நிர்வாகம் ஒன்றை அங்கு கட்டியெழுப்புவதே உலக நாடுகளின இன்றைய அபிலாஷையாகும். (ஒ)

ஒருவருட ஒப்பந்த அடிப்படையில்

# யாழ். வலயத்திற்கு பகுதிநேர ஆங்கில ஆசிரியர் நியமனம்

யாழ். கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கு ஒரு வருடகால ஒப்பந்த அடிப்படையில் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படவுள்ளனர்.

போட்டிப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை ஆகியவற்றின் மூலம் நியமனம் செய்யப்படவுள்ள இவர்கள், அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதியன்று 18 வயதுக்குக் குறையாதவர்களாகவும் 59 வயதுக்கு மேற்படாதவர்களாகவும் இருக்கவேண்டும்.

ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சையில் ஆங்கில மொழி/இலக்கியம் ஆகியவற்றில் ஒரே அமர்வில் சித்தி அல்லது ஏதேனும் 3 பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியுடன் ஜி. சீ. ஈ. சாதாரண தரப் பரீட்சையில் ஆங்கில மொழியில் விசேட சித்தி (டி) அல்லது ஆங்கில இலக்கியத்தில் திறமைச் சித்தி (சி) இவை அனைத்தையும் கொண்டிராதவர்கள் ஆங்கில மொழி மூலம் தமது பாடசாலைக் கல்வியைக் கற்றிருத்தல் வேண்டும்.

விண்ணப்பம் செய்யவுள்ளோர் தமது விண்ணப்பப் படிவங்களை யாழ். கல்வி வலயத்தில் பெற்றுப் பூர்த்தி செய்து டிசெம்பர் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்பு அனுப்பி வைக்குமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ. மகாலிங்கம் தெரிவித்துள்ளார். (க-10-ரி)

## தொழிற்றிறன் கண்காட்சி

யாழ்ப்பாணம், நவ. 27

வட இந்து மகளிர் கல்லூரி முறைசாராக் கல்விப் பிரிவினர் நடத்தும் தொழிற்திறன் கண்காட்சி நாளை புதன்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 5.30 மணி வரை கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

வட இந்து மகளிர் கல்லூரி அதிபர் செல்வி அன்னபாக்கியம் கனகரட்ணம் தலைமையில் இடம்பெறும் இக்கண்காட்சியைப் பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்ளும் வடமராட்சி வலயம் முறைசாராக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சி. நந்தகுமார் சம்பிரதாய முறைப்படி திறந்துவைப்பார்.

கண்காட்சியில் கௌரவ விருந்தினராக வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனைத் தட்டெழுத்தாளர் த. கணேசமூர்த்தி கலந்துகொள்வார். (ம-15)

## கடனுதவி

சுன்னாகம், நவ. 27

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் நுண்கருத் திட்டத்தின் கீழ் சுன்னாகம் தெற்குப் பகுதியில் 16 பேருக்குக் கடன் வழங்கப்பட்டது.

மூன்றாம் கட்டமாக வழங்கப்படும் இக்கடன் திட்டத்தில் சிறு விவசாயிகள், கால்நடை வளர்ப்போர் ஆகியோர் கடன்களைப் பெற்றுக் கொண்டனர்.

சுன்னாகம் தெற்கு விவசாயிகள் சம்மேளனத்தால் முத்தமிழ் மன்ற மண்டபத்தில் நடத்தப்பட்ட நிகழ்வொன்றில் வலி. தெற்குப் பிரதேச செயலர் க. கேதீஸ்வரன், திட்டமிடல் பணிப்பாளர் க. தேவராஜன் ஆகியோர் கடன் பத்திரங்களை பயனாளிகளிடம் வழங்கினர். (ம-27)

## கப்பலிலிருந்து பொருள் இறக்கும் பணி மந்தகதியில்

யாழ்ப்பாணம், நவ. 27

வடமராட்சிக் கடலில் ஏற்பட்டுள்ள கடுமையான கடற் கொந்தளிப்பினால் கப்பலில் இருந்து பொருள்களை இறக்கும் பணி மந்தகதியிலேயே நடைபெறுகிறது.

நேற்று முன்தினம் ஏற்பட்ட கடற் கொந்தளிப்பினால் கப்பலில் இருந்து இறக்கப்பட்ட 40 பைக்கட்டுகளைக் கொண்ட ஒரு தொகுதி சிமெந்துப் பொதி அறுந்து விழுந்து கடலில் மூழ்கிப் போனது.

நேற்றுப் பெய்த மழையினாலும், கடற்கொந்தளிப்பினாலும் கப்பலில் இருந்து சிமெந்து இறக்கும் பணி மந்தகதியில் நடைபெற்றது.

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், நவ. 27

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தினால் நடத்தப்படவிருக்கும் கிரிக்கெட், உதைபந்தாட்டம், வலைப்பந்தாட்டம், கரப்பந்தாட்டம் ஆகிய போட்டிகள் தொடர்பான கலந்துரையாடல் நாளை புதன்கிழமை பிற்பகல் 4 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டிகளுக்குப் பொறுப்பானவர்களையும், கிளைச் செயலாளரையும் இதில் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

# ஆயுதங்களுடன் 3 இளைஞர்கள் மாங்கேணிப் பகுதியில் கைது

செங்கலடி, நவ. 27

மாங்கேணி காட்டுப் பிரதேசத்தில் மூன்று இளைஞர்கள் திங்கள் காலை படையினரால் கைது செய்யப்பட்டனர். உள்ளூரில் தயாரிக்கப்பட்ட இரு துப்பாக்கிகளும் இவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக படை வட்டாரங்கள் தெரிவித்தன.

மூன்று இளைஞர்களும் வாழைச்சேனைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். இவர்கள் இன்று செவ்வாய்க்கிழமை வாழச்சேனை நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே கறுவாக்கேணியைச் சேர்த பிரேமரத்னம் ராஜ்குமார் (வயது-22) என்ற இளைஞன் ஓட்டமாவடியில் வைத்து ஊர்காவல் படையினரால் ஞாயிறு காலை கைது செய்யப்பட்டார்.

இது தொடர்பாக இவ்விளைஞனின் உறவினர்கள், வாழைச்சேனை ஈ. பி. ஆர். எல்.எப் வரதரணிப் பொறுப்பாளரிடம் முறையிட்டுள்ளனர்.

# மரண அறிவித்தல்கள்

## M. P. வீரவாகு பொன்னுத்துரை

ஓட்டுமடத்தைப் பிறப்பிடமாகவும் உரும்பிராயை வசிப்பிடமாகவும் லண்டனை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட M P. வீரவாகு பொன்னுத்துரை (25-11-2001) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் முன்னாள் பிரபலவாத்தகர் குருநாகல் M. P. வீரவாகு அன்கோ உரிமையாளர் வீரவாகு—கனகம்மா தம்பதியினரின் சிரேஷ்ட மகனும், உரும்பிராய் பிரபலவர்த்தகர் தம்பையா தம்பதிகளின் மருமகனும், மங்கையற்கரசியின் (லண்டன்) அன்புக் கணவரும், M. P. V. விசுவரத்தினத்தின் (ஓட்டுமடம்) அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 29 - 11 - 2001 வியாழக்கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:—

M. P. V. விசுவரத்தினம்
(சகோதரர்)
13/3 சேச்லேன்.
ஓட்டுமடம்,
யாழ்ப்பாணம்.
T.P. 021 2885

Mrs. M. Ponnudurai,
8EO TTS CLOSE,
HANWELL W. 7,
LONDON. IPS.
T.P 0044-208-5783260

(94995)

## திருமதி செல்லத்துரை கமலம்மா

வேலணை கிழக்கு 2 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கந்தர்மடம் அன்னசத்திர ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லத்துரை கமலம்மா அவர்கள் நேற்று (26-11-2001) திங்கட்கிழமை மாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரையின் அன்பு மனைவியும் சந்திரசேகரம் (பிரதம எழுதுநர் கோவலைவரிப் பகுதி, யாழ். மாநகரசபை), திருமதி ந. இராசேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும் அராலியைச் சேர்ந்தவர்களான திருமதி செ புஸ்பராணி, க. நவரத்தினம் (நில அளவையாளர்) ஆகியோரின் அன்பு மாமியும் வேலணையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான திருமதி சோமசுந்தரம் இராசம்மா, திருமதி அமிர்தலிங்கம் அன்னம்மா, யாழ். அன்ன சத்திர ஒழுங்கையைச் சேர்ந்த காலஞ்சென்ற க. சிவபாதம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், ந. சுதர்சன் (பொறியியற் பீடம், மொறட்டுவ), ந. சுஜீவன் (யாழ். மருத்துவபீடம்) ந. சுகிந்தன் (யாழ். இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று (27 - 11 - 2001) செவ்வாய்க்கிழமை 2 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
செ. சந்திரசேகரம்
(மகன்)

20, அன்னசத்திர ஒழுங்கை,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

(94998)

## கந்தையா மாணிக்கம் (சின்னக்குட்டி)

(ஓய்வுபெற்ற கிளை முகாமையாளர்
பண்டத்தரிப்பு பரிஷ் பல நோ. கூ. சங்கம்)

மாதகலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா மாணிக்கம் (சின்னக்குட்டி) என்பவர் நேற்று 26 - 11 - 2001 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் அன்னலட்சுமியின் அன்புக் கணவரும், தேவபாலன் (கனடா), தேவமலர் (கனடா) ஆகியோரின் தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (26 - 11 - 2001) மாதகல் மயானத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மா. அன்னலட்சுமி
(மனைவி)

மாதகல் வடக்கு,
மாதகல்.

(94989)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்

கூட்டுறவு உதவி ஆணையாளராகப் பதவி உயர்வு பெற்ற

1. திருமதி யோ. செல்வரத்தினம்
2. திரு. பொ. சிவலிங்கம்

மாவட்ட கூட்டுறவு உத்தியோகத்தராகப் பதவி உயர்வு பெற்ற

1. திரு. நா. தவநாதன்
2. திரு. செ. திருச்செல்வம்
3. திரு. கு. குமாரகுலசிங்கம்

ஆகியோர்கள் கூட்டுறவுத் திணைக்களத்தில் அரிய சேவை செய்து பதவி உயர்வு பெற்றமையை பாராட்டி வாழ்த்துவதோடு—

இவர்கள் கூட்டுறவுத்துறையின் வளர்ச்சிக்கு உறுதுணையாக செயலாற்றியமைக்கு நன்றிகள் பலகோடி கூறுவதிலும் பெரும் மகிழ்ச்சியடைகின்றோம்.

தலைவர்,
பணிப்பாளர்கள், பணியாளர்கள்.
சுன்னாகம் பல நோ. கூ. சங்கம்,
சுன்னாகம்.
24-11-2001 (சி/9483)

யாழ்/மல்லாகம் மகா வித்தியாலயம்

# பாராட்டுகின்றோம்

## செல்வி நாகலிங்கம் ஜெகதீஸ்வரி

(B. A. Dip. in Ed.)

எமது பாடசாலையில் தமிழ் வளர்ச்சிக்காக
பதினாறு ஆண்டுகள் பணியாற்றி
25-11-2001 அன்று ஓய்வு பெறும் ஆசிரியை
அவர்களைப் பல்லாண்டு காலம் வாழ
மனமார வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், பெற்றோர்,
பழைய மாணவர்கள்.
(94987)

# துயர்பகிர்கின்றோம்

காரைநகர், கருங்காலியைப் பிறப்பிடமாகவும்,
நல்லூரடியை வசிப்பிடமாகவும் கொண்ட

## அம்பலவாணர் நவரத்தினம்

அவர்கள் நேற்று (26 - 11 - 2001) காலமானார்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொள்வதுடன், அவரின் ஆத்மா சாந்தியடையக் காரைநகர், கருங்காலி போசுட்டி முருகனை வேண்டுகின்றோம்.

உரிமையாளர், ஊழியர்கள்,
நண்பர்கள்.
கிருஷிகா ஆடையகம்.
69 'A', நவீன சந்தை உட்புறம்,
யாழ்ப்பாணம். (94996)



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை.
வெளிவாரிப் பதிவுகள்
பரீட்சைகள் அலகு.

# அறிவித்தல்

1996, 1997
வெளிவாரி
பட்டதாரி
மாணவர்கள்

மேற்படி மாணவர்கள் 98, 99 ஆம் ஆண்டு மாணவர்களின் பட்டச் சான்றிதழ்கள் வைபவத்தில் (30 - 11 - 2001) கலந்து கொள்ள விரும்புபவர்கள் வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகுடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகிறீர்கள்.

பதிவாளர்.
26-11-2001
(சி/19482)

# இன்று உதயனுக்கு அகவை 16

## பரிபூரண நல்லாசிகள்



யாழ்ப்பாண மக்களின் இன்பதுன்பங்களில் சம அளவு பங்கு கொள்ளும் பிரதான செய்தி ஊடகமாக விளங்கும் ஒரேயொரு நாளிதழ் 'உதயன்'. இன்று உதயனுக்குப் பிறந்த நாள். தனது தமிழ்ச் சேவை தொடங்கி 16 வருடங்களைப் பூர்த்திசெய்து 17ஆவது வயதில் காலடி எடுத்துவைக்கும் உதயனுக்கு நமது பரிபூரண நல்லாசிகளை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

இலங்கையில் நிகழும் பல்வேறுவகையான, பல்துறைசார்ந்த நிகழ்ச்சிகளை 'இன்ரநெற்' மூலம் வெளிநாடுகளிலும் பார்க்கக் கூடிய வகையில் வெளிவந்து அளப்பரிய சேவையாற்றும் 'உதயன்' பாராட்டப்பட வேண்டியவனே!

தமிழர்கள் எங்கெல்லாம் வாழ்கின்றார்களோ அங்கெல்லாம் 'உதயன்' சென்று அவர்களுக்கு உதவுகின்ற வகைதொகை சொல்லிலடங்காதது. ஒவ்வொருநாளும் உதயவேளையில் உதயனைப் பார்த்த பின்னர்தான் மறுவேலை என்னுமளவுக்கு மக்கள் மனதில் நீங்கா இடம்பிடித்துக் கொண்டுள்ள ஒரேயொரு தினசரி உதயனே! தமிழுக்காகத் தன்னையே அர்ப்பணித்து சமயம், அரசியல் என்று இன்னோரன்ன பல வகைகளிலும் ஈடிணையற்ற சேவை புரியும் அவனது புனிதப் பணிக்கு முன்னின்று அயராது இரவும் பகலும் உழைத்து தினமும் உதயமாக உதவிவரும் ஆசிரியர் மற்றும் உதவி ஆசிரியர், பணிபுரிகின்ற அத்தனை ஊழியர்களும் சகல சம்பத்துக்களுடனும் எல்லா நலன்களும் பெற்று சுகவாழ்வு வாழவேண்டு மென நல்லைக் குருமணியின் பாதம் பணிந்து, உளமாரப் பிரார்த்தித்து நல்லாசிகளை மனப்பூர்வமான வாழ்த்துக்களுடன் வழங்குகின்றோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்.**

*(இரண்டாவது குருமஹா சந்நிதானம்,*

*நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனம்)*

## உதயனின் அரியசேவை நீடித்து நிலைக்கட்டும்



யாழ்நகரில் தற்கால புதினத் தாள்களில் முதன்மை பெற்று விளங்கும் 'உதயன்' பத்திரிகை, தனது 16ஆவது ஆண்டு அகவையை நிறைவுசெய்யும் இத்தருணத்தில் இத்தகவல் ஊடகம் யாழ். மக்களுக்கும், பரந்து வாழும் தமிழ் மக்களுக்கும் ஆற்றிவரும் சேவை அளப்பெரியது. தனது செய்திகள் மூலமாகவும், துணிவான ஆசிரிய கருத்துக்கள் மூலமாகவும், நடுநிலைமை நிற்கும் விமர்சனங்கள் மூலமாகவும், மக்கள் மத்தியில் தற்காலத்தில் ஆற்றிவரும் பணி பாராட்டப்பட வேண்டியது. பல இடர்கள் மத்தியிலும் 'உதயன்' பத்திரிகை ஆற்றும் சேவை நீடித்து நிலைக்க இறையருள் வேண்டுகிறேன்.

**இ.ம.தோமஸ் சவுந்தரநாயகம்** *(யாழ்.ஆயர்)*

## சமுதாய விழிப்புக்கு வழிகாட்டும் பத்திரிகை

'உதயன்' பத்திரிகையின் ஆண்டு விழாவை முன்னிட்டு ஆசிகூற வேண்டிய கடமை எமக்குண்டு.



எமது தமிழ் மண்ணை எண்ணங்களால் மலர்விக்கின்ற சக்தி 'உதயன்' இதழுக்குண்டு. காலைக் கடனும், கடவுள் வழிபாடும் முடிந்தவுடன் நாம் அனைவரும் கையில் எடுப்பது 'உதயன்' செய்தித் தாளையே. இதில் வரும் செய்திகள் பலதரப்பட்டன. இவை அனைத்தும் நாம் அன்றாடம் அறிய வேண்டியவை. நாட்டு நடப்புகள், மறைந்தார் மாண்புகள், சமூகத்தால் வாழ்த்துப் பெறுவோர் விவரங்கள், விகடகவியின் கவிதைத் துணுக்குகள், சமுதாயத்தை விழிப்படையச் செய்கின்றன. ஆகவே 'உதயன்' செய்தித் தாளுக்கு நல்ல வரவேற்பு நம்மத்தியில் ஏற்படுகிறது.

மேலும் மேலும் நல்லதைச் சொல்லி, சமூக உறவை ஏற்படுத்தி, கற்றவரால் போற்றப்பட்டு, 'உதயன்' செய்தித்தாள மிளிரவேண்டும் என்று திருவருளைப் பிரார்த்தித்து அமைகிறேன்.

**கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி**

*(தலைவர், தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்)*

## உற்சாகமும் துணிவும் தரும் உதயனின் பணி போற்றத்தக்கது



'உதயன்' பத்திரிகை 16 வருட சேவையைப் பூர்த்தி செய்துவிட்டது என்று அறிந்து பெருமிதம் அடைகின்றேன். 'உதயன்' பத்திரிகையின் துணிவு என்னைப் பெரிதும் கவர்ந்தது. நமது பிரதேசத்தில் நடைபெறும் பல விஷயங்களை தகுந்த ஆதாரங்களுடன் உலகிற்கு அறிவித்தது. இதனால் 'உதயன்', ஈழம்வாழ் தமிழ் மக்களின் வாழ்வில் ஒரு முக்கிய இடத்தைப் பெற்றுவிட்டது. இன்று இலங்கைத் தமிழர்களை பலர் பல கோணங்களில் இருந்து திட்டுகின்றனர். "ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோயில் ஆண்டி" என்பது பழமொழி. இத்தகைய சூழலில் நமக்கு உற்சாகமும் துணிவும் தருவது 'உதயன்' பத்திரிகைதான். உதயனின் நடு நிலைமை, எழுத்து வன்மை, பண்பாடு என்பன போற்றத் தக்கன.

உதயனை மனமார வாழ்த்துகின்றேன்.

**பேராயர் எஸ்.ஜெபநேசன்,**

*(தென்னிந்தியத் திருச்சபை)*

## மக்கள் பத்திரிகையாகவே மிளிரும்

**பேரன்புசால் வாசகப் பெருமக்களே!**

உங்கள் அபிமானத்துக்கும் பெருமதிப்புக்கும் உரிய உதயனுக்கு இன்று பதினாறாவது அகவை நிறைவெய்துகின்றது.

வாசகர்களாகிய உங்கள் இதயக் கமலங்களில் நீக்கமற நிறைந்திருக்கும் அவன், தனது கட்டிளமைப் பருவத்தின் கச்சிதவயதை எட்டியுள்ளான். அது கண்டு நீங்கள் பேருவகையும் பெரு மகிழ்ச்சியும் கொள்வது எம்மை இறும்பூதெய்தச் செய்கிறது.

உதயன் உதித்தவேளை தொட்டே, அவன் பல இன்னல்களையும் - சவால்களையும் - வசதியின்மைகளையும் - சொல்லொணா நெருக்கடிகளையும் - நெருக்குதல்களையும் எதிர்கொள்ள நேர்ந்தது. எனினும் அவன் மக்கள் சேவை என்ற தனது உயர் இலக்கை அடைவதில் - உன்னத பணியைச் செய்வதில் - பற்றுறுதியுடனும் தன்னம்பிக்கையுடனும் தற்துணிவுடனும் தனித்துவத்துடனும் அயர்வோ, சலிப்போ இன்றி உழைத்ததை நீங்கள் நன்கு அறிவீர்கள்.

உதயனின் சேவை, சிறப்புறு பத்திரிகைக்குரிய நற்பண்புகளுடனும் ஒழுக்க நெறிகளுடனும் பக்கச்சார்பில்லாது நடுவுநிலைமை நின்று மக்களின் நலன் நாடி அமைந்தது. அது கண்டு நீங்கள் நல்கிய உளமென்றிய ஆதரவும் உணர்வு நிறைந்த அபிமானமும் சத்தான - உரமான - உணர்வுகளாகி அவனை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக ஓங்கி வளரச் செய்தன - வளர்த்து உயர்த்தின.

அவனது வளர்ச்சிக்கும் வலிமைக்கும் வளத்துக்கும் உறுதி குன்றா உழைப்புக்கும் நீங்களே பலமும் பக்கத்துணையும் ஆகுவீர்கள். அவனது இன்றைய உயர்வுக்கும் உன்னத பணிக்கும் அயராத உழைப்புக்கும் பெருமைக்கும் ஈடில்லாத சாதனைகளுக்கும் விளைநிலமாக விளங்கும் உங்களுக்கு எமது நெஞ்சம் கனிந்த பெருநன்றிகள்.

ஈழத்தமிழ் மக்களின் உரிமைகளுக்காக, சுதந்திர வாழ்வுக்காக, அவர்களின் சமூக, பொருளாதார மேன்மைக்காக மற்றும் சமய, கலை, பண்பாட்டு எழுச்சிக்காக அவர்தம் வாழ்வாதார மேம்பாட்டுக்காக துணிச்சலுடனும் நேர்மையுடனும் நீதியுடனும் நெறி பிறழாது தளர்வின்றி ஓங்கி ஒலித்து வருபவன் உதயன்.

போர்ச்சூழல் நிலவும் யாழ்ப்பாணத்தில் பல நேரடி நெருக்குதல்களுக்கும், புலப்படாத பெரும் அழுத்தங்களுக்கும் மத்தியிலும் நாளேடு ஒன்றை தொடர்ச்சியாகவும் நேர்வழி நின்றும் எவ்வாறு வெளிக்கொணர்கிறீர்கள் என்று வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் பலரும் ஆச்சரியம் தெரிவிக்கும் - கேள்வி எழுப்பும் - அளவுக்கு உதயனின் பணி பெருமைக்குரிய நிலையைச் சாதித்தது.

எனினும், அவனது நேர்வழி, நீதிநிலை கண்டு பொறாமையும் காழ்ப்புணர்ச்சியும் கொண்ட தீயசக்திகள் சில, உதயனுக்கு ஊறுவிளைவிக்க முனைந்த போதெல்லாம், நாம் என்றும் ஏற்றிப் போற்றும் பேரருட்சக்தி தர்மத்தை நிலைநாட்டி, அவனுக்கு உறுதுணையாக நின்று நலம் பாலித்தது.

உண்மைகளையும், நீதி நியாயங்களையும், நல்வழி காட்டுதல்களையும் சமூகத்துக்கு எடுத்துக்காட்டும் - எழுத்தில் விளக்கும் - தனது தர்மப் பணியை - உன்னத பணியை - மக்கள் சேவையை உதயன் தொடர்ந்தும் ஆற்றுவான். அவன் என்றும் மக்கள் பத்திரிகையாகவே விளங்குவான் - வளர்வான் - வாழ்வான்.

அதற்கான பெரும் சக்தியையும் ஆற்றலையும் நல்க முருகப் பெருமானின் பேரருளை இறைஞ்சுகிறேன். வாசக நேயர்களின் நல்லாசிகளும் நல்லாதரவும் என்றும் குன்றாது ஒளிர்ந்து பெருகுவதாகுக.

எனது நெஞ்சமும் நினைவும் என்றும் இனிய உதயன் வாசகர்களாகிய உங்களுடனேயே.

எல்லோருக்கும் நலமும் வளமும் நிம்மதியும் பெருகட்டும்!

*சுவிட்ஸர்லாந்து.*
*27-11-2001*

**ம.வ.கானமயில்நாதன்.**
ஸ்தாபக ஆசிரியரும்,
பிரதம ஆசிரியரும்

## உதய வேளையில் உங்களுடன் .....

**அன்புசால் பெருமக்களே!**

**வணக்கமும் நல்வாழ்த்துக்களும்.**

உங்கள் கைகளில் தவழ்பவன் உதயன். அவன் இன்று காலை உதித்தெழுந்தவன். புதினம் சொல்லவரும் புதியவன். ஆம் உங்கள் எல்லோருக்கும் புதியவன். ஆயினும் உங்கள் பால் அன்பு கொண்டவன். தமிழ் மக்களாகிய தங்களுக்குப் பணி செய்வதற்கென்றே யாழ்ப்பாண உந்தியில் உதித்தவன். உங்கள் நல்வாழ்வும் இன்பமும்தான் அவனது நீண்ட நெடு நோக்கும் இலட்சியமும்.

அரசியல், பொருளாதாரச் சுதந்திரம் மலரவேண்டும். சமூக சமத்துவமும் சகோதரத்துவமும் பூத்துக் குலுங்கவேண்டும். ஈழம் வாழ் தமிழ் மக்கள் உலகின் ஏனைய பகுதி மக்களுக்கு இணையாக உயரவேண்டும். அதற்கேற்ற அபிவிருத்தியும் உழைப்பும் இந்தப் பூமியில் செறிந்து பரவவேண்டும்.

எங்களிடமுள்ள கல்வி, மனித சக்தி முதலாம் பல்துறை ஆற்றல்களையும் ஒருமுகப்படுத்த வேண்டும். சொந்த மண்ணின் வளங்களைக் கண்டறிந்து அவற்றைத் தக்கவாறு பயன்படுத்தவேண்டும். எமது வருங்கால சந்ததிச் செல்வங்கள் வேலை வாய்ப்புக்கும் ஜீவனத்துக்கும் கொழும்பையும் பிற நாட்டுத் தலைநகரங்களையும் நாடாதிருக்கச் செய்யவேண்டும். தமிழர் தமது பிறந்த மண்ணில் சகல உரிமைகளுடனும் வசதிகளுடனும் முதலாம்தர பிரஜைகளாக வாழ வேண்டும்.

**27-11-1985 அன்று மலர்ந்த உதயனின் முதல் இதழில் பிரசுர முகாமைப் பீடத்தினரால் வெளியிடப் பட்ட செய்தி.**

தம்மைத் தாமே ஆண்டு தமது பணிகளை தாமே நிர்வகித்து அன்னை மண்ணின் வளம் காணுதல் வேண்டும்.

இதுவே உதயனின் ஆசையும் அபிலாஷையும். தமிழ்ப்பெருமக்கள் இதனை ஈட்டுவதற்காக உதயன் தன்னை அர்ப்பணம் செய்வான். அந்த அர்ப்பணமே அவனது உதயநாள் சங்கற்பம்.

ஈழத்தமிழர் வாழ்வில் இருள் கவிழ்ந்துள்ளது. அந்த இருள் நீங்கி ஒளி பரவவேண்டும். பூவுலகில் இருள் நீக்கி ஒளி தருபவன் உதயன். அதேபோல், தமிழர்வாழ்வில் ஒளிபரவி பிரகாசிக்க இந்த உதயன் பல்லாற்றானும் உழைப்பான்.

அநீதியின் தலையில் எழுத்தடி கொடுக்கவும், அக்கிரமத்திற்கெதிராக ஆர்த்தெழவும், கருத்தைத் திரட்டி வழிப்படுத்தவும், ஒடுக்கப்படுவோர்க்காகக் குரல்கொடுக்கவும் அவன் ஒருபோதும் பின்நிற்கப்போவதில்லை.

போலி வேடம் போட அவனுக்குத் தெரியாது. உள்ளதை உள்ளவாறே கூறி உண்மையை நிலைநாட்ட அவன் உழைப்பான்.

'மக்கள் சேவை மகேசன் சேவை' என்பதை அவன் அறிவான்.

பத்திரிகைக்கு உள்ள மகா சக்தியை உணர்ந்தவன். அதனை நேர் வழியில் ஒழுங்குடனும், கட்டுப்பாட்டுடனும் ஆற்றுப்படுத்தவேண்டியதன் அவசியமும் அவனுக்குப் புரியும். தமிழ்மக்கள் சகலரும் அவனது தோழர்கள். எதிரிகள் எவரையும் அவன் தேடிக்கொள்ள விரும்பவில்லை. நடு நிலைமை அவன் நல்வழியாக இருக்கும்.

உதயன் உன்னி எழுந்து உயர்ந்து வளர்வதற்கு உங்கள் எல்லா வித நல் ஆதரவையும் நாடிநிற்கிறோம்.

உதயனுக்கு உங்கள் இதயக் கமலங்களில் இடம் தாருங்கள்.

உதயன் பால் தமிழர் உள்ளம் எல்லாம் பொங்குக. தமிழ் மண் எங்கும் மங்களம் தங்குக – என்று இறையருளை இறைஞ்சுகின்றோம்.

– *பிரசுர முகாமைப் பீடம்.*

# சமர்ப்பணம்

**உதயனின் முதலாவது ஆசிரிய தலையங்கம்**

மக்கள் சக்தி மகா சக்தி. அந்த மகாசக்திக்கு ஆற்றலும் அடித்தளமுமாக அமைவது எழுத்து. மக்கள் தம் சிந்தனையைப் பிரதிபலிப்பதும் எழுத்தே.

எழுத்தை - சிந்தனையை அரங்கேற்றும் மேடைகளில் முதன்மையானது பத்திரிகை. அதன் பேராற்றல் மகத்தானது.

பத்திரிகை மக்கள் பணிசெய்யும் மாற்சிமை மிக்கத் தொண்டன். ஜனநாயகத்தின் பாதுகாவலன். மக்கள் நாயகர்களை நேர்வழிப்படுத்தும் மதியுகம் மிக்க நல்ல அமைச்சன். மக்களுக்கும் அரசினருக்கும் இடையில் தொடர்பு உண்டாக்கும் விசுவாசத் தூதன். மக்கள் இன்னல்களைத் துடைக்க தன்னை அர்ப்பணிக்கும் கர்மவீரன். அநீதிகளைப் பேனாவால் கொண்டு அரிந்து எறியும் தர்மவீரன். பின்வரப் போவதை முன்னரே கூறி எச்சரிக்கை செய்யும் தீர்க்கதரிசி. பத்திரிகையின் பணியும் பொறுப்பும் பன்முகமானது. அதற்கென ஒரு தர்மமுண்டு; பல நெறிகளும் உள்ளன.

உதயன் தனக்குள்ள பணிகளைத் தப்பாது செய்வான். தனக்குரிய பொறுப்புகளை உணர்ந்து செயற்படுவான். வாசகர்கள்தான் அவனின் அதிபதி. தமக்கு இழைக்கப்படும் அநீதிகளையும் கொடுமைகளையும் களைந்தெறிய மக்களுக்குக் கைகொடுப்பான் உதயன். அவர் படும் இன்னல்களையும், துயரங்களையும் துடைப்பதற்கு பக்கபலமாக இருப்பான்.

உதயனின் உயிர்மூச்சு உண்மை. உண்மையை - உள்ளதைச் சொல்வதற்கு அஞ்சாதிருப்பது அவனது அறநெறி. நடுநிலைமை அவனின் நேர்வழி. பத்திரிகாதர்மம் அவனது ஆன்ம நேயம்.

அமிழ்தினும் இனிய அருந்தமிழ், இன்றுள்ள நிலைதாண்டி மேலோங்க வேண்டும். எமது மண் அன்னைக்கு ஆபத்துவராது பாதுகாத்து அவளைச் சீராட்டிப் பாராட்ட வேண்டும். அவள் மடியில் உள்ள வளங்களைப் பெருக்கித் தமிழ்மக்கள் நல்வாழ்வு காணவேண்டும். அழிந்தொழியும் மோசமான நிலைக்குத் தள்ளப்பட்ட ஈழத்தமிழரின் கலை, கலாசாரங்களைப் பேணிப் பாதுகாத்து மெருகூட்ட வேண்டும். எல்லாத் துறைகளிலும் புதுமைகள் புரியும் இதய வேட்கை தமிழ் மக்களுக்கு ஏற்படவேண்டும்.

இதுவே உதயனின் பெருவிருப்பம். இதனை மக்கள் அடைவதற்கு உதயன் என்றென்றும் பக்கத் தூணாய் நிமிர்ந்து துணைநிற்பான.

வாசகர்களின் கருத்துக்களை - நல்ல கருத்துக் கருவூலங்களை அரங்கேற்ற வசதிசெய்து தரவும் உதயன் பின்நிற்க மாட்டான்.

நாளின் நாயகனாக இருந்து அன்றாட உலக, உள்நாட்டு, மாநில, மாவட்ட, உள்ளூர்ச்செய்திகளை வாசர்களுக்குத் தருவதே உதயனின் பெரும் கடமை. அந்தக் கடமையைக் கண்ணியத்துடனும் கட்டுப்பாட்டுடனும் அவன் ஆற்றுவான் எனப் பிரதிக்ஞை செய்து இன்று படைக்கிறோம். வாசகர் இதயக் கமலங்களின் காதலனாக - நாயகனாக உதயன் திகழ தமிழ்க் கடவுள் முருகன் பாதத்தில் வைத்துத் துதித்து உங்களின் முன் சமர்ப்பணம் செய்கின்றோம்.

*வணக்கம்*

- ஆசிரியர்.

# கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் இரசாயனவியல் ஆசிரியையும் எமது வகுப்பு ஆசிரியையுமான

செல்வி

## சாதனா சிவலிங்கம்


அவர்களின் திடீர் மறைவைக் கேட்டு நாம் அதிர்ச்சி அடைந்தோம். அவரை இழந்து துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அமரருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குவதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

2001 கணித, விஞ்ஞானப் பிரிவு மாணவிகள்,
யா/இராமநாதன் கல்லூரி.

(94983)

# 31 ஆம் நாள் நீங்காத நினைவலைகள்

மலர்வு 12 - 03 - 1957



உதிர்வு 28 - 10 - 2001

*எமது குடும்பத் தலைவர்*

## அமரர் சுந்தரம் தில்லைஅம்பலம்

மாதமோ ஒன்றாயிடினும் மனங்கள் உமை மறந்திடுமோ?
விட்டகலமாட்டாது விம்முகிறது எம் நெஞ்சம்!
பாசச் சுமையுடனே பறந்துசென்ற விந்தை என்ன?
நித்தம் உம் நினைவாய் நீர் வழிய நிற்கின்றோம்!
வந்துமை ஆட்கொண்ட நோயின் கொடுமைதான் என்ன?
கூடி நாம் வாழ்வோம் என்று கணமும் நினைத்திருக்க
பாதிவழி தனியே எம்மைப் பரிதவிக்க விட்டதென்ன?
அப்பா! உம் முகத்தை நாம் இனிக் கனவிலேதான் காண்போமா!
நித்திய வாழ்வில் நீர் நீடிய இன்பம் பெறுவீர்!
*ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.*

பிரிவால் துயருறும்:
தங்கமலர்(மனைவி),
லுக்சன்(மகன்) மற்றும் உறவினர்கள்.

*30, குகன் வீதி,*
*அரியாலை.*

(94973)

# 'வணிக அறிவொளி' வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம்,நவ.27

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி வணிக மாணவ மன்றத்தின் "வணிக அறிவொளி" சஞ்சிகை வெளியீட்டு விழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு தொழில்நுட்பக் கல்லூரி சரஸ்வதி மண்டபத்தில் தலைவர் ம.கவிதா தலைமையில் நடைபெறும்.

இவ்வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராக உயர் தொழில் நுட்ப நிறுவனப் பணிப்பாளர் த.இராஜரட்ணமும், சிறப்பு விருந்தினர்களாக தொழில்நுட்பக் கல்லூரியின் அதிபர் எஸ்.செந்தில்நாதன், உபஅதிபர் எம்.அலோசியஸ், வர்த்தகத்துறைப் பகுதித் தலைவர் ரி.ஜெயராஜா ஆகியோரும் கலந்து கொள்வர்.

நூலின் ஆய்வுரையை ஓய்வுபெற்ற தொழில்நுட்பக் கல்லூரிப் பணிப்பாளர் க.ஜெயரட்ணம் வழங்குவார்.

நூலின் முதற்பிரதியை தொழில்நுட்பக் கல்லூரி பயிற்சித் திணைக்களப் பணிப்பாளர் என்.யோகராஜன் பெற்றுக்கொள்வார்.

(க-ரி)

## படிவம்

தரம் IIஇல் உள்ள கிராம அலுவலர்களைத் தரம் I இற்கு உயர்த்துவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பப் படிவம் விற்பனையாகின்றது.

**நாயகபாலன் ஸ்ரோர்ஸ்**
மானிப்பாய். (94971)

## தேசிய கல்வியியற் கல்லூரி அனுமதிக்கான நேர்முகப் பரீட்சை

புதிய மாணவர்களை அனுமதிப்பதற்கான நேர்முகப் பரீட்சை முன்னர் அறிவிக்கப்பட்ட நவம்பர் 26,27,28,29,30 ஆம் திகதிக்குப் பதிலாக அதே ஒழுங்கில் முறையே நவம்பர் 28,29,30 மற்றும் டிசெம்பர் 01, 02ஆம் திகதிகளில் யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறும்.

பீடாதிபதி,
*யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.*
(C/19472)

# குதூகல ஆரம்பம் இன்று!

**லிபேர்டி சினிமா - அச்சுவேலி**


விஜய், மீனா மற்றும் பலர் நடித்த

## ஷாஜகான்

தினசரி காட்சிகள்: 10.30 - 2.30 (பழைய நேரம்)
மீண்டும் காட்சிகள் காண்பிக்கப்படுகின்றன என்பதை ரசிகப் பெருமக்களுக்கு மனமகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.
★ *லிபேர்டி தொலைத் தொடர்பகத்தில் பற்றறி சார்ஜ் எந்த நேரமும் செய்துகொடுக்கப்படும்.*

(94972)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



## திரு.வி.கணபதிப்பிள்ளை

(Sp.Trd.Tamil, S.L.P.S.2 II)

எமது பாடசாலையின் அதிபர் திரு.வி.கணபதிப்பிள்ளை அவர்கள் 2000.08.04 தொடக்கம் இலங்கை அதிபர் சேவையின் அதிபர் தரம் IIஇற்குப் பதவி உயர்வு பெற்றமையையிட்டு அவரை உளமாரப் பாராட்டுவதுடன், அவர் தனது சேவையில் மேன்மேலும் பல உயர்வுகள் பெற வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர்கள்,
யா/கரம்பகம் அ.த.க.பாடசாலை.
அதிபர், ஆசிரியர்கள்,
யா/கரணவாய் தாமோதர வித்தியாலயம்.

(94985)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வன்

## கெங்காதரக்குருக்கள் கமலேஸ்வரன்

*(புன்னாலைக்கட்டுவன்)*

2001ஆம் ஆண்டில் க.பொ.த. A/L பரீட்சையில் K.கமலேஸ்வரன் (கோணேஸ்வரா இந்துக் கல்லூரி) திருகோணமலை வர்த்தகப் பிரிவில் 3A அதிவிசேட சித்தியெய்தியதை இட்டு அதிபர், ஆசிரியர்கள் மற்றும் ரியூசன் ஆசிரியர்கள் உடனிருந்து ஊக்குவித்த சாமி சித்தப்பா, மாலா சித்தி ஆகியோருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

இவர் மேன்மேலும் கல்வியில் வளர்ச்சியுற்று, பல்கலைக்கழகம் சென்று பட்டங்கள் பெற எல்லாம்வல்ல விநாயகப் பெருமானையும் முத்துக்குமாரசுவாமியையும் வேண்டி வாழ்த்துபவர்கள்:-

அன்பான அப்பா, அம்மா, பெரியப்பா, பெரியம்மா, பேராதனையில் கல்வி கற்கும் ஆனந்த அண்ணா, கொழும்பில் உள்ள அக்கா குடும்பத்தினர், பாபு அண்ணா, அத்தை, கனடா பெரியப்பா குடும்பத்தினர், இந்தியா மாமா குடும்பத்தினர், மலேசியா மாமா குடும்பத்தினர், இந்தியா பெரியம்மா குடும்பத்தினர், ஆஸ்திரேலியா பெரிய அண்ணா குடும்பத்தினர், நண்பர்கள் அனைவரும் கல்வியில் சிறப்படைய வாழ்த்துகின்றார்கள்.

*ஈவினை,*
*புன்னாலைக்கட்டுவன்.*

- அப்பா கெங்காதரக்குருக்கள்,
அம்மா விஜயலக்ஷுமி,
தம்பி பாலேஸ்வரன்.

(94968)

# ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் யாழ்.மாவட்ட வேட்பாளர்

## ஞானசுந்தரம் ஆனந்தகுமார்



கொக்குவில் மண்ணின் மைந்தன்
கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு
பெருமை சேர்த்த தலைமகன்
தான் பிறந்த மண்ணிற்கும் -
தாய்த் தமிழ் மொழிக்கும் -
தமிழ் பேசும் மக்களுக்கும் -
சேவையாற்றவும் -
சிங்களப் பேரின வாதத்திற்கெதிராக
கிளர்ந்தெழவும் -
தமிழர் உரிமைக்காக
ஐ.நா.சபையில் குரலெழுப்ப
வழியமைக்கவும் -
ஞானசுந்தரம் ஆனந்தகுமாரை
ஒரு லட்சத்திற்குமதிகமான
வாக்குகளால் நாடாளுமன்றம் அனுப்பி வைப்போம்.
தேர்தல் வெற்றிபெற எமது ஆதரவை நல்குவதுடன்
அவரின் வெற்றிக்கு நல்வாழ்த்துக்கள்.

-கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர்.

(C/19473)

# நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்

## ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் ஆலயம்

பாரதி வீதி, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்

மேற்படி ஆலயப் புனரமைப்புக்காக மூன்று லட்சம் ரூபா நிதியினை உடன் தந்து உதவியமைக்காக,



மாண்புமிகு அமைச்சர்
**K.N.டக்ளஸ் தேவானந்தா**
அவர்களையும் -



ஈ.பி.டி.பியின் பிரதம அமைப்பாளர்
உயர்திரு.
**K.V.குகேந்திரன் (ஜெகன்)**
அவர்களையும் -



எமது நல்லூர் பிரதேச சபைத் தலைவரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற வேட்பாளருமாகிய
உயர்திரு.
**க.மணிபல்லவராஜன்**
(நிஷாந்தன்) அவர்களையும் -

நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் ஆலயம்,*
*கோண்டாவில்.*

- பரிபாலன சபையினர்.

(94977)

# சலசலப்புகளல்ல..... சாதனைகளே தேவை!



## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கு வணக்கம்!

சூழ்ந்துவரும் சோதனைகள்-சவால்களுக்கு முகங்கொடுத்து, நான்குபுறம் எதிர்ப்புக்கள் மத்தியிலும் யாருக்கும் பணியாமல் மக்களுக்குப் பணிசெய்து, இலக்கு நோக்கிப்பயணிக்கும் உங்கள் துணிவு கண்டு பிரமிக்கின்றோம்! வாழ்த்துக்கள்!.... 95 இல் சூரியக்கதிர் நடவடிக்கையால் சுட்டெரிக்கப்பட்டு, சூனியப்பிரதேசமாய் கிடந்தது எங்கள் யாழ்மண்! வெள்ளை வான்கள் ஓடித்திரிந்தன. எங்களிற் பலர் தொலைந்து போயினர். வீடுபூட்டி இருளில் இருந்தோம்! வீதிக்குவர அஞ்சி நின்றோம்! உங்கள் தோழர்களோடு நீங்கள் வந்து ஸ்ரீதர் திரையரங்கை தூசிதட்டித்துடைக்கும்வரை பேசக்கூட எமக்குத் துணிவுவரவில்லை. நீங்கள் சந்திரன்! நாங்கள் அல்லிகள்! ஆம்..... உங்களைக்கண்டுதான் எங்கள் முகங்கள் மலர்ந்தன.

காணாமற்போனவரைக் கண்டுபிடிக்க சங்கம் அமைத்தீர்கள்; எங்களுக்குப் போராடும் துணிவைக கொடுத்தீர்கள். வேறெந்த மாவட்டத்திலும் யாருமே இதைச்செய்ததில்லை. மனிதஉரிமை மீறல்களைத் தடுத்தீர்கள்; அதை அம்பலப்படுத்தினீர்கள். அரசியல் நடத்த வந்தவர்களோடு அந்தச்சங்கம் அள்ளுப்பட்டுப்போனது வேறுகதை. மிருசுவில் படுகொலைக்கும், அல்லாரை பாலியல் வல்லுறவுக்கும் அரசியல்வாதிகள் கண்டனம் கிளப்பினர். நீங்கள் மட்டுந்தான் அவற்றுக்கு சாட்சிசொல்லும் துணிவை தமிழ்க்குடிமகனுக்குக் கொடுத்தீர்கள்; அவனுக்குப் பாதுகாப்பளித்தீர்கள்.

தென்னிலங்கை மாணவர்கள் கம்பியூட்டரைத்தொட்டு விளையாட, எங்கள் மாணவர்கள் என்ன பெருமூச்சு விடுவதா?.... கம்பியூட்டரை இறக்கித்தந்தீர்கள். உயர்தொழில்நுட்பக் கல்லூரியும், தகவல்தொழில்நுட்பப் பூங்காவும் அமைத்தீர்கள். வெட்டுப்புள்ளியைக் குறைத்து, மாணவர்களை பல்கலைக்கழகம் புகுத்தினீர்கள்! கிழக்கிலும் வன்னியிலும் நடப்பதுபோல் இங்கும் வரியும், கப்பமும், ஆள்கடத்தலும், பணயமும் நடக்குமோ என்று ஏங்கினோம். அதையும் நடக்காது தடுத்தீர்கள்.

எமது 50 ஆண்டு அரசியல் வரலாற்றில் எம்.பி மாரின் சட்டைப்பையிலிருந்து ஒரு சதமேனும் தவறிக்கூட எங்கள் கிராமங்களில் விழுந்ததில்லை. முதற்றடவையாக நீங்கள்தான் வாசிகசாலை, கோயில் குளங்கள் என்று புனரமைக்க, புதிதாக அமைக்க அள்ளித்தருகின்றீர்கள். கிராமங்களை சிறு சிறு நகரங்களாக்கி வருகின்றீர்கள்.

உங்கள் ஆளுமையால், அரசுடன் கொண்ட உறவினால் ஆளுங்கட்சி அமைப்பாளரையே முடக்கி வைத்தீர்கள். ஆட்சி மாறினாலும் ஊழல்பேர்வழியான ஐ.தே.க. அமைப்பாளரையும் முடக்கி வைப்பீர்கள் என்ற நம்பிக்கை எமக்குண்டு. அரசோடு உறவு கொள்வது பிழையானது அல்ல. தமிழ் மக்களின் கட்சிசார்பாகத் தனித்துவத்துடனேயே அந்த உறவு இருக்கவேண்டும் என்று நாம் பிரியப்படுகின்றோம்!.

ஈ.பி.டி.பி. மட்டுந்தான் சமவுரிமைக்கு அப்பால் சென்று ஈழமாநிலத்திற்கு விசேட அதிகாரங்களைக் கோரிநிற்கிறது. அதைக்கூட, திட்டமிட்டு வரையறுத்துக்கொள்ளாமலே ஏனைய கட்சிகள் உள்ளன. அம்பாறையை விட்டுக்கொடுப்பதற்கு ஒப்புதல் வழங்கிய ஏனைய கட்சிகளோடு எமக்கு அரசியல் நடைமுறை ரீதியில் உடன்பாடு கிடையாது.

திருமலை மண்ணிலே திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கண்டு சினந்தெழுந்தீர்கள். எமது இனம் சிறுபான்மையாகிவிடக்கூடாது என்பதற்காக தமிழ்க்குடியேற்றங்களை அங்கு நிறுவுனீர்கள்; எல்லைக்காவலர்களாக நின்று திருமலை மண்ணைக் காத்தீர்கள். நீங்கள் நிவாரணம் பெற்றுத்தந்திராவிட்டால், எமதுமண் சோற்றுக்கும் வழியின்றிப்போயிருக்கும்; ஒரு சோமாலியா நாடாக பட்டினிச்சாவினால் நாங்கள் இறந்திருப்போம்.

- மேடையேறி தலைவர்களின் நெற்றியிலே வீணாகத்திலகமிட்ட தொண்டர்கள் குருதி சிந்தியது கூட்டணியின் காலம்!
- தோழர்களோடு தலைவனும் சேர்ந்து குருதி சிந்துவது உங்களின் காலம்!
- ஆடம்பரமாளிகையில் தலைவர்கள் குடியிருந்து, ஆடிக்கொரு தடவை மக்களிடம் வந்துபோவது கூட்டணியின் காலம்!
- மக்களுக்குச் சேவைசெய்ய தலைவனே மக்கள் மத்தியில் குடியிருப்பது உங்களின் காலம்!
- உரிமை உரிமை என்று மக்களை ஏமாற்றிப்பிழைப்பது கூட்டணியின் காலம்!
- உரிமை கிடைக்கும்வரை மக்களை நலியவிடமாட்டேன் என்று மக்களின் நாளாந்தப் பிரச்சினைக்கும் தீர்வு காண்பது உங்களின் காலம்!
- இலங்கை - இந்திய ஒப்பந்த காலத்தை இருண்ட யுகமாக்கியது கூட்டமைப்பில் உள்ளவர்கள் காலம்!
- யார் எதிரி என்று கருதப்பட்டானோ அவனுடனேயே பேரம்பேசி மக்களுக்கு ஒளி கொடுப்பது உங்களின் காலம்!
- தங்கியிருந்த அசோகா ஹோட்டலை வதை முகாமாக வைத்திருந்தது கூட்டமைப்பில் உள்ளவர்கள் காலம்!
- ஸ்ரீதர் திரையரங்கை சேவைக்கூடமாக வைத்திருப்பது உங்களின் காலம்!
- யாழ். மண்ணைவிட்டு வாலிபர்கள் கொழும்புக்குத் தப்பியோடியது கூட்டமைப்பில் உள்ளவர்கள் காலம்!
- இடம்பெயர்ந்தவர்கள் யாழ். மண்ணுக்குத் திரும்பி வருவது உங்களின் காலம்!
- சும்மா இருந்த கூட்டணித் தலைவர்களான ஆலாலையும், தருமரையும் சுட்டுக்கொன்றது கூட்டமைப்பில் உள்ளவர்கள் காலம்!
- சொற்போரைச் சொற்போரால் எதிர்கொள்வது உங்களின் காலம்!
- மாவட்ட சபைக்கு ஒப்புதல் வழங்கியது கூட்டணியின் காலம்!
- மாநிலத்திற்கு சுயாட்சி கோருவது உங்களின் காலம்!
- ஆம்! இது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா காலம்! ஈ.பி.டி.பியின் காலம்! மக்களுக்கு விடிவுகாலம்!


ஆகவேதான் மக்களாகிய நாங்கள் உங்களின் பின்னால் அணிவகுத்து நிற்கின்றோம்!

அமைச்சர் அவர்களே! உங்கள் கொள்கையும் நடைமுறையும் தொடரட்டும்! சலசலப்புகள் உரிமையைப் பெற்றுத்தராது. அரசியலுரிமைக்கு வெறும் அறிக்கைப்போராட்டம் ஒத்துவராது. உங்கள் பாதையில் உரிமை கிடைக்கும்! நிச்சயம் நம்புவோம்! குடிசன மதிப்பீடு நடந்திருந்தால் யாழ். மாவட்டத்தில் மூன்று ஆசனங்களுக்காகவே தேர்தல் நடந்திருக்கும். உங்கள் சாதுரியத்தால், ஆளுமையால் வடக்கு - கிழக்கு குடிசனமதிப்பீடு செல்லுபடியற்றது என்று ஜனாதிபதியினால் கூற வைத்தீர்கள். இதுவும் நீங்கள் பெற்றுத்தந்த ஒரு அரசியல் வெற்றிதான். யாழ். மண்ணில் ஒன்பது ஆசனங்களுக்காகத் தேர்தல் நடப்பது நீங்கள் தந்த கொடை! ஆகவே அந்த ஒன்பது ஆசனங்களையும் ஈ.பி.டி.பிக்கே ஈட்டிக்கொடுப்போம்! இறுதியாக ஒன்று! "தமிழ்மக்களைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்" ஆம்! இது தந்தை செல்வா அவர்கள் சொன்னது. தனது எதிர்கால அரசியல்வாதிகள் மீது நம்பிக்கை இழந்து, உங்களைத்தான் கடவுள் என்று கூறினாரோ என்று எண்ணத்தோன்றுகிறது.

**எனவே வீணைக்கே உங்கள் வாக்குகள் உரியதாகட்டும்!**

- யாழ்ப்பாண மண்ணில் வாழும் மக்கள்.

**ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி**
**(ஈ.பி.டி.பி.)**



X

# அரசியல் தீர்வு விவகாரம் குறித்து ஈ.பி.டி.பியின் நிலைப்பாடு என்ன?

## மக்களுக்கு விளக்கமளிக்கின்றது அக்கட்சி

யாழ்ப்பாணம்,நவ.27

அரசியல தீர்வு விவகாரம் குறித்து தமது அமைப்பின் நிலைப்பாட்டை மக்களுக்குத் தெளிவுபடுத்தி ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

"அபிவிருத்தியும் அரசியல் தீர்வும் சமகாலத்தில் முன்னெடுக்கப்பட வேண்டியவை" என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

மக்களைக் கைவிட்டுவிட்டு மறைந்திருந்த பலர் இப்போது தேர்தல் என்று அறிவிக்கப்பட்டவுடன் புற்றீசல் போல படையெடுத்துவந்து பொய்யும், புரட்டும நிறைந்த மயக்கக் கருத்துக்களால் மக்களை மறுபடி ஏமாற்ற முனைகிறார்கள்.

ஈ.பி.டி.பியினராகிய நாம், மக்களுடன் வாழ்ந்து மக்களின் சுக துக்கங்களில் தோள் கொடுத்து மக்களுக்காற்றிவரும் பணிகள் குறித்து மக்களின் மனதில் நிறைந்திருக்கும் நன்றியுணர்வைக் கொச்சைப்படுத்தி, அதை மழுங்கடிக்கும் நோக்கத்துடன் தந்திரமான உத்தி ஒன்றைக் கையாள விளைகிறார்கள்.

அவர்கள் 'எமக்குத் தேவை அபிவிருத்தியா, அரசியல் தீர்வா?' என்ற ஒரு செயற்கைத்தனமான கேள்வியை மக்களைக் குழப்பும் வகையில் திட்டமிட்டு முன்வைக்கிறார்கள்.

இது அப்பட்டமான ஏமாற்று வித்தையே என்பது வெளிப்படை. ஏனெனில் இங்கு இப்படியான ஒரு கேள்வி எழவே நியாயமில்லை.

ஏனெனில், ஈ.பி.டி.பியின் வழிமுறையானது அபிவிருத்தியும் அரசியல் தீர்வும் சமகாலத்தில் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதே. அதாவது தாகமும் பசியும் இரு வேறு தேவைகளாயினும் ஒரு மனிதனுக்கு இரண்டு தேவைகளுமே நிறைவேற்றப்பட வேண்டும்.

இங்கு பசியா, தாகமா என்ற கேள்வி எழ நியாயமில்லை என்பது போல், 'அபிவிருத்தியா? அரசியல் தீர்வா?' என்ற கேள்வி இங்கு எழுப்பப்பட நியாயமுமில்லை.

எமது வழிமுறைக்கும் மற்றைய சில தமிழ்க் கட்சிகள் தமது வழிமுறையாகக் கூறிக்கொள்ளும் வழிமுறைக்கும் இடையே ஒரு கேள்வியை எழுப்பவேண்டுமாக இருந்தால், அது "எமது தேவை அபிவிருத்தியும், அரசியல் தீர்வும் ஒரு சேர முன்னெடுக்கப்படுவதா, அபிவிருத்தியை விடுத்து அரசியல் தீர்வை மட்டுமே முன்னெடுக்க வேண்டும் என்பதா?" என்றே அக்கேள்வி அமைய முடியும்.

அவ்வாறன்றி, "அபிவிருத்தியா? அரசியல் தீர்வா?," என்றவாறு ஒரு கேள்வியை முன்வைப்பதானது வெறும் அபிவிருத்தியை மட்டுமே நோக்காகக் கொண்டவர்கள் நாம் என்ற கருத்தை ஏற்படுத்த முனையும கபட நாடகமே.

இந்த முயற்சிக்குப் பலியாகி விடாது உங்கள் அறிவுக் கண்களைத் திறந்து வைத்திருங்களென நாம் மக்களைக் கோரிக்கொண்டு எமது அரசியல் தீர்வு குறித்த பார்வையை இவ்விடத்தில் சுருக்கமாக - தெளிவுற - தெரிவிப்பது அவசியமெனக் கருதுகிறோம்.

"மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி; ஈழமாநிலமான, எக்காலமும் பிரிக்கப்பட முடியாத வடகுக் கிழக்கில் பூரண சுயாட்சி" - என்ற எமது அரசியல் இலக்கிற்கமைய நாம் இரண்டு வகையான அரசியல் தீர்வு முயற்சியில் செயற்பட்டு வருகிறோம். இதற்கான திட்டம் எம்மிடம் உள்ளதுடன் நாம் 19 பக்க அறிக்கை ஒன்றை ஏற்கனவே அரசுக்கு வழங்கியுமுள்ளோம்.ஆனால் இதனை ஈட்டுவதற்கு நாடாளுமன்றத்தில் எமக்கு அரசியல் பலம் இருப்பது அவசியமாகும்.

எந்தவொரு கட்சிக்கும் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை இல்லாத பட்சத்தில் அரசமைப்புச் சட்டத்தை மறுவரைவு செய்வது சாத்தியமில்லாத நிலையில் நாம் மூன்று கட்ட இடைக்காலத் தீர்வுத் திட்டமொன்றையும் முன்வைதுள்ளோம்.

அது முதற்கட்டம் - மகாண சபையை இயங்க வைப்பதாகும்.

இரண்டாம் கட்டம் - இதுவரை சகல கட்சிகளுக்குமிடையிலான பேச்சுகளில் இணக்கம் காணப்பட்ட சுமார் எழுபது சதவீதமான விடயங்களையும் அதற்குரித்தான அதிகாரங்களையும் இம்மாகாண சபைக்குச் சேர்த்து அதை ஒரு கூடிய அதிகாரங் கொண்ட மாகாண சபையாக ஆக்குவது.

மூன்றாவது கட்டம் - இணக்கம் காணப்படாத விடயங்களில் சகல தரப்பினரும் பேச்சு நடத்தி படிப்படியாக அவ்விடயங்களில் தீர்வு காண்பது. எமது இவ்வரசியல் தீர்வுக்கான வழிமுறைகள் குறித்து சுருக்கமான விளக்கம் இதுவே.

எனவே, அரசியல் தீர்வுக்காக முனைபவர்கள் நாம் அல்லர் என ஒரு பொய்யான தோற்றப்பாட்டை ஏற்படுத்த முனையும் இந்தத் தேர்தல பித்தலாட்டத்தை ஒரு நேர்மையற்ற வஞ்சக முயற்சி என நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். மக்களுக்கொரு துரும்பைத் தன்னும் எடுத்துதவி வழங்காதவர்கள், மக்களை எமமிடமிருந்து பிரிப்பதற்காக வகுத்த சூழ்ச்சி இது.

எனவே அபிவிருத்தியா, அரசியல் தீர்வா என்ற ஒரு கேள்வி இங்கு எழுப்பப்பட எவ்வித நியாயமுமில்லை. அபிவிருத்தியும் அரசியல் தீர்வும் சமகாலத்தில் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு என்பதைத் தெளிவுபடுத்தி அமைகிறோம். - என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

### பயிற்சி நெறி

யாழ்ப்பாணம்,நவ.27

யாழ்.மாவட்டத்தில் இருந்து தபால் அதிபர் தரம் இரண்டு பதவிக்கு நியமனம் பெற்ற 10 பேருக்கான ஆறு மாத கால பயிற்சி நெறி மட்டக்களப்பு பிரதம தபால் அலுவலக தபால் அதிபர் பயிற்சி நிலையத்தில் எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதி ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பிலுள்ள தபால் மா அதிபர் அலுவலகத்தினால் இது பற்றிய கடிதங்கள் சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

தனிச் சிங்கள மொழியில் இக்கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டிருப்பதாக அதிருப்தி தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-135)

### கடற்றொழிலாளர் சங்க விசேட கூட்டம்

யாழ்ப்பாணம்,நவ.27

கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகளுக்கான விசேட கூட்டம் எதிர்வரும் 30ஆம் திகதி காலை 10 மணிக்கு யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் சங்க சமாச அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் கடற்றொழிலாளர்களுக்கு ஏற்பட்ட இழப்பீடுகளை நிவர்த்தி செய்து கொள்வதற்கு கடன் உதவிகளைப் பெற்றுக்கொள்வது தொடர்பாக கலந்துரையாடவேண்டியிருப்பதால், கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகளை தவறாது சமுகமளிக்குமாறு சமாசத் தலைவர் அறிவித்துள்ளார். (க-6)

### மானிப்பாய் பாடசாலையில் ஒளி விழா

சண்டிலிப்பாய்,நவ.27

மானிப்பாய் சென்.ஆன்ஸ் றோ.க. தகபாடசாலையின் ஒளி விழா நாளை மறுதினம் வியாழக்கிழமை பி.ப. 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் சகோதரி மே.த.ஸ்டிஸ்லாஸ் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில், யாழ். பல்கலைக்கழக கிறிஸ்தவ, இஸ்லாமியத் துறைத் தலைவர் அருட் திரு.அன்ரன் மத்தாயஸ் கலந்து கொண்டு கிறிஸ்மஸ் செய்தியை வழங்குவார்.

மானிப்பாய் பங்குத் தந்தை அருட் திரு. பெனற் அடிகளார், உதவிப் பங்குத்தந்தை அருட்திரு.எம். ஞானேந்திரன் அடிகளார் ஆகியோரும் இதில் கலந்துகொள்வார்கள். மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளும் அங்கு இடம்பெறும். (க-135)

### சங்கானையில் கருத்தரங்கு

சண்டிலிப்பாய்,நவ.27

இன விருத்தி சுகாதாரம் பற்றிய கருத்தரங்கு, வலிகாமம் மேற்கு (சங்கானை) பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் நடைபெறவுள்ளது.

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் கே.கணேஸ்வரராஜா தலைமையில் நடைபெறவுள்ள இக்கருத்தரங்கில் இப்பிரிவில் கடமையாற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்கள், மகளிர் அபிவிருத்தி நிலைய பயிற்சி மாணவிகள் ஆகியோர் உட்பட மற்றும் பலர் கலந்து கொள்ளவுள்ளனர். (க-135)

### புத்தூர், ஆவரங்காலில் காலாவதியான பொருள்கள் மீட்பு

புத்தூர், ஆவரங்கால் பகுதிகளில் அண்மையில் திடீர் பரிசோதனை மேற்கொண்ட சுகாதாரப் பரிசோதகர் குழுவொன்று அங்குள்ள 4கடைகளில் இருந்து காலாவதியான பொருள்களை மீட்டுள்ளது.

புத்தூர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பொ.கோபாலேந்திரன் தலைமையில் சென்ற குழுவினரே இவ்வாறு காலவதியான பொருள்களை மீட்டுள்ளனர். சம்பந்தப்பட்ட கடை உரிமையாளர்கள் மீது சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கான ஆயத்த வேலைகளும நடைபெற்று வருகின்றன. (க-7)

---

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி
பழையமாணவர் சங்கம்

**வருடாந்தப் பொதுக்கூட்டம்**

மேற்படி பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் 9-12-2001 ஞாயிறு காலை 10 மணிக்குப் (புதிய நேரம்) பாடசாலை மண்டபத்தில் நடைபெறும். பழைய மாணவர்கள் அனைவரும் தவறாது சமுகம் தரவும். இதற்குரிய அறிவித்தல்கள் ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளன.

23.11.2001 (94956) - செயலாளர்.

---

**கண்ணீர்க் காணிக்கை**

எமது பாடசாலை ஓய்வு பெற்ற ஆசிரியர்

**அமரர் செல்லையா கருணாகரன்**

அவர்கள் இறைபதம் எய்தியதையிட்டு எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குவதோடு, ஆறாத்துயரில் ஆழ்ந்திருக்கும் அன்னாரின் குடும்பத்தவர் துயரில் நாமும் பங்கெடுத்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்,
யா/இயற்றாலை அ.மி.த.க.பாடசாலை.

(94959)

---

**முதலாவது ஆண்டு நினைவஞ்சலி**

மலர்வு 11 - 02 - 1932



உதிர்வு 08 - 11 - 2000

**திருமதி சிவசுப்பிரமணியம் தெய்வானை அம்மா**

திதி: 27.11.2001

எங்கள் அன்பின் குலவிளக்காய், பாசத்தின் ஒளிவிளக்காய்த் திகழ்ந்து எங்களை வழிநடத்திய பாசமிகு தாயே! அன்பு அன்னையே!!

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி!

*123, சிவப்பிரகாசம் வீதி,*
*நாச்சிமார் கோயிலடி,*
*யாழ்ப்பாணம்.*

உங்கள் பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(94835)

---

**நன்றியும் பாராட்டும் என்றென்றும் உங்களுக்கே!**

**நெடுந்தீவு மேற்கு**
**ஸ்ரீ தெற்காட்டு முத்துமாரி அம்மன் ஆலயம்**

மேற்படி ஆலய புனரமைப்புப் பணிக்காக ஒதுக்கப்பட்ட ரூபா இரண்டு லட்சத்தில் ரூபா ஒரு லட்சத்தை உடனடியாக வழங்கி உதவியமைக்காக,



வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு
வடக்கு - கிழக்கு தமிழ் விவகார இந்து
கலாசார அமைச்சரும் ஈழமக்கள் ஜனநாயகக்
கட்சியின் செயலாளர் நாயகமுமாகிய
கௌரவ அமைச்சர்
**K.N.டக்ளஸ் தேவானந்தா**
அவர்களையும்

யாழ்.மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற
உறுப்பினரும் ஈ.பி.டி.பி யாழ்.மாவட்ட
பிரதம அமைப்பாளருமான
**திரு. K.V.குகேந்திரன் (ஜெகன்)**
அவர்களையும்





ஊர்காவற்றுறை பிரதேச சபைத் தலைவரும்
ஈ.பி.டி.பி. தீவக அமைப்பாளருமாகிய
**திரு. N.மதனராஜா (மனோ)**
அவர்களையும்

நெடுந்தீவு ஈ.பி.டி.பி. அமைப்பாளரும்,
நெடுந்தீவு பிரதேச சபை உபதலைவரும்
ஆகிய
**திரு. K.நவநீதன் (மோகன்)**
அவர்களையும்



நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர்
புலவர் **A.W.அரியநாயகம்**
அவர்களையும்

*மனப்பூர்வமாக நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.*

*5ஆம் வட்டாரம்,*
*நெடுந்தீவு*

நெடுந்தீவு மேற்கு ஸ்ரீ தெற்காட்டு
முத்துமாரி அம்மன் ஆலய நிர்வாகத்தினர்.

(94963)

---




கடமை - கண்ணியம் - கட்டுப்பாடு மிக்க தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர்

**திரு.சி.சிவமகாராசா**

அவர்களை ஆதரிப்போம்.



05-12-2001

இல. [illegible]

(94858)

# எமது அரசியல் உரிமைகளை விற்று அரிசி தருவோரை நிராகரியுங்கள்!

## கனடா பல்கலைக்கழக தமிழ் மாணவர் கோரிக்கை

யாழ்ப்பாணம்,நவ.27

எமது அரசியல் உரிமைகளை விற்று, அரிசி வாங்கித் தருவதாகக் கூறி, எமது நியாயபூர்வமான உரிமைகளைக் கொச்சைப்படுத்துவோரை வாக்கு அட்டைகளால் ஓங்கி அறையுங்கள்.

- இவ்வாறு ஈழத்தமிழ் மக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளது கனடாவில் வசிக்கும் பல்கலைக்கழக தமிழ் மாணவர்களின் அமைப்பு.

இது தொடர்பாக 'தமிழர் தேசிய அமைப்பின் பல்கலைக்கழக தமிழ் மாணவர் பிரிவு' விடுத்திருக்கும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கனேடியவாழ் பல்கலைக்கழகத் தமிழ் மாணவர்கள் என்ற முறையில் எங்கள் உடன்பிறப்புக்களோடு ஒரு நிமிடம் பேச ஆசைப்படுகின்றோம். ஏழு வயது சிறுமிமீது பாலியல் பலாத்காரம், கோஷ்டி மோதல், சாதிக் கலவரம், மூன்றரை வயது சிறுமிக்கு பாலியல் கொடுமை என்றெல்லாம் யாழ். மண்ணில் நடப்பவற்றைத்தினமும் பத்திரிகைகள் வாயிலாக அறிகிறோம். இவ்வாறான வெட்கித் தலைகுனிய வேண்டிய கலாசாரத்தை இப்புனித்த பூமியில் விதைத்தவர்கள், வாக்குக் கேட்டு உங்கள் வாசல் கதவுகளைத் தட்டுகிறார்கள். தட்டுபவர்கள், எம்மக்களின் அரசியல் உரிமைகளை விற்று, அரிசி வாங்கித் தருவதாகக் கூறுகிறார்கள். எமது நியாயபூர்வமான அரசியல் உரிமைகளைக் கொச்சைப்படுத்துபவர்களுக்கு, எமது வாக்கு அட்டைகளால் ஓங்கி அறையும் வேளையிது. சோற்றிற்காக எம் சுதந்திரத்தை விற்க நாம் தயாராக இல்லை என்பதை உலகறியச் செய்வோம். தமிழ் மக்களின் உரிமைகள், நிரந்தர சமாதானம் என்பவற்றை வலியுறுத்தும் கட்சிகளை ஆதரிப்பதன்மூலம், எம்மை நாமே பலப்படுத்திக் கொள்வோம். இது எம் அனைவரினதும் வரலாற்றுக் கடமை என்பதை உணர்ந்து, இத் தேர்தல் காலத்தில் செயற்படுவோம்.

நிரந்தர சமாதானம் ஏற்படுமிடத்து, வெளிநாடுகளில் உள்ளவர்கள் அனைவரும் தங்கள் சொந்த மண்ணிற்கு மீண்டு, தம்முறவுகளோடு ஒன்றாகக் கலந்து வாழவே ஆசைப்படுகிறார்கள் என்பதை தயவுசெய்து உணர்ந்துகொள்ளுங்கள். நிரந்தர சமாதானம் இம்மண்ணில் குடிகொள்ளும்போது, நிவாரணத்திற்காக எவரிடமும் கையேந்தும் நிலைமை இருக்காது. எமது சொந்தக் கால்களில் நாமே நின்று, பல் தொழில், அபிவிருத்தித் திட்டங்களையும் எமது சொந்தக் கைகளினாலேயே செயற்படுத்த முடியும். நிரந்தர சமாதானம் ஏற்பட வழிசெய்வதற்கு உங்கள் ஜனநாயக உரிமைகளைச் சரியாகப் பயன்படுத்துமாறு எம்மினிய உணவுகளைக் கேட்டுக் கொண்டு விடைபெறுகின்றோம்.

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு
இரண்டு பட்டால் உண்டு தாழ்வு"

- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

### சோதிடர்களின் இரட்டை வேடம்




### தாவடியில் பிரசாரக் கூட்டம்

தமிழ்க்கட்சிகளின் கூட்டமைப்பின் தேர்தல் பிரசாரக் கூட்டம் நாளை புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு தாவடி அம்பலவாணர் கந்தசுவாமி (முருகமூர்த்திகோவில்) கோவில் முன்பாக நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் வேட்பாளர்களான வீ. ஆனந்தசங்கரி, மாவை சோ. சேனாதிராசா, சி.சிவமகாராசா, ந.ரவிராஜ், ஏ. அரவிந்தன், வி.ஜி. தங்கவேல், கா. சந்திரராஜா ஆகியோரும்-

அ.இ.த. காங்கிரஸ் பிரமுகர்களும் ஈ.பி.ஆர்.எல்.எப். (சுரேஷ் அணி) வேட்பாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன், ரெலோ அமைப்பின் வேட்பாளர் க. சிவாஜிலிங்கம் மற்றும் கூட்டணியின் ஆதரவாளர்களும் உரை நிகழ்த்தவுள்ளனர். (க)

# சேறடிப்பு வேலைகளைக் கைவிட்டு அரசியல் விவாதத்துக்கு வாருங்கள்!

## ஈ.பி.டி.பியினருக்கு சுரேஷ் அழைப்பு

யாழ்ப்பாணம்,நவ.27

எனது தலைமையிலான ஈ.பி.ஆர்.எல்.எவ். அரசியல் ரீதியாகத்தான் யாரையும் எதிர்கொள்ள விரும்புகிறது. எனவே சேறடிப்பு வேலைகளைக் கைவிட்டு அரசியல் ரீதியாக விவாதிக்க முன்வாருங்கள். அது ஆரோக்கியமான அரசியல் சூழலை முன்னெடுக்க உதவும்.

- இவ்வாறு ஈ.பி.டி.பியினருக்கு அழைப்பு விடுத்திருக்கிறார் சுரேஷ் பிரேமச்சந்திரன்.

ஈ.பி.டி.பி. கட்சியினர் அண்மையில் வெளியிட்ட ஒரு பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டிருந்த விடயங்களுக்குப் பதிலளிக்கும் வகையில் சுரேஷ் ஓர் அறிக்கையை விடுத்திருக்கிறார்.

அதில் அவர் தெரிவித்திருப்பதாவது:-

"வாக்கு வேட்டைக்கு வருகின்றது தமிழர் வியாபாரக் கூட்டு; வோட்டுகளால் வைப்போம் வேட்டு" என்ற

தேர்தல் களம் X

பெயரில் ஈ.பி.டி.பி. கட்சியினர் 'உதயன்' பத்திரிகையூடாக ஒரு துண்டுப்பிரசுரத்தை இணைத்து வெளியிட்டுள்ளனர். அதில் ஈ.பி.ஆர்.எல்.எவ். மண்டையன் குழுவிற்கு நான் தலைமைதாங்கியதாகவும், பலபேரைக் கொன்று குவித்ததாகவும், சேறடித்துள்ளனர். இது தேர்தல்கால சேறடிப்பாக இருந்தாலும்கூட, இதற்குப் பதில் சொல்ல வேண்டியது எனது கடமையாகும்.

முதலாவதாக ஈ.பி.ஆர்.எல்.எவ். இன் அரசியல் நடவடிக்கைகளை மாத்திரம்தான் ஆரம்பம்முதல் நான் கவனித்து வந்தவன். தவிர எந்தவித இராணுவ நடவடிக்கையிலும் நான் ஈடுபட்டது கிடையாது. எனவே மண்டையன் குழுவோ, அல்லது வேறு எந்தவிதமான இராணுவக்குழுவிற்கும் எனக்கும் எந்தவித சம்பந்தமும் கிடையாது. ஆனால் இந்திய இராணுவ காலத்தில் கட்டாய ஆளசேர்ப்பும், சில அத்துமீறல்களும் நடந்தன. இது முன்னாள் முதல்வர் பெருமாள் அவர்களின் திட்டப்படி, தமிழ்த் தேசிய இராணுவம் ஒன்று அமைப்பதை நோக்கமாகக் கொண்டு செயற்படுத்தப்பட்டது. அக்காலத்தில் கட்சியின் மத்திய 'கமிட்டி' உறுப்பினன் என்ற அடிப்படையில் கூட்டுப் பொறுப்பேற்று தவறுகளுக்கு மன்னிப்புக் கோரியிருந்தேன்.

ஆனால் 1990ஆம் ஆண்டின் பின் கட்சி எனது தலைமைத்துவத்தின் கீழ் வந்த 10 வருட காலத்திற்குள் ஈ.பி.ஆர்.எல்.எவ். அரசியல் ரீதியாக அல்லது வேறு வடிவங்களில் பிழையாகச் செயற்பட்டிருந்தால் அவற்றை யாராவது ஆதாரபூர்வமாக முன்வைக்கட்டும். அதனைவிடுத்துத் தமது அரச சார்புக் கொள்கைகளையும் அடாவடித்தனங்களையும் மறைக்க என்மேல் சேறடிக்க முனைவது, மக்களைத் திசைதிருப்புவதற்கே என்பதைத் தமிழ் மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

நாம மக்களுக்குப் பணம் கொடுக்கின்றோம், ஆனால் ஏனையோர் மக்களிடம் பணம் கறக்கின்றார்கள் என்று கதைவிடத் தொடங்கியுள்ளனர்.



அன்று யாழ்ப்பாணம் பெருமாள் கோயிலில் டக்ளஸ் தலைமையில் நடந்த கொள்ளைக்கு பிராயச்சித்தமாகத்தான் இன்று கோயில்களுக்குப் பணம் கொடுகின்றார்போல் உள்ளது.

10 வருடத்துக்கு முன்னர் யாரோ செய்தவற்றுக்கு என்மீது சேறடிப்பவர்களிடம் சில கேள்விகள்:-

1. உங்கள் மத்திய 'கமிட்டி' உறுப்பினரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ரமேஷ் அற்புதராஜா நடராஜா கடந்த வருடம் வெள்ளவத்தையில் பட்டப்பகலில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டாரே அதுக்கும் உங்களுக்கும் சம்பந்தமில்லையா? அதனைப் பற்றி ஏதாவது விசாரணை நடந்ததா? அரசின் அமைச்சராகவிருக்கும் நீர் அக்கொலை தொடர்பான விசாரணையை நடத்தும்படி பொலிசாரைக் கேட்டீரா? இக்கொலைக்குப் பின்னர் உமது கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூவர் நாடாளுமன்றப் பதவியையும் விட்டு லண்டன் சென்றார்களே, அது தமது உயிருக்கும் உம்மால் அச்சுறுத்தல் ஏற்படலாம என்பதால்தானே?

2. ஒலிபரப்பாளர் கே.எஸ்.ராஜா, இன்னும் பலர் ஈ.பி.டி.பியினரால் கொழும்பில் வைத்துக் கொல்லப்படவில்லையா?

3. இந்தியாவில் சிறுவனைக் கடத்தி 10 லட்சம் கப்பம் கேட்டதால, நீர் இந்தியச் சிறையில் குண்டர் தடுப்புச் சட்டத்தில் ஒரு வருடம் இருக்கவில்லையா? அங்கு பிணை கிடைத்த பின்னர்தானே தப்பிவந்து கொழும்பில் பிரேமதாசாவின் பாதாரவிந்தங்களில் விழுந்தீர்!

4. அன்று பாதுகாப்பு அமைச்சராக இருந்த ரஞ்சன் விஜயரட்ணாவின பின்பலத்துடன் கொழும்பில் எத்தனை பேரைக் கடத்திக் கப்பம் பெற்றீர்?

5. தீவுப் பகுதியில் நெடுந்தீவு உதவி அரச அதிபர் உட்பட எத்தனை பேர் உமது கட்சியால் கொலை செய்யப்பட்டனர்? எத்தனை பேர் சித்திரவதைக்கூடங்களுக்கான பங்கருக்குள் சீவித்து, தமது கண் பார்வையையே இழந்தனர்.

6. பத்திரிகையாளன் நிமலராஜனின் கொலைக்கு யார் காரணம் என்பது இன்று உலகத்திற்கே தெரியும்.

இவையெல்லாம் உங்கள் கட்சியால் இன்று நடத்தப்படுகின்ற செயல்கள். இவ்வளவுக்கும் தலைமை தாங்கும் நீங்கள், ஏனையோரை விமர்சிக்க முற்படுவதும், உங்களை புனிதராகக் காட்ட முயற்சிப்பதும் வேடிக்கையானது என்பதை மக்கள் அறிவார்கள்.

எனவே உங்கள் சேறடிப்பு வேலைகளை விட்டு, அரசியல் ரீதியாக விவாதிக்க முன்வாருங்கள். அது ஆரோக்கியமான அரசியல் சூழலை முன்னெடுக்க உதவும். அது உங்களுக்கு சரிவராவிட்டால் அமைதியாக இருப்பதுதான் நல்லது. எனது தலைமையிலான ஈ.பி.ஆர்.எல்.எவ். என்பது அரசியல் ரீதியாகத்தான் யாரையும் எதிர்கொள்ள விரும்புகின்றது. ஆனால உங்கள் சேறடிப்புக்களுக்கும் பதில் சொல்ல வேண்டிய கடமை எனக்குள்ளது - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## காயப்பட்டவனின் உயிர் காக்க முதலுதவி அவசியம்; அதேபோன்று

# பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய நிவாரணங்களை பெற்றுக்கொடுப்பதும் இன்றைய முக்கிய தேவையாகும்

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூறுகிறார்

யாழ்ப்பாணம்,நவ.27

காயம் ஏற்படும் ஒருவனுக்கு உயிர்காப்புக்கான முதலுதவிச் சிகிச்சையே முதலில் அவசியமாகிறது. அதேபோன்று பாதிப்புகளுக்கு இலக்காகியுள்ள மக்களுக்கு அவற்றிலிருந்து விடுபடுவதற்கு ஏதுவான வழிவகைகள் - நிவாரணங்கள் பெற்றுக்கொடுப்பதும் இன்றைய முக்கிய தேவைகளாகும்.

- இவ்வாறு அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா தெரிவித்திருக்கிறார்.

காங்கேசன்துறை சீமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர்கள் மற்றும் அரசாங்க கட்டடத் தொழிலாளர் சங்க உறுப்பினர்கள் மத்தியில் அமைச்சர் உரையாற்றிய சமயமே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

'காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலை மற்றும் கட்டடத் தொழி

தேர்தல் களம் X

லாளர்கள் ஈ.பி.டி.பிக்கு ஆதரவு' என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள பத்திரிகைக் குறிப்பு ஒன்றில் அமைச்சரின் பேச்சுக் குறித்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தச் செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அமைச்சரின் பேச்சு விவரம் வருமாறு:-

நாங்கள் மக்களின் நாளாந்த வாழ்வில் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைப் பெற்றுத் தந்து வருகிறோம். இது எம்மிடமுள்ள அதிகார பலத்தின் மூலமே சாதிக்கப்படுகிறது. இத்தகைய அன்றாடப் பிரச்சினைகளுக்கு மட்டுமல்ல, அரசியல் பிரச்சினைகளுக்கும் தீர்வுகாண்பதற்கு எமக்குப் போதுமான அளவுக்கு அரசியல் பலம் தேவை. அரசியல் ரீதியிலான பலத்தை எமக்குத் தருவீர்களேயானால் அரசியல் தீர்வைப் பெறவும் - நடைமுறைப்படுத்திக் காட்டவும் - எமக்கு இயலுமானதாக இருக்கும்.

இன்று மனித உயிர்களின் பெறுமதி வெறுமனே எண்ணிக்கைகளால் குறிக்கப்படுவதோடு முடிந்து போகிறது. மனிதர்களின் பெறுமதியானது உயிர்களின் பெறுமதியிலும், உறவுபலம் என்னும் பெறுமதியிலும் தங்கியிருக்கிறது. ஆனால் இன்று சம்பவங்களில் மரணிப்போர் எண்ணிக்கை என்ன என்ற குறிப்போடு முற்றுப் பெற்று வருகிறது. இந்த நிலை மாற்றப்படவேண்டும்.

கொடூரமான மரணங்கள் வேண்டாம்; நிம்மதியான வாழ்வுதான் தேவை. இடப்பெயர்வுகள் வேண்டாம்; மீள்குடியமர்வுகளே வேண்டும். அழிப்புக்கள் வேண்டாம்; இருக்குமிடத்தின் அபிவிருத்தியே தேவை. சூனியமான எதிர்காலமல்ல; ஒளிமயமான வாழ்க்கையே வேண்டும். இதுதான் பெரும்பாலான மக்களின் எதிர்பார்ப்பு என்று அமைச்சர் கூறினார்.

இங்கு குழுமியிருக்கும் நீங்கள் எவராவது இதனை இல்லையென்று மறுக்கிறீர்களா? மாற்றுக் கருத்துக்கள் உண்டா? என்னும் வினாவை அமைச்சர் அங்கு எழுப்பினார். அவ்வேளை ஆயிரம் பேர்வரையில் கூடியிருந்தவர்கள் ஒத்த குரலில் இல்லை எனப் பதிலளித்தனர்.

எமது நிலைப்பாடுகள் எப்போதும் தெளிவானது. எனினும், இவை தனிப்பட்ட எமது நலன்களுக்கானதோ, கட்சி நலன்களுக்கானதோ அல்ல. மாறாக மக்கள் நலனுக்கானது. அதாவது உங்கள் நலனுக்கு உகந்தது எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

அத்துடன், ஈ.பி.டி.பி. நடைமுறைக்குச் சாத்தியமான கோரிக்கைகளை முன்வைத்து, சிறுகச் சிறுக அவற்றை வென்றெடுத்து மக்களுக்கு எதிர்காலம் குறித்து நம்பிக்கையூட்டி, அணி திரட்டி வருகிறது. மக்களும் ஈ.பி.டி.பியின் பின்னால் அணி திரண்டு வருகின்றனர். இதனைக் காண விரும்பாத சக்திகளும், தத்தம் சுயலாப




அரசியலுக்குக் கேடு வருவதாகவும் கருதும் சக்திகளும் கூட்டாகப் போட்டியிடுகின்றன. இது வெறும் தேர்தல் கூத்து. இந்தக் கூத்துகளுக்கெல்லாம் மக்கள் ஏடுபட்டுப் போகமாட்டார்கள் என்பதே எமது நம்பிக்கை எனவும் குறிப்பிட்டார்.

இங்கு குழுமியிருந்த அனைவரும் ஈ.பி.டி.பிக்கும், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் பக்கபலமாக எப்போதும் இருப்போமெனத் தெரிவித்தனர்.

- இவ்வாறு ஈ.பி.டி.பியின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

# நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் - 2001



# அன்றொருநாள்.....!

## மறக்கப்பட்ட உண்மையானாலும்,

## மறக்கமுடியாத சம்பவம்

1976ஆம் ஆண்டு ஒருநாள் தந்தை செல்வாவின் தலைமையில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயற்குழு கூடுகிறது. விடுதலைப் போராட்டத்தின் ஒரு கட்டமாக. சட்டமறுப்பு செய்வதென்ற தீர்மானம் அங்கு ஏகமனதாக நிறைவேறுகிறது. நாடாளுமன்ற உறுப்பினர் அனைவரும் தத்தமது தொகுதிகளிலிருந்து 5 தொண்டர்களுடன் நீதிமன்றில் ஒரு துண்டுப் பிரசுரத்தை விநியோகித்து. நீதிமன்ற நடவடிக்கைகளைக் குழப்புவது என்பதே அந்தத் தீர்மானம்.

இந்தத் தீர்மானத்திற்கு அமையச் சட்டமறுப்புப் போராட்டத்தில் ஒரேயொரு நாடாளுமன்ற உறுப்பினர் மாத்திரம் தனது 5 தொண்டர்களுடன் நீதிமன்றத்தால் குற்றவாளியாகக் கணிக்கப்பட்டு சிறைத்தண்டனை பெறுகிறார். இவ்வாறு சிறைத்தண்டனை பெற்று யாழ். கோட்டையில் சிறை வைக்கப்பட்டிருந்த அறுவரில் தலைவர் மாத்திரம் மறுநாள் காலை அன்றைய பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் கட்டளைப்படி விசேட விமானமூலம் கொழும்பு கொண்டுசெல்லப்பட்டு. வெலிக்கடை மத்திய சிறைச்சாலையில் அடைக்கப்படுகிறார்.

காவலர்கள் சிறைச்சாலை உடையுடனேயே அவரைக் கொழும்புக்குக் கொண்டுசென்ற கொடுமையைப் பலாலியில். திருச்சி - கொழும்புப் பயணிகள் வரிசையில் நின்று கண்டு. தீராத ஆத்திரமும். வேதனையும் அடைந்தவர்களில் நானும் ஒருவன்.

நாடாளுமன்ற உறுப்பினர் என்று எந்தவித சலுகையும் கொடுக்கப்படாது. அவர் பயங்கரக் குற்றவாளிகளுடன் தனி அறையில் பூட்டிவைக்கப்படுகிறார். நெளிந்த அலுமினியத் தட்டில் உணவருந்தியதுடன். அதேபோன்றதொரு பழைய கோப்பையில் தண்ணீர் அள்ளிக்குடித்து சொல்லொணாத் துயரங்களை - நரகவேதனையை இருவாரங்கள் அனுபவித்துத் திரும்பிய அந்தத் தலைவனை தந்தை செல்வாவும். தலைவர் சிவசிதம்பரமும் வரவேற்றனர்.

## அந்த நாடாளுமன்ற உறுப்பினர் யார்?

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் அன்றைய ஒரேயொரு நாடாளுமன்ற உறுப்பினரும். தமிழர் விடுதலைக் கூட்டணியை உருவாக்கிய தலைவர்களில் ஒருவரும். இன்றைய தமிழர் விடுதலைக் கூட்டணியின் மூத்த துணைத் தலைவருமான

**திரு. வீ. ஆனந்தசங்கரி** அவர்களே! அந்த நாடாளுமன்ற உறுப்பினர்.

**எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் நான்கு கட்சிக் கூட்டமைப்பின் முதன்மை வேட்பாளரான திரு.வீ.ஆனந்தசங்கரி அவர்களை ஆதரிப்பதற்கு நாம் உதயசூரியன் சின்னத்திற்கும், விருப்பு வாக்கினை இல. 3 இற்கும் அளித்து அவரை அமோக வெற்றியீட்டச் செய்வோமாக!**

| | | |
|---|---|---|
| தமிழர் விடுதலைக் கூட்டணி | | X |
| வீ.ஆனந்தசங்கரி | 3 | |

- அன்பு நண்பன்.

(C/19471)

உதயன்

## உதயனின் குரல்

இன்று உதயனுக்கு வயது பதினாறு பூர்த்தியாகுகின்றது.

ஈழத் தமிழர்களின் உரிமைகளுக்கான கோரிக்கை ஆயுதப் போராட்டமாக முகிழத் தொடங்கிய கால கட்டத்தில்தான் உங்கள் கைகளில் 'உதயன்' தவழத் தொடங்கினான்.

யுத்த நெருக்கடிகளுக்கு மத்தியில் பிறந்து, போர் அவலங்களுக்கு இடையே மக்கள் பணி தொடர்ந்த உதயனுக்கு, குடாநாட்டு மக்களைப போலவே நெருக்கடியும் யுத்தப் பாதிப்புகளும் பழக்கப்பட்டுப்போய் விட்டவை.

ஆயுதக் குழுக்களின் அச்சுறுத்தல்கள், இந்தியப் படையின் ஷெல் தாக்குதல்கள் - நெருக்குதல்கள், ஸ்ரீலங்காப் படையினரின் நேரடி விமானக் குண்டுவீச்சு - அழுத்தங்கள், கைக்குண்டு வீச்சுக்கள், பத்திரிகைக் காரியால சீல் வைப்பு, கல்லெறிகள், இடப்பெயர்வுகள் என்று 'உதயன்' அனுபவித்த கஷ்டங்கள் ஈழத் தமிழர்களுக்கு - குறிப்பாகக் குடாநாட்டு மக்களுக்கு - தெரிந்த விடயங்கள்தான்.

இவற்றுக்கு மத்தியில் உதயனை தமது நெஞ்சத்தில் இருத்தி, ஏத்தி வைத்திருக்கும் நமது வாசகர்களின் ஆதரவு என்ற ஆத்ம பலமே உதயனின் இயக்கத்துக்கு ஆதார சக்தியாக விளங்குகின்றது.

தமிழர் தம். உரிமைக்கான போராட்டம் சளைக்காது தொடர்வது போல -

அதற்கான ஆயுதப் போராட்டம் முகிழ்ந்த காலத்தில் பிறந்து, உரிமைக்கான போராட்டத்தில் தன் பங்களிப்பை நல்கும் உதயனின் பணியும் சளைக்காது தொடர்கின்றது.

உதயனுக்கு நெருக்கடி வந்த போதெல்லாம் நம் மக்கள் கொதித்தெழுந்து, குரல் கொடுத்தார்கள். இது நம் மக்களோடு - குறிப்பாக குடாநாட்டு மக்களோடு - உயிரும் உணர்வுமாய் 'உதயன்' ஒன்றிவிட்டதன் பிரதிபலிப்பேயன்றி வேறல்ல.

நீதி நிலைத்திட, நிம்மதி பிறந்திட, உரிமை கிடைத்திட, அறியாமை அகன்றிட, அறிவு வளர்ந்திட, ஆன்மா அமைதி பெற்றிட, சமூகத்தை ஆற்றுப்படுத்திட வழிகாட்ட வேண்டிய பாரிய பொறுப்பு உதயனுக்கு உள்ளது என்று சமூகப் பெரியோர்கள் உணர்த்தும் கடமையுணர்வை 'உதயன்' உள்வாங்கிக்கொண்டு பணியாற்றுகின்றான்; பணியாற்றுவான்.

ஈழத் தமிழர்களின் அபிலாஷைகளைப் பிரதிபலித்து, இழந்த தம் உரிமையைப் பெற்றிட அவர்கள் நடத்தும் போராட்டத்துக்கு உந்து சக்தியாகத் திகழ்வதையே தனது பணியாக, தான் உதித்த காலத்திலிருந்தே 'உதயன்' வரித்துக் கொண்டிருக்கின்றான் என்பது நம் மக்கள் அனைவருக்கும் தெரிந்த உண்மையாகும்.

இந்தப் பணியை ஆற்றும்போது - பக்கச் சார்பில்லாமல் அதில் முன்னேறும்போது - பல பக்கங்களில் இருந்தும் உதயனுக்கு நெருக்குதலகள், அச்சுறுத்தல்கள், சேறுவாரி இறைத்தல்கள், கால் தடம் போடுதல் போன்ற 'பணி'களும் தொடரத்தான் செய்கின்றன.

தமிழரின் நலனுக்காக ஓங்கிக் குரல் கொடுக்கும்போது - ஈழத் தமிழரின் அபிலாஷைகளைப் பிரதி பலிக்கும்போது - இது விடயத்தில் சில தரப்புகளின் நிலைப்பாடும் போக்கும் தவறெனச் சுட்டிக்காட்டும் கட்டாயம் எழுவது தவிர்க்க முடியாததாகின்றது. அதனைத் தனிப்பட்ட முறையில் தங்களுக்கு எதிரான உதயனின் நிலைப்பாடு என சில சக்திகள் கருதுவது அறிவீனமே.

ஈழத்தமிழர்களைப் பொறுத்த வரை வரலாற்றின் ஒரு முக்கியமான காலகட்டத்தில் - தசாப்தத்தில் - அவர்கள் உள்ளனர்.

இந்த நேரத்தில் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்கு அப்பால் நின்று தமிழர்களின் நலன் ஒன்றே தனது குறிக்கோள் என்ற உண்மையுணர்வுடன் பணியாற்றவேண்டிய வரலாற்றுக் கடப்பாடு 'உதயன்' மீது சுமத்தப்பட்டிருக்கின்றது. உதயனை விமர்சிப்போர், தங்களுக்கு எதிரானது என அதைக்கருதுவோர் உதயனின் வரலாற்றுக் கடமையைப் புரிந்து கொண்டால், உதயனின் நெறியையும் பாராட்டுவார்கள் என்பது திண்ணம்.

# புலிகளைத் தடை செய்த செய்தி; கனடாவிலிருந்து ஒரு மறுப்பு

யாழ்ப்பாணம்,நவ.27

விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு கனடாவில் தடை விதிக்கப்பட்டிருப்பதாக உதயனில் வெளியான செய்திக்கு -

கனடா, வாட்டர்லூ பல்கலைக்கழக தமிழ் மாணவர் சங்கத்தின் உதவிச் செயலாளர் சசி செல்லத்துரை மறுப்பு அனுப்பியிருக்கின்றார்.

மின் - அஞ்சல் மூலம் உதயனுக்கு அவர் அனுப்பிவைத்துள்ள மறுப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

உதயனின் இணையத்தளப் பதிப்பில் வெளியான இரண்டு செய்திகளில தவறுகள் உள்ளன. எனக்குத் தெரிந்த வரை -

1. கனடாவில் விடுதலைப் புலிகள் இயக்கம் தடைசெய்யப்படவில்லை. சட்டமூலம் இன்னும் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படாத நிலையில், பொருத்தமான சட்டம் ஏதுமின்றி அவர்களால் எப்படி தடைவிதிக்க முடியும்?

2. கனடாவில் மாவீரர் நாள் நிகழ்வுக்கு கனடா அரசு தடை விதிக்க வில்லை. இனந்தெரியாதோரின் (வெடிகுண்டு) மிரட்டல் காரணமாக மண்டபப் பதிவை மண்டப நிர்வாகிகள் ரத்துச் செய்துள்ளனர்.

3. நாடாளுமன்றத்தில் அரச அமைச்சர்களின் உரைகளின்படி, புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்டாலும் கூட, உலகத் தமிழர் இயக்கம் தடை செய்யப்படமாட்டாது.

- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

### லண்டன் அம்மன் ஆலயத்தில் சேகரித்த

# 3 லட்சத்தை புற்றுநோயாளருக்கு வழங்குவதற்கு நடவடிக்கை

யாழ்ப்பாணம்,நவ.27

யாழ்.மாவட்டத்தில் புற்று நோயால் பாதிக்கப்பட்டுள்ள வறுமைக் கோட்டின் கீழ் வாழும் நோயாளர்களுக்கு உதவிசெய்யும் நோக்குடன் லண்டன் ரூட்டிங் முத்துமாரி அம்மன் ஆலய நிர்வாகம் 3 லட்சத்து 27 ஆயிரத்து 500 ரூபாவை சேகரித்து அனுப்பியுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளரின் சிபாரிசின் கீழ் இந்த நிதி சம்பந்தப்பட்ட நோயாளர்களுக்கு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

லண்டன் ரூட்டிங் முத்துமாரி அம்மன் ஆலய உற்சவத்தில் உரையாற்றச் சென்ற செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன், குடாநாட்டில் புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் பொருளாதார நெருக்கடிகளால் மேலும் பாதிக்கப்படுவதாகவும் -

அவர்களுக்கு எமது சமுதாயம் ஏதாவது உதவிபுரிய வேண்டும் எனவும் கோரியிருந்தார். இதன் பயனாக அந்த ஆலயத்தில் "புற்று நோயாளர் நலநோன்பு உண்டியல்" வைக்கப்பட்டு சேகரிக்கப்பட்ட நிதியே தற்போது அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இந்த நிதிக்கு நம்பிக்கைப் பொறுப்பாளர்களாக ஆறு.திருமுருகனும், யாழ்.போதனா வைத்திய சாலை கண் வைத்திய நிபுணர் டாக்டர் ச.குகதாசனும் நியமிக்கப்பட்டுள்ளனர். (க-6)

## ஆசிரியர் சங்க கூட்டம்

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் யாழ்.மாவட்டத்தில் உள்ள சகல கிளைகளது தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் மாவட்ட தாய்ச் சங்க நிர்வாகிகளுக்கான கூட்டம் எதிர்வரும் 30ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் மாவட்டத் தலைவர் வ. கணேசமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் குறைநிவர்த்தி சேவை, கிளைகள் மாவட்டங்களுக்கான கொடுப்பனவுகள், ஆசிரியர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள், 2002ஆம் ஆண்டுக்கான ஆசிரிய இடமாற்றங்கள், செயற்குழுத் தீர்மானங்கள், 2002ஆம் ஆண்டுக்கான வேலைத் திட்டங்கள் போன்ற முக்கியமான பல விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட இருப்பதினால் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு மாவட்டச் செயலாளர் க.குமாரசாமி வேண்டுகோள் விடுத்துள்ளார். (ஐ)

## லங்கா சிமெந்து நிறுவன தொழிலாளருக்கு!

லங்கா சிமெந்து நிறுவனத்தில் சுயவிருப்பத்தின் அடிப்படையில் ஓய்வூதியத்துக்கு விண்ணப்பித்த தொழிலாளர்கள் அதனை வாபஸ் பெற முடியும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ஓய்வூதியத்துக்கு விண்ணப்பித்து தற்போது அதனை வாபஸ் பெற விரும்பும் ஊழியர்கள் இன்று காலை 10 மணிக்கு இணுவிலில் உள்ள நிறுவன அலுவலகத்துக்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

ஓய்வூதியத் திட்டத்துக்கு விண்ணப்பிக்காத ஊழியர்களும் இன்று காலை அலுவலகத்துக்கு சமுகமளிக்குமாறு ஊழியர் சங்கம் கேட்டுள்ளது.

## சைவ சித்தாந்த விழா

யாழ்ப்பாணம்,நவ.27

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை இந்து மாமன்றம் நடத்தும் சைவ சித்தாந்த விழா இன்று செவ்வாய்க் கிழமை காலை 9 மணிக்கு கலாசாலையின் ரதிலக்ஷ்மி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் இ.குமாரவடிவேல் கலந்து கொள்ளவுள்ளார்.

சைவ சித்தாந்த பொருட்காட்சி மற்றும் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன. (ஜ-9)

## ஒருங்கிணைப்புக்குழு கூட்டம்

ஊர்காவற்றுறைப் பிரதேச செயலக பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு ஊர்காவற்றுறை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் ஜே. எக்ஸ்.செல்வநாயகம் தலைமையில் நடைபெறும். (ஜ-73)

## சுன்னாகத்தில் நாய்களுக்கு தடுப்பூசி

வலிகாமம் தெற்கு,நவ.27

சுன்னாகம் பொதுச் சுகாதார பரிசோதகர் பகுதிக்குட்பட்ட பிரதேசத்தில் இன்றும் நாளையும் வளர்ப்பு நாய்களுக்கான விசர் நாய்க்கடி தடுப்பூசி போடப்படவுள்ளது.

தடுப்பூசி போடப்படும் காலம், இடம் என்பவற்றின் விவரம் வருமாறு:

*இன்று செவ்வாய்*

காலை 9 மணி - 10.30 மணி: சுன்னாகம் வரியப்புலம் அம்மன் கோயிலடி.

பகல் 11.00 மணி - 12.30 மணி: சுன்னாகம் மயிலணி வளர்மதி ச.ச. நிலையம்.

பிற்பகல் 1.00 மணி - 2.00 மணி: சுன்னாகம் கிழக்கு சிவன் ச.ச.நிலையம்.

*நாளை புதன்*

காலை 9 மணி - 10.30 மணி: ஐயனார் ச.ச.நிலையம், ஐயனார் கோயிலடி, சுன்னாகம்.

பகல் 11.00 மணி - 12.30 மணி: சுன்னாகம் மேற்கு, ஐயன்னா ச.ச. நிலையம்.

பிற்பகல் 1.00 மணி - 2.00 மணி: சுன்னாகம் மத்தி செல்லவளவு ச.ச. நிலையம். (க-152)

### நாளை

கார்த்திகை 13
புதன்கிழமை
திதி : திரயோதசி
பின்னிரவு 2.48 வரை.
நட்சத்திரம் : அச்சுவினி
பிற்பகல் 4.44 வரை.
பிரதோஷ விரதம்
சுபநேரம் : 4.43 - 5.13
ராகுகாலம் : 12.13 - 1.43
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

சமூகத்தின் கண்ணாடியே பத்திரிகை.

# நாட்டு நடப்பு

## உதயனே! வாழ்க நீடு!

பதினாறு வயதையெய்தி
பருவ எழில் சொட்டும் தீரா
மதிவளம் மிக்க உந்தன்
மாண்பினுக்கு ஈடுமுண்டோ?
அதியுயர் அன்பை நல்கி
அணைக்கிறார் மக்கள் உன்னை
மதியெனும் எழில் முகத்தாய்
மக்களை மயக்கிவிட்டாய்
கதிரோன மக்கள் நம்ப
கைவிடாது வாழ்க நீடு!

- *விகடகவி.*

## விஞ்சு புகழ் பெறுக!

நிசத்தின் நிழல் நண்பா!
நடுமை நிதம் காத்து நீண்ட இந்த
தசத்தோடாறுவருடம் பயத்தின்
பெயரறியாப் பண்பாளா!
மீருடன் நீ
உசத்தி பெறவேண்டும்! உன் நினைவெம்
உளத்தின் வசத்தில் இன்னும் பல யுகங்கள் நிலைக்கும்!

கொடுமை விஷத்துளியை
பனிப்படலம் கிழிக்கும் பகலவனாய்மாறிப்
பஸ்பம் செய்!
மடமைதனை எரிப்பாய்! மக்கள் மனதில்
விடுதலையின் வேட்கை தனை ஏற்றாய்!
வஞ்சகரின் வலை கிழிப்பாய்!
வளர்ச்சி வழிவிரையாய்!
விடுதலைக்காய்த்
துஞ்சியவர் நாளில் தூயவன் நீ
வந்துதித்தாய்! வாழி!
அஞ்சல் அறுப்பாய்! அதிவிரைவாய்
கொஞ்சும் பொலிவில் சேதி தராய்!
விஞ்சும் புகழ் பெறுவாய்!
'வீரப்புதினத்தாள்' விருதும் பெறுவாய்!
வீழ்ச்சி எதுவுமற வீறு நடைபோடு!
வாழ்த்து வழங்குகிறேன் நானும்!

- ஜெ.பிறேம்குமார்.

## நாயகன் உதயன் வாழி!

பல்கலை நிறைந்த வாழ்க்கை
பற்றிய சமூகச் செய்தி
தொல்புவி வான்வீஞ் ஞானம்
சுவைதரும் இலக்கியங்கள்
கல்வியால் தெய்வீகத்தைக்
கருத்திலே இருத்தும் பண்பு
நல்விளக்காக நல்கும்
நாயகன் உதயன்வாழி!

சத்தியால் பல தொழில்கள்
தழுவிய வளம்சிறக்க
சித்தியால் கதைகள் பாக்கள்
சிருட்டிக்கும் திறன்சிறக்க
வித்தியா சாலை கோயில்
விழாக்களை அறிந்துவக்க
உத்தமா தரங்கள் காட்டும்
உதயன் பல் லாண்டுவாழி

பதிநிறை கலைபரப்பி
பாரிலே தோன்றுகின்ற
புதினங்கள் உடனுடன், மெய்ப்
புரிந்துணர் வமையத் தந்தாய்
கதிபெறு மக்களுக்குக்
கதிர்விடு பருதிபோல
உதயனே நீபல்லூழி
உலக கற் பகமாய் வாழி!

- அருட்கவி சீ.விநாசித்தம்பி (M.A)



# பொதுத் தேர்தல் 05.12.2001

# நாடாளுமன்றத்தில் கொள்கை முழக்கம்

அவைத் தலைவர் அவர்களே!

அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் வரவு - செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்துவிட்டு, எதிர்க்கட்சி வரிசையில் இருக்கும் எமது கருத்துக்களைச் செவிமடுக்கும்போது நான் இதைக் கேட்கின்றேன்.

ஆயுத வல்லரசுகள் கூட தமது வரவு - செலவுத்திட்டத்தில் ஏழு வீதத்தை மட்டுமே இராணுவச் செலவுக்காக ஒதுக்குகின்றன. ஆனால் அபிவிருத்தியடையவேண்டிய நாடுகளில் ஒன்றான எமது நாட்டில் ஏறத்தாழ முப்பது வீதம் யுத்தச் செலவுகளுக்காக ஒதுக்கப்படுகிறது. இந்த ஒதுக்கீட்டு அதிகரிப்பானது எமது அபிவிருத்தியை பல வருடங்கள் பின்தள்ளிச் செல்லப்போகின்றது என்பது மட்டும் உண்மை.

இதேவேளை - யுத்தச் செலவுக்கான அதிகரிப்பானது இதுவரை அபிவிருத்தியடைந்துள்ள பொருளாதாரத்தையும், தொழில்துறைகளையும் அழித்துவிடுவதுடன் மட்டுமல்லாது இந்த நாட்டின் தமிழ்த் தேசிய இனத்தையுமே அழித்துவிடப்போகின்றது. மேற்படி வரவு - செலவுத் திட்டத்தை இங்கு சமர்ப்பித்துள்ள பிரதி நிதி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், நான் மேலே குறிப்பிட்ட விவகாரங்கள் அனைத்தையும் புரிந்துகொள்ளமுடியாதவரல்லர். எனினும் சூழலின் கைதியாக இருப்பதனால் அவரால் மனச்சாட்சியின்படி நடக்கமுடிவதில்லை.

ஆனால் அமைச்சர் பதவியை வகித்திருக்காவிட்டால் பேராசிரியர் பீரிஸ் இந்த அரசை எப்படியெல்லாமோ விமர்சிப்பார் என்பது மட்டும் உண்மை.

எனினும் பேராசிரியர் பீரிஸ் அரசமைப்பு அமைச்சராகவும், பிரதி நிதி அமைச்சராகவும் பதவிவகிக்கின்ற காரணத்தினால் உண்மையைக் கூறமுடியாதவராக இருக்கின்றார்.

எனினும் நமது நாட்டின் இனப்பிரச்சினைத் தீர்வுக்காகப் பின்வரும் விடயங்கள் குறித்துக் கவனம் செலுத்தும்படி அனைவரையும் வேண்டுகின்றேன்:-

1927ஆம் ஆண்டு டொனமூர் ஆணைக்குழுவினர் இலங்கைக்கு வந்தபோது கண்டியத் தலைவர்கள் எமது நாட்டுக்கான அரசமைப்பு எவ்விதம் அமையவேண்டுமெனக் குறிப்பிட்டு, அவர்களிடம் அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்திருந்தனர்.

அந்த அறிக்கையில் இலங்கையை மூன்று மாநிலங்களாகப் பிரிப்பதுடன், அம்மாநிலங்களின் தன்னாட்சி பற்றியும் (SELF RULE) மத்தியில் கூட்டாட்சி பற்றியும் குறிப்பிடப்பட்டிருந்தது.

அதன் முக்கிய விவரங்கள் வருமாறு:-

1.) தமிழர்கள் செறிந்துவாழும் வடக்கு - கிழக்கு மாநிலம்.

2) கண்டியும், கண்டிசார்ந்த மலையகப் பிரதேசமும் அடங்கிய மாநிலம்.

3) தெற்கே கரையோர தாழ்நிலச் சிங்களவர்களுக்கான மாநிலம்.

- இப்படி மூன்று மாநிலங்கள் அமையவேண்டும் என்றும், இந்த மாநிலங்கள் ஒன்றின் மீது ஒன்று மேலாதிக்கம் செலுத்தாத வகையில் பூரண தன்னாட்சியுரிமை உடையனவாக அமையவேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.

இலங்கையின் பொதுவான பிரச்சினைகளில் அக்கறை செலுத்துவதன் பொருட்டு இந்த மூன்று மாநில அரசுகளும் ஒரு மத்திய கூட்டாட்சியில் அங்கங்களாக இணைந்திருக்கும் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

முன்னாள் பிரதமரான எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க, 1926 ஆம் ஆண்டு தான் எழுதிய "மோர்னிங் ஸ்ரார்" என்ற நூலிலே இனப்பிரச்சினைக்கு சமஷ்டி ஆட்சியே சிறந்தது என முன்னரே குறிப்பிட்டிருந்தார் என்பதும் இங்கு குறிப்பிடவேண்டியதே.

எனவே கண்டியத் தலைவர்கள் எவ்வளவு பரந்த அளவிலான மனப்பாண்மையுடன் புத்திபூர்வமான அறிக்கையைச் சமர்ப்பித்திருந்தனர் என்பது தெளிவு. இன்று அத்தகைய கண்டியத் தலைவர்கள் இல்லை.

அண்மையில் நாடாளுமன்றக் குழுவில் இணைந்து இங்கிலாந்து சென்ற நான், அங்கு ஐரிஸ் - ஐ.ஆர்.ஏ. இயக்கத்துக்கும், இங்கிலாந்துக்கும் - அலஸ்ரர் யூனியனிஸ்ட்டுக்களுக்குமிடையே இடம்பெற்ற "வெள்ளிக்கிழமை ஒப்பந்தம்" (FRIDAY AGREEMENT) குறித்து சம்பந்தப்பட்டவர்களைச் சந்தித்துப் பேசினேன்.

இந்தப் பேச்சுக்களின்போது சம்பந்தப்பட்ட ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய விடயங்களையும் அறிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது. அந்த ஒப்பந்தத்தில் ஐரிஸ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன், ஒப்பந்தம் நிறைவேறும் வரை ஐரிஸ் விடுதலை இராணுவம் (IRA) ஆயுதங்களை ஒப்படைப்பது பற்றியோ, கைவிடுவது பற்றியோ எவ்வித நிபந்தனைகளும் குறிப்பிடப்பட்டி ருக்கவில்லை. எனவே இந்த விவரங்களை இங்குள்ள அனைவரும் கவனத்தில் எடுக்கவேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.

மேற்படி ஒப்பந்தம் கவனத்தில் எடுக்கப்படுமாயின் எமது நாட்டில் தொடரும் இனப்பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுக் கொள்ளும் வகையில் விடுதலைப் புலிகளுடன் பேச்சை ஆரம்பிக்கவும், ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்வும் கூடுமென இந்தச் சபையிலே தெரிவிக்க விரும்புகின்றேன்.

- கடந்த நாடாளுமன்ற வரவு - செலவுத் திட்ட விவாதத்தில் மாவை சோ.சேனாதிராசா அவர்கள் உரையாற்றியவையில் இருந்து....

## தமிழ்த் தேசிய இனத்தின் ஆட்சி உரிமைக்குக் குரல் கொடுக்கவும், போராடுவதற்குமென

# மாவை சோ.சேனாதிராசா

## அவர்களையே தெரிவுசெய்யுங்கள்.

## தமிழர் விடுதலைக் கூட்டணி

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|

(C)194 7/2

வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்கு

# 55 புதிய பஸ்கள் கிடைத்தால் சிறந்த சேவையை நடத்த முடியும்

## டிப்போ வட்டாரங்கள் தகவல்

யாழ்ப்பாணம், நவ. 27
யாழ். குடாநாட்டு மக்களுக்கு சிறந்த போக்குவரத்துச் சேவையை மேற்கொள்வதற்கு 140 பஸ்கள் தேவைப்படுகின்றன. ஆனால் தற்போது சுமார் 85 பஸ்கள் மட்டுமே சேவையில் ஈடுபடக் கூடிய நிலையில் உள்ளன என்று வடபிராந்திய போக்குவரத்துச் சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ். மாவட்ட டிப்போக்களுக்கு மேலும் 55 பஸ்கள் கிடைத்தால் மக்கள் சிரமமின்றி — நெருக்கடி இன்றி — தமது பயணங்களை மேற்கொள்ளமுடியும் என்றும் டிப்போ வட்டாரங்கள் சுட்டிக்காட்டின.

இதேவேளை — 27 பஸ்கள் பழுதடைந்த நிலையில் டிப்போக்களில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. இவற்றுக்கு உதிரிப்பாகங்கள் கிடைக்காததால் அப்படியே மூலையில் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளன.

இதற்கிடையில் — சாரதிகள், நடத்துநர்களின் பற்றாக்குறையும் உள்ளது. இதனாலும் பஸ் சேவைகளைச் சீராக நடத்த முடியாமல் உள்ளதாக போக்குவரத்துச் சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தற்போது 201 சாரதிகளும், 168 நடத்துநர்களும் கடமையாற்றுகின்றனர். ஆனால் எமக்கு மேலும் 80 சாரதிகளும், 113 நடத்துநர்களும் தேவைப்படுகின்றனர்.

அண்மையில் 30 சாரதிகளும், 30 நடத்துநர்களும் புதிதாகக் கடமையில் இணைக்கப்பட்ட போதிலும் பின்னர் அந்த நியமனங்கள் திடீரென நிறுத்தப்பட்டு விட்டன என்றும் அந்த அதிகாரி மேலும் கூறினார். (க-180)

## வேம்பொடுகேணி மாணவருக்கு!

யாழ்ப்பாணம், நவ. 27
பளை வேம்பொடுகேணி சி.சி.த.க. பாடசாலையிலிருந்து ஜி.சி.ஈ. சாதாரண தரப்பரீட்சைக்கு விண்ணப்பித்த மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள் நாளை புதன்கிழமை புலோலியில் உள்ள பளை மத்திய கல்லூரியிலும் நாளைமறுதினம் வியாழக்கிழமை ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாலயத்திலும் வைத்து வழங்கப்படும். அஞ்சல் அடையாள அட்டையுடன் அனைத்து மாணவர்களையும் சமூகம் கொடுக்குமாறு பாடசாலை அதிபர் கேட்டுள்ளார். (க-ரி)

யாழ்நகரில் அன்றாடம் சேகரிக்கும்

# கழிவுப் பொருள்களில் இருந்து பசளை தயாரிக்கும் திட்டம்

## பரீட்சார்த்த பணிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ. 27
ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் யாழ். மாநகர சபையுடன் இணைந்து திண்மக் கழிவுகளைப் பசளையாக்கும் செயற்றிட்டம் ஒன்றை குடாநாட்டில் நடைமுறைப் படுத்தவுள்ளது.

இந்தத் திட்டத்தை இங்கு நடைமுறைப்படுத்துவது குறித்து ஜேர்மன் நாட்டின் ஆலோசகர் கிராய்ப் என்பவர் அண்மையில் வருகை தந்து பல தரப்பினருடனும் கலந்துரையாடல்களை நடத்திச் சென்றுள்ளார்.

இதன்படி மாநகர சபை எல்லைக்குள் அன்றாடம் சேகரிக்கப்படும் திண்மக் கழிவுகளைக் கொண்டு பசளை தயாரிக்கும் திட்டம் பரீட்சார்த்தமாகத் தற்பொழுது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கழிவுகளில் காணப்படும் பொலித்தீன் பைகள், போத்தல்கள், தகரங்கள் மற்றும் இரும்புத்துண்டுகள் என்பன அகற்றப்பட்டு மிகுதியான கழிவுகளில் இருந்தே பசளை தயாரிக்கப்படவுள்ளது.

மாநகர சபை எல்லைக்குள் அன்றாடம் சுமார் 40 தொன் திண்மக் கழிவுகள் சேகரிக்கப்பட்டு வருவதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இவற்றின் மூலம் தயாரிக்கப்படவுள்ள பசளையின் அளவு கணக்கிடப்பட்ட பின்புதொடர்ந்து தயாரிக்கப்படுவதற்கான செயற்றிட்டங்கள் விரைவில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவன வட்டாரங்கள் தெரிவித்தன.

காக்கைதீவுப் பகுதியில் இந்தப் பசளையைத் தயாரிப்பதற்கான இடம் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (க-10-ரி)

## A/L மாணவர்கள் கவனத்துக்கு

### யா/கனகரத்தினம் ம. ம. வி.

க. பொ. த. (உ/த) 2002 பரீட்சைக்கு மீளத் தோற்றவிருக்கும் மாணவர்கள் உடனடியாகப் பாடசாலையுடன் தொடர்பு கொள்ளவும்.

(சி/19476) - அதிபர்

## ஜி. சீ. ஈ. பரீட்சை அனுமதி அட்டைகள்

யாழ்ப்பாணம், நவ. 27
டிசெம்பர் மாதம் 11 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாத தனிப்பட்ட பரீட்சார்த்திகள் பரீட்சைத் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு தமது அனுமதி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்று யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ. மகாலிங்கம் அறிவித்துள்ளார். (க-10-ரி)

## ஐந்து நூல்களின் வெளியீட்டு விழா

தென்மராட்சி, நவ. 27
கச்சாயூர் பண்டிதர், கவிஞர் சு. க. சிவரத்தினம் (சுகசீலன்) எழுதிய ஐந்து நூல்களின் வெளியீட்டு விழா எதிர்வரும் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கச்சாய் கண்ணகை அம்பாள் ஆலய மண்டபத்தில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் க. சந்திரசேகரா தலைமையில் நடைபெறும்.

கச்சாய் தமிழ் இலக்கிய மன்றத்தினால் நடத்தப்படும் இந்நிகழ்வில் 'பாலர் பாமலர் நாற்பது', 'சுகசீலன் கவிதைகள்', 'அரங்கில் ஓர் ஆறு', 'அறிவுக் கதம்ப மாலை', 'கல்வி வளர் சிந்தனைகள்' ஆகிய ஐந்து நூல்களும் வெளியிடப்படவுள்ளன. (க-117)

## அனுமதி அட்டைகள் கிடைத்தன

தென்மராட்சி, நவ. 27
தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் ஜி. சீ. ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள் வலய அலுவலகத்திற்கு வந்துள்ளன.

அதிபர்கள் வலய அலுவலகத்திற்கு வந்து அவற்றைப் பெற்றுக் கொள்ளுமாறு வலயக் கல்விப்பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார்.

இதேவேளை — இப்பரீட்சைக்குத் தோற்றும் தென்மராட்சி, பளை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள் அந்தந்த அஞ்சல் அலுவலகங்களுக்கு கிடைத்துள்ளதாகவும் பரீட்சார்த்திகளை நேரில் வந்து அவற்றைப் பெற்றுக் கொள்ளுமாறும் தபால் அதிபர்கள் அறிவித்துள்ளனர் (ம-117)

சர்வதேச உதவி நிறுவனத்தினால்

# யாழ். பொது நூலகத்திற்கு 500 நூல்கள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், நவ. 27
நூல் உதவி சர்வதேச நிறுவனத்தினால் Book Aid International யாழ் பொதுநூலகத்துக்கு இந்த ஆண்டு சுமார் 500 நூல்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நூல்கள் விரைவில் கொழும்பில் இருந்து இங்கு எடுத்து வரப்படவுள்ளதாக நூலகர் தெரிவித்துள்ளார்.

இந்த நிறுவனத்தினால் ஒவ்வொரு வருடமும் நூல்கள் வழங்கப்பட்டு வருவதாகவும் அவற்றைப் பாதுகாப்புப் படையினர் கொழும்பிலிருந்து இங்கு எடுத்து வந்து தம்மிடம் வழங்குவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

கடந்த 1998 ஆம் ஆண்டு தொடக்கம் யாழ். பொது நூலகத்துக்கு இவ்வாறு நூல்கள் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-10-ரி)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், நவ. 27
யாழ். நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலய பரிசளிப்புவிழா நாளை புதன் கிழமை காலை 9 மணிக்கு அதிபர் சு. சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக அரசறிவியல் சமூகவியல் துறைத் தலைவர் கலாநிதி என். சண்முகலிங்கனும், சிறப்புவிருந்தினராக யாழ். கல்வி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் ந. வரதராஜாவும், கௌரவ விருந்தினராக க. சொக்கலிங்கமும் கலந்து சிறப்பிப்பார்கள். (க-ரி)

தேசிய கல்வியியற் கல்லூரி அனுமதி:

# நேர்முகப் பரீட்சைத் திகதிகள் மாற்றம் குறித்து அறிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 27
தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்குப் புதிய மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை திகதிகளில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

தவிர்க்க முடியாதபோக்குவரத்துத் தடங்கல் காரணமாகவே திகதிகளில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னர் நேர்முகப்பரீட்சை நவம்பர் 26, 27, 28, 29, 30 ஆம் திகதிகளில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் தற்போது —
26 ஆம் திகதிக்குரியவர்கள் நவ. 28 ஆம் திகதியும் —
27 ஆம் திகதிக்குரியவர்கள் நவ. 29 ஆம் திகதியும் —
28 ஆம் திகதிக்குரியவர்கள் நவ. 30 ஆம் திகதியும் —
29 ஆம் திகதிக்குரியவர்கள் டிசெ. 01 ஆம் திகதியும் —
30 ஆம் திகதிக்குரியவர்கள் டிசெ 02 ஆம் திகதியும் — நேர்முகப் பரீட்சைக்குத் தோற்ற முடியும் என்று யாழ். தே. க. க. பீடாதிபதி அறிவித்துள்ளார்.

நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் இந்த ஏற்பாட்டுக்கு அமைவாக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு உரிய ஆவணங்களுடன் சமூகமளிக்குமாறு அவர் அறிவித்திருக்கிறார். (க)

## 4 ஆம் கட்ட திருத்த வேலை

குருநகர், நவ. 27
1993 இல் நடைபெற்ற 'சுப்பர் சொனிக்' தாக்குதல் காரணமாகச் சேதமடைந்த குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தின் 4 ஆம் கட்டத் திருத்த வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இந்த ஆலயத்தில் குண்டு வீச்சின் போது சேதமடைந்த 11 தூண்கள் தற்போது திருத்தியமைக்கப்பட்டு வேலைகள் பூர்த்தியடையும் நிலையில் உள்ளன.

இத் திருத்த வேலைகளுக்காக வடக்குப் புனர்வாழ்வு— புனரமைப்பு அமைச்சு 5 லட்சம் ரூபாவை வழங்கி இருந்தது. (ஐ-51)

## இராமநாதனின் இதய அஞ்சலி

### செல்வி சாதனா சிவலிங்கம்

எமது கல்லூரியின் இரசாயனவியல் ஆசிரியரான செல்வி சாதனா சிவலிங்கம் அவர்களின் திடீர் மறைவையிட்டு அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள் மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்,
கல்வி சாரா ஊழியர்கள்.

யா/இராமநாதன் கல்லூரி,
சுன்னாகம். (94982)

## மரண அறிவித்தல்

### அம்பலவாணர் நவரெத்தினம்

(கருங்காலி, காரைநகர்)

காரைநகர் வாரிவளவைப் பிறப்பிடமாகவும், நல்லூர் குறுக்குத் தெருவை வசிப்பிடமாகவும் கொண்ட அம்பலவாணர் நவரத்தினம் நேற்று (26-11-2001) திங்கட்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் – காமாட்சி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற செல்வரெத்தினம் மற்றும் சின்னம்மா தம்பதியினரது அன்பு மருமகனும், தேவிகாவின் அருமைக் கணவரும், ஜீவிதா (இந்து மகளிர் கல்லூரி), சுஜிதா (இந்து மகளிர் கல்லூரி), சதீஸ்காந்த் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், அ மாணிக்கசிங்கம், திருமதி கதிரவேலு சரஸ்வதி, செல்வரெத்தினம் ஆகியோரின் அன்புச்சகோதரனும், தயாமணி, குணமாலா—சிவராஜா, மல்லிகா-மதனமோகன், சாரதா-நவக்குமார், செல்லத்துரை, கதிரவேல் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 61, மணல்தறை ஒழுங்கை, கந்தர்மடத்திலுள்ள இல்லத்தில் இன்று (27-11-2001) செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தேவிகா (மனைவி).

61, மணல்தறை லேன்,
கந்தர்மடம். (94981)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு 15 - 11 - 1920



உதிர்வு 29 - 10 - 2001

மாவிட்டபுரத்தைச் சேர்ந்த

## அட்வகேட் கே.எஸ்.ராஜா (கார்த்திகேசு சுந்தரராஜா)

(சட்டத்தரணி, முன்னாள் உதவி ஆணையாளர் - குடிவரவு குடியகல்வுத் திணைக்களம்)

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானிலுறை தெய்வமே!
மாதமோ ஒன்றாகின்றது நம்மனதிலே வேதனையோ விலகவில்லை
வளமாக வாழ்கின்றோம் ஆனால் வழி சமைத்த நீரோ இங்கில்லை
விழிகள் தேடும் இடமெல்லாம் உந்தன் விம்பம் தானே தெரிகின்றது.
உங்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

கடந்த 28.10.2001 ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்ட அனைவருக்கும் மற்றும் மரணச்செய்தி கேட்டு நேரில் வந்தும், தொலைபேசி, தந்தி மூலமும், துண்டுப் பிரசுரங்கள், பத்திரிகை மூலமும், கண்ணீர் அஞ்சலிகள் வெளியிட்டும், மலர் வளையங்கள் வைத்தும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் உதவி ஒத்தாசை புரிந்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

இன்று (27.11.2001) செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் எமதில்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

★ *இந்த அறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.*

*நந்தாவில் லேன்,*
*கொக்குவில்.*

- குடும்பத்தினர்.

தகவல்:
கே.எஸ்.சூரியகுமார்
(J/121, கிராம சேவையாளர் கொக்குவில்)

(C/19480)

## வலி.கிழக்கு முன்பள்ளி ஆசிரியர் கொடுப்பனவு

யாழ்ப்பாணம்,நவ.27

வலி.கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட சகல முன்பள்ளி ஆசிரியர்களுக்குமான செப்ரெம்பர், ஒக்ரோபர் மாத ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் நாளை புதன்கிழமை பிற்பகல் 2 மணி முதல் வழங்கப்படவுள்ளதாக வலி.கிழக்குப் பிரதேச சபைத் தலைவர் பூ.குணசிங்கம் அறிவித்துள்ளார்.

(ம-9-18)


ராஜா யாழ்ப்பாணம்
கமல், மனீஷா
*மற்றும் பலர் நடித்த*
ஆளவந்தான்
தினசரி:- 10.30,2,5 (புதிய நேரம்)
சனி,ஞாயிறு 10.30,2,5 (புதிய நேரம்)
ஆசனங்களை முன்கூட்டியே பதிவு செய்துகொள்ளவும்.
(C/19317)

நிறைஞ்சனாஸ் சங்கானை
விஜயகாந்த், லைலா
மற்றும் பலர் நடித்த
கள்ளழகர்
(சினிமா)
தினசரி: 11.00, 2.30, 5.30 (பு.நே.)

நாகம்ஸ் சுன்னாகம்
ரஜனி, பிரபு, கௌதமி, சோ நடித்த
குரு சிஷ்யன்
(சினிமா)
காட்சிகள்:- 11.00, 3.00 (புதிய நேரம்)
(94978)


அகதிகள் புனர்வாழ்வு நிறுவனமும் (T.R.R.O.) ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியமும் (UNICEF) இணைந்து செயற்படுத்தும்

## மிதிவெடி பாதுகாப்புத் திட்டம்

மிதிவெடிகளில் இருந்து மக்களைப் பாதுகாக்கும் நிகழ்ச்சித் திட்டத்திற்கான ஆற்றுகைப்படுத்தல், செயற்றிட்டத்தில் பங்குகொள்ளவிரும்பும் நாடக ஆற்றுகை பயிற்சி/ஆர்வம் உடையோரிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்ப முடிவு திகதி:- 10.12.2001

தொடர்புகொள்ள வேண்டிய/ அனுப்ப வேண்டிய முகவரி:-

**அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்,**
106, 4ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

(C/19485)

உ

## தீவகக் கல்வி வலயம் பண்ணிசைப் போட்டி - பரிசளிப்பு விழா - 2001

இடம் :- வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்
காலம் :- நாளை (28-11-2001) புதன் காலை 10 மணி
தலைவர் :- திரு.ப.விக்கினேஸ்வரன் (கல்விப்பணிப்பாளர் - தீவகக் கல்விவலயம்)
பிரதம விருந்தினர்:- செஞ்சொற் கொண்டல் ஆறு. திருமுருகன் அவர்கள் (ஆசிரியர், ஸ்கந்தவரோதயாக் கல்லூரி)
சிறப்பு விருந்தினர்கள்:- திரு.நஜெகநாதன் அவர்கள் (தலைவர், வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்)
திரு.ந. பத்மநாதன் அவர்கள் (அதிபர், வேலணை கிழக்கு மகாவித்தியாலயம்)

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

*வேலணை. தீவகக் கல்வி வலய சமய கலாசார விழாக்குழு.*

(94984)

# 31ஆம் நாள் நினைவலைகள்

மலர்வு 26 - 02 - 1930



உதிர்வு 29 - 10 - 2001

## அமரர் விசுவநாதர் இராசரத்தினம்

(இளைப்பாறிய சாரதி, இ.போ.ச.)

*அன்பின் ஒளி விளக்கே! பண்பின் சிகரமே!!*
*எண்ணி எண்ணி ஏங்க வைத்து எங்கு சென்றீர்?*
*அலைமோதும் கடல் கரையேறி ஆறுதல் பெறும்*
*நினைவலை மோதும் நெஞ்சத்திற்கு ஆறுதல்*
*எங்கு பெறுவோம்? ஆத்மா சாந்தி பெறுக!*
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

நாளை (28.11.2001) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ள ஆத்ம சாந்திக்கிரியையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*பழைய தபாற்கந்தோர் ஒழுங்கை,*
*கோப்பாய் தெற்கு, கோப்பாய்.*

என்றும் உங்கள் நினைவுகளுடன்
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(94986)

# நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் - 2001

## யாழ்.மாவட்டம்

## முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர் எஸ்.ஏ.சி.முபீன்

யாழ்ப்பாணம் முஸ்லிம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வலி.வடக்கு குரும்பசிட்டியை வாழ்விடமாகக் கொண்டவரும் கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேலாக இலைமறைகாயாக எமது மக்களைச் சொந்த இடத்தில் வாழவைக்க பாடுபட்டு வருபவருமான (இடம்பெயர்ந்த வடக்கு முஸ்லிம்கள் அமைப்பின் தலைவருமான) எஸ்.ஏ.சி.முபீன் அவர்களை முஸ்லிம் காங்கிரஸின் சின்னமான **மரத்து**க்கு நேரே புள்ளடியிட்டு அவரின் தெரிவு **இலக்கம் 12**க்கும் புள்ளடியிட்டு அவரை வெற்றிபெறச் செய்து எமது மக்களின் மீள் குடியேற்றத்துக்குப் பாடுபட ஊக்குவிப்போம்.





X 12

இவ்விளம்பரம் இடம்பெயர்ந்து வாழும் வலி.வடக்கு குரும்பசிட்டி மக்களுக்காக கலைப் பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை அவர்களால் வெளியிடப்பட்டது .

முபீன்

(94856)

நீங்காத நினைவுடன்

# 11ஆம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில்: 22 ★ 03 ★ 1923



விண்ணில்: 27 ★ 11 ★ 1990

அமரர்

## பொன். ஐயம்பிள்ளை

(இளைப்பாறிய ஆசிரியர், வலந்தலை, காரைநகர்.)

"உன்னதமானவரின் மறைவிலிருக்கிறவன் சர்வவல்லவருடைய நிழலில் தங்குவான்"

12, இராசாவின் தோட்டம்,
யாழ்ப்பாணம்.

என்றும் மறவா நினைவுடன்
- குடும்பத்தினர்.

(C/19479)

# நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் - 2001


## யாழ். மாவட்டம்


# முஸ்லிம் காங்கிரஸின் ஒரேயொரு தமிழ் வேட்பாளர்

# ஞானசுந்தரம் ஆனந்தகுமார்

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் யாழ்.மாவட்ட வேட்பாளர்.





- தாய் மண்ணின் மீட்புக்காகவும், தமிழினத்தின் மீட்சிக்காகவும் தம் உயிர்களை ஈந்த மாவீரர்களையும் அவர்கள் தம் குடும்பங்களையும் முதற் கண் நான் கௌரவிக்கின்றேன். அத்தோடு அவர்களது அடிச்சுவட்டில் எனது அரசியலும் தொடர வழிவகுப்பேன்.

- டிசெம்பர் 5ஆம் திகதி ஒன்றுபட்ட தமிழ் பேசும் மக்களின், விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவை இலங்கையின் அரசியலை நிர்ணயிக்கும் சக்தியாக மாற்றியமைப்போம்.

- 1994இல் சமாதானத்தைக் கொண்டுவரப்போவதாகக் கூறி, தமிழ் மக்களின் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று, சிம்மாசனம் ஏறிய அம்மையாரை மீண்டும் லண்டனுக்கு அனுப்பி வைப்போம்.

- 1971இலும் 1989இலும் சமதர்மம் பேசி, ஆயுதக்கிளர்ச்சியில் ஈடுபட்ட ஜே.வி.பி., தென்னிலங்கையில் இன்று விடுதலைப் புலிகளின் பெயரால் விற்றுப் பிழைக்கும் இழிவாத அரசியலைத் தோற்கடிக்க ஒன்றுபடுவோம்.

- ரணிலின் சாதகம் ராஜயோகம் ; அதையும் தீர்மானிக்கும் சக்தி விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவு என்பதை வெளிக்காட்டுவோம்.

- தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் விடுதலைப் புலிகள் மட்டுமே. எந்தவொரு பேச்சு வார்த்தையும் அவர்கள் உடன் மட்டுமே நடத்தப்பட வேண்டுமென வலியுறுத்துவதுடன் பயங்கரவாதிகள் என்ற பொய்ப் பிரசாரத்தை முறியடிக்க ஐரோப்பிய நாடுகள் ஒன்றியத் தூதுவர்களுடன் பேச்சு நடத்திக் கடும் நெருக்குதல் கொடுப்பேன்.

- அவசரகாலச் சட்டம், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்க முன்னின்று உழைப்பேன்.

**தமிழினத்தின் தனித்துவத்தைக் காப்பாற்ற ஒன்றுபட்டு வெற்றிபெறச் செய்யுங்கள்.**

- கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர்.

(C/19475)

## சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

உடுவில் டச் வீதி, சிவானி அருளானந்தம் என்பவரின் தேசிய அ.அ. (இல.737823288V), விசேட அ.அ. (இல.0907026066) அதனுடன் பேர்சும் முக்கிய ஆவணங்களும் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் க.சின்னத்துரை, டச் வீதி, உடுவிலில் ஒப்படைத்துதவவும். (94969)

A.அன்ராசா (இராசலிங்கம் வீதி, திருநகர், யாழ்ப்பாணம்). என்பவரின் விசேட அடையாள அட்டை (இல. 090101513) 24.11.01 சனிக்கிழமை காக்கைதீவில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்கூறிய விலாசத்தில் ஒப்படைக்கவும். இத்துடன் மாநகர சபை அடையாள அட்டையும் தவறிவிட்டது. (94939)

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள K 125 சுசிக்கி மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ச.நவரத்தினம், கோண்டாவில் டிப்போ முன் உள்ள கராஜ். (94955)

பொமனேரியன் இன நாய்க்குட்டிகள் (கறுப்பு, வெள்ளை) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல. 64A, புங்கன்குளம் வீதி, கொழும்புத்துறை. (94960)

### இலக்கியக் கட்டுரைகள்

வானொலியில் 'வீம்பு' நாடகம் கேட்டீர்களா? அதை எழுதிய அராலியூர் நகுந்தரம்பிள்ளையின் நூல் இலக்கியக் கட்டுரைகள். க.பொ.த. மாணவர்கள் தமிழ் மொழியும் கற்கப்பயன்படும். 150 பக்கங்கள். (94932)

### திருமண சேவை

1970ஆம் ஆண்டு, கார்த்திகை நட்சத்திரம், செவ்வாய்க் குற்றமற்ற, வைத்தியராகப் பணிபுரியும் மணமகனுக்கு பொருத்தமான மணமகள் தேவை. ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். துர்க்கா திருமண சேவை, 178, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (94965)

## கணனி நிறுவனம் குத்தகைக்கு அல்லது உரிமை மாற்றம் செய்து வழங்குதல

யாழ்நகரில் முன்னணி கணனி நிறுவனம் தனது யாழ்ப்பாணம், வடமராட்சிப் பகுதிகளிலுள்ள இரு கிளைகளையும் குத்தகைக்கு அல்லது உரிமை மாற்றம் செய்து, தொடர்ந்து நிறுவனப் பெயரில் இயங்குவதற்கான அங்கீகாரத்தையும் வழங்கத் தீர்மானித்துள்ளது.

உரிமை மாற்றம் பெறுவதாயின் நிறுவன அசையும், அசையாச் சொத்துக்களுடன் தற்போதுள்ள மாணவர் பெறுகைகளும் இணைத்து வழங்கப்படும்.

*மேலதிக விவரங்களுக்கு தொடர்பு:-*

திரு.சி.பசுபதி
உபயகிராமம்,
புலோலி தெற்கு, புலோலி.
(தொலைபேசி இல: 3271) (94966)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### சுன்னாகம் ஐயனார் தேவஸ்தானம்



மேற்படி ஆலய மண்டபத் திருப்பணி வேலைகளுக்காக ரூபா எட்டு லட்சம் நிதியை ஒதுக்கி, அதை இரண்டு கட்டமாக எமக்கு வழங்கி உதவிய
மாண்புமிகு கெளரவ அமைச்சர்
**K.N.டக்ளஸ் தேவானந்தா**
*அவர்களையும்*



*உயர்திரு.*
**K.V.குகேந்திரன் (ஜெகன்)**
*அவர்களையும்*



*வலி.தெற்குப் பிரதேச சபைத் தலைவர்*
**திரு.K.கமலசேகரன்**
*அவர்களையும்*

நாம் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பரிபாலன சபை,
*சுன்னாகம் ஐயனார் தேவஸ்தானம்.*
(94967)

## அறிவித்தல்

வைத்திய ஆலோசனையும் சிகிச்சையும் (V.O.G)

*இடம்:* MEDI CLINIC, உடுப்பிட்டி.
*நாள்:* 02.12.2001 ஞாயிற்றுக்கிழமை.
*நேரம்:* முற்பகல் 11.00 மணி.

மகப்பேற்று நிபுணர் சிகிச்சை பற்றிய ஆலோசனைகளை மீண்டும் வழங்குகின்றனர்.

(94961) - நிர்வாகி.

'உதயன்' வளமுடன் வளர வாழ்த்துகின்றோம்

## துர்க்கா ஸ்ரேஷனேர்ஸ்

(புகழ்பெற்ற புத்தக வியாபாரமும், புதினத்தாள்களின் பிரதம முகவரும்)

பஸ் நிலையம் முன்பாக - சுன்னாகம்.

(C/19469)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை அதிபர்
**திரு.க.சண்முகலிங்கம்** அவர்கள்
04.08.2000 தொடக்கம் இலங்கை அதிபர் சேவையின் அதிபர் தரம் 2 - IIக்கு பதவி உயர்வு பெற்றமையையிட்டு அவரை மனமுவந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா/நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை
(94962)

# தியாகச் சுடரேற்றுவோம்



எங்கள் உள்ளங்களில் உங்கள் உன்னத உருவங்கள்.
நீங்கள் எங்கள் வாழ்வுக்கு உயிர் தந்த உத்தமர்கள்.

பொங்கு தமிழுணர்வாகப் பொங்கிப் பிரவாகித்த நதிகள்.
பொங்கி எழுந்த சீலர்கள், போர்க்களம் புகுந்த வீரர்கள்.

சங்கு முழக்கிச் சமர்க்களத்தில் சாய்ந்த தியாகிகளே!
அங்கு தமிழர் வீரம் காட்டி வீழ்ந்த சரித்திர புருஷர்களே!

ஆயிரம் ஆயிரம் உயிர் தந்தீர்!
பாயிரம் ஆயிரம் பாடிடுவோம்.

பாடிப் பணிகின்றோம் உங்கள் திருப்பாதங்களில்
ஓடிப் பணிபுரிவோம் உங்கள் இலட்சியம் வெல்ல.

தலைவன் பெற்ற திருமகனே! தியாக தீபமே!
தலைவணங்காத் தமிழ்மகனே! எங்கள் திருவிளக்கே!

உயிரே! உணர்வே! தங்கத் தமிழ் மகனே!
தளராது உழைப்போம் உங்கள் இலட்சியம் நிறைவேற.



தியாக மாமனிதர்
## குமார் பொன்னம்பலம்

## அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்.

அப்பாத்துரை விநாயகமூர்த்தி *(தலைவர், தமிழ்க் காங்கிரஸ்)*,
சி.வி.கந்தையா சிவஞானம்,
கஜேந்திரகுமார் காங்கேசர் பொன்னம்பலம்.

(94774)

# சகல வேட்பாளர்களுக்கும் பாதுகாப்பு வழங்க முடியாது

## பிரதிப் பொலீஸ் மா அதிபர் கூறுகிறார்

கொழும்பு,நவ.27

எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடும் சகல வேட்பாளர்களுக்கும் பாதுகாப்பு வழங்குவது முடியாத காரியம். எனவே வேட்பாளர்கள் எச்சரிக்கையுடன் தமது பாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

- இவ்வாறு அறிவித்துள்ளார் பிரதிப் பொலீஸ் மா அதிபர் காமினி நவரத்ன. பொலீஸ் தலைமையகத்தில் அவர் நேற்று நடத்திய செய்தியாளர் மாநாட்டின்போதே இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

விடுதலைப் புலிகள், வேட்பாளர்களைத் தாக்கலாம் என்று எமக்குத் தகவல் கிடைத்துள்ளது. எனினும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகும் அரச, எதிர்க்கட்சி வேட்பாளர்களுக்கும் தலைவர்களுக்கும் பாதுகாப்பு வழங்க போதிய பொலீஸார் எம்மிடம் இல்லை.

ஜனாதிபதி, எதிர்க்கட்சித் தலைவர், பிரதமர் போன்றவர்களுக்கு மட்டுமே கூடுதலான பாதுகாப்பை வழங்க முடிகின்றது. கூடுதல் வன்செயல்கள் இடம்பெற்றுள்ள சிலாபம், அநுராதபுரம், அம்பாறை ஆகிய மாவட்டங்களில் பாதுகாப்பை அதிகரித்துள்ளோம்.

தற்சமயம் சோதனைச்சாவடிகளில் பணிபுரியும் பொலீஸாரை தேர்தல் பணிக்காக விடுவிக்குமாறு இராணுவ அதிகாரிகளிடம் கோரியுள்ளோம் என்றார். (ம)

### மன்னாரில் தேர்தல் பிரசாரம் சூடு

மன்னார்,நவ.27

மன்னார் மாவட்டத்தில் தேர்தல் பிரசாரங்கள் சூடு பிடித்துள்ளன. சகல கட்சிகளின் வேட்பாளர்களும் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தும், தேர்தல் பிரசாரக் கூட்டங்களை நடத்தியும் வருகின்றனர்.

இதுவரை தேர்தல் தொடர்பான வன்முறைச் சம்பவங்கள் எதுவும் இப்பகுதியில் இடம்பெறவில்லை எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# சோமவன்ஸ அமரசிங்க அதிதீவிர இந்திய விரோதி

## கருணாசேன கொடித்துவக்கு தெரிவிக்கிறார்

கொழும்பு,நவ.27

ஜே.வி.பி. தலைவர் சோமவன்ஸ அமரசிங்க அதிதீவிர இந்திய விரோதியாகச் செயற்பட்டவர். இலங்கையில் இருந்து தான் தப்பிச் செல்ல அன்றைய இந்தியப் பிரதமர் வி.பி. சிங்கும் இந்திய அரசுமே உதவியதாக அவர் கூறியுள்ளார். அவரது இக்கூற்று இலங்கை - இந்திய நல்லுறவுக்குப் பெரும் கேட்டை விளைவிக்கும்.

- இவ்வாறு ஐ.தே.க. ஊடகப் பேச்சாளரான கலாநிதி கருணாசேன கொடித்துவக்குக் கூறினார்.

நேற்றுக் காலை எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் உரையாற்றினார்.

கலாநிதி கொடித்துவக்கு மேலும் கூறியதாவது:-

ஜனாதிபதி சந்திரிகாவின் கணவர் குமாரணதுங்கவையும் பல அரசியல்வாதிகளையும் கொலை செய்வதற்குக் காரணகர்த்தாவாக இருந்தவர் சோமவன்ஸ அமரசிங்க.

ஆனால் அவர் இப்பொழுது ஜனாதிபதியின் அதிவிசேட விருந்தினராகப் பலத்த பாதுகாப்புடன் நடமாடுகின்றார்.

முன்னர் இங்கு இருந்த காலத்தில் இந்திய விரோத நடவடிக்கைகளில் முன்னின்று செயற்பட்டவர் சோமவன்ஸ அமரசிங்க. அதியாவசிய மருந்துகள் மற்றும் இந்தியத் தயாரிப்புகள் எதையுமே இறக்குமதி செய்யக்கூடாது என்று வர்த்தகப் பிரமுகர்களையும் இறக்குமதியாளர்களையும் அச்சுறுத்தியவர். இந்தியத் தயாரிப்புக்கள், வெங்காயம் உட்பட அனைத்தையும் தீயிட்டுக் கொளுத்தி ஆர்ப்பாட்டம் நடத்தியவர். இந்தியாவில் இருந்து அத்தியாவசிய மருந்துவகைகளை இறக்குமதி செய்து, குறைந்த விலையில் விநியோகம் செய்தார் என்பதற்காக முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் சகோதரி லேடி ஜெயவர்த்தன படுகொலை செய்யப்பட்டார்.

தான் இலங்கையில் இருந்து தப்பிச் செல்வதற்கு இந்தியா உதவியதாக கூட்டத்தில் பகிரங்கமாகக் கூறியுள்ளார். இது உண்மைக்கு மாறானது. சிந்திக்கக் கூடிய எவருமே இதனை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் இலங்கையும் இந்தியாவும் 2,500 வருட பாரம்பரிய நல்லுறவுகளைக் கொண்டுள்ள நாடுகள் - என்றார். (ம)

### சந்திரசேகரனும் கண்டனம்

வடக்கு - கிழக்கு யுத்தத்தில் பயன்படுத்துவதற்கென பிரிட்டனிலிருந்து இலங்கை அரசு சட்டபூர்வமற்ற வகையில் 'வக்யூம்' குண்டுகளைக் கொள்வனவு செய்தமைக்கு மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ.சந்திரசேகரன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக இலங்கையிலுள்ள பிரிட்டிஷ் தூதுவருக்கு கடிதம் ஒன்றையும் அவர் அனுப்பியுள்ளார்.

இலங்கைக்கு இந்த வகையான ஆயுதங்களை விற்பதை பிரித்தானியா கைவிட வேண்டும் என்று அவர் அந்தக் கடிதத்தில் கேட்டுள்ளார்.(ம-4)

### புலிகளின் பகுதியில் 70 ஆயிரம் பேர் வாக்களிக்கத் தகுதி

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிகளில் இம்முறை 69ஆயிரத்து 452 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

வாகரையில் 10ஆயிரத்து 386 பேரும் - கோரதீவுபற்றிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் 38ஆயிரத்து 337 பேரும் - பட்டிப்பளையில் 12 ஆயிரத்து 187 பேரும் -செங்கலடியில் 8ஆயிரத்து 542 பேரும் - வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். (ம-4)

### முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர் மீது தாக்குதல்!

அம்பாறை மாவட்ட மு.கா.வேட்பாளர் எம்ஹசன் அலியும் அவரது ஆதரவாளர்களும் சென்ற வாகனம் கடந்த ஞாயிறு மாலை தாக்கப்பட்டது. மூவர் காயமடைந்தனர்.

நிந்தவூரில் இருந்து அட்டாளைச்சேனை மத்திய கல்லூரிக்கு நோன்பு துறக்கும் நிகழ்ச்சியில் கலந்து கொள்ள அவர் சென்றபோதே வழியில் தாக்குதல் நடத்தப்பட்டது.

பொதுஜன ஐக்கிய முன்னணி ஆதரவாளர்களே தாக்கியதாகக் கூறப்படுகிறது. அக்கரைப்பற்று பொலீஸ் நிலையத்தில் இதுகுறித்து முறையிடப்பட்டுள்ளது. (ம)

### பாதுகாவலர் சங்க கூட்டம்

குடாநாட்டில் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமற்போனோரின் பாதுகாவலர் சங்க கலந்துரையாடல் நாளை புதன்கிழமை காலை 10 மணிக்கு நல்லூர் ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.

இதில் பல முக்கிய விடயங்கள் குறித்து கலந்துரையாடப்படவிருப்பதால், சங்க உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது சமூகமளிக்குமாறு கேட்கப்பட்டிருக்கிறது. (ம-4)

### தேர்தல் வன்முறைகள் அதிகரிப்பு

நேற்றுவரை நாடு முழுவதிலும் 62தேர்தல் வன்முறைகள் பதிவு செய்யப்பட்டிருப்பதாக பொலீஸ் மா அதிபர் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதேவேளை - தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட தினத்திலிருந்து நேற்றுவரை ஆயிரத்து 312 தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. (ம-4)


STP Computer World (Pvt.) Ltd.
அனுசரணையுடன்
கம்ப்யூட்டர் ருடே நடத்தும்
கணனிப் பொதுப்பரீட்சை - 2001

இலங்கையின் முதலாவது தமிழ் கணனிச் சஞ்சிகையான 'கம்பூட்டர் ருடே' தேசிய ரீதியில் நடத்தவுள்ள பெறுமதிமிக்க சான்றிதழுக்கான கணனிப் பரீட்சைக்கான வகுப்புக்கள் STPயில் 07.12.2001 இல் இருந்து நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது, 5.12.2001இற்கு முன் மாணவர்கள் பதிவுகளை மேற்கொள்ளவும். பரீட்சைக்கான விண்ணப்ப முடிவு திகதி **30.11.2001**

ம.அருள்குமரன் (இணைப்பாளர்)
STP Computer World (pvt.) Ltd.,
54A, Kantharmadam,
Jaffna. (C/19478)

வடமராட்சி மாணவர்களுக்கான பதிவுகளுக்கு
Cyber Space,
"Chandramahal"
Alvai South, Alvai.



நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்

வலி.கிழக்கு விவசாய சம்மேளனங்களின் ஒன்றியத்துக்கு வாழை அழிவுக்கான கொடுப்பனவாக 23 லட்சம் ரூபா நிதியை ஒதுக்கித் தந்தமைக்காக -



வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகாரங்கள், இந்து சமய கலாசார அமைச்சர் மாண்புமிகு
**K.N.டக்ளஸ் தேவானந்தா**
அவர்களையும்



யாழ்மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் உயர்திரு.
**K.V.குகேந்திரன் (ஜெகன்)**
அவர்களையும்



நல்லூர் பிரதேச சபைத் தலைவர் உயர்திரு.
**க.மணிபல்லவராஜன் (நிஷாந்தன்)**
அவர்களையும்

நன்றியுடன் வாழ்த்துகின்றோம்.
தலைவர்.
வலி. கிழக்கு விவசாய சம்மேளனங்களின் ஒன்றியம்.
(94994)



நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது ஆலய புனரமைப்புக்கென முதற்கட்டமாக ஒரு லட்சத்தை (100,000/=) ஒதுக்கி அதில் ஐம்பதாயிரம் (50,000/=) ரூபாவை எமக்குத் தந்துதவிய



வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ்மொழி விவகாரங்கள் அமுலாக்கல் அமைச்சரும் இந்து கலாசார அமைச்சருமான மாண்புமிகு
**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**
அவர்களுக்கும்



எமது நல்லூர் பிரதேச சபைத் தலைவரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற வேட்பாளருமாகிய உயர்திரு.
**க.மணிபல்லவராஜன்** (நிஷாந்தன்)
அவர்களுக்கும்

எமது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவிக்கின்றோம்.
கேணியடி ஞானவைரவர் தேவஸ்தான பரிபாலன சபையினர்.
(C/19481)



ஸ்ரீ செல்வா சினிமா
யாழ்ப்பாணம்.
விஜய் நடித்த
☆ ஷாஜகான்
10.30, 2.30 (ப.நே.)
புதிய வெளியீடு



பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவராக இருந்து அரும்பணியாற்றி இன்று கலைத்துறைப் பீடாதிபதியாகப் பதவி ஏற்றிருக்கும் எமது அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய
பேராசிரியர் கலாநிதி
**ப.கோபாலகிருஷ்ண ஐயர் (J.P.)**
அவர்கள்

பல்வளமும் பெற்றுப் பல்லாண்டு வாழ்ந்து நற்பணிபுரிய மனநிறை மகிழ்வுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
'வாழ்க! வளர்க!! நற்பணிகள்

பணிவன்புடன்

சிவஸ்ரீ சாம்பசதாசிவ சோமதேவக் குருக்கள்
அரசகேசரிப் பிள்ளையார் கோயில்,
நீர்வேலி.

சிவஸ்ரீ கு.தியாகராசக் குருக்கள்
செல்லக்கதிர்காம கோயில்.
(C/19488)



நல்லூர் பிரதேச சபை
கோண்டாவில் கிளை
நூலக மாடிக்கட்டடம் அமைத்தற்கான கூலி வேலைக்கான கூறுவிலை கோரல்

மேற்படி வேலைக்கான கூறுவிலை விபரப் படிவத்தை நல்லூர் பிரதேச சபை தலைமைச் செயலகத்தில் 29.11.2001ஆம் திகதி வியாழக்கிழமைக்கு முன்னதாகப் பெற்று உரிய கூறுவிலையை அரக்கு முத்திரையிட்டு பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது நேரிலோ சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட, திருத்தப்படவேண்டிய வீதிகளின் விவரங்களை அப்பகுதி பொது நிறுவன்ங்கள், உடன் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

பிரதேச சபை,
நல்லூர்.
23.11.2001.
(C/19484)

துரை தவராஜா J.P.
உப தலைவர்
நல்லூர் பிரதேச சபை.


## மரண அறிவித்தல்

### திருமதி வல்லிபுரம் செல்லம்மா

நெடுந்தனை, கரவெட்டி கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி வல்லிபுரம் செல்லம்மா நேற்று (26.11.2001) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் சின்னத்தம்பி வல்லிபுரத்தின் (ஓய்வுபெற்ற பொலீஸ் உத்தியோகத்தர்) அன்பு மனைவியும், செல்வரஞ்சன் (ஆசிரியர், றோயல் கல்லூரி, கொழும்பு), செல்வநாதன் (லண்டன்), செல்வநேசன்(கனடா), செல்வச்செந்தூரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஐ.தர்மலிங்கம் (கனடா), ஐ.இலட்சுமி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், இந்திராணி, மரியவேயா, சிவாஜினி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய தகவல் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நெடுந்தனை,
கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி.

தகவல்:
சி.வல்லிபுரம்
(கணவர்)

(C/19489)

## கப்பல் ரிக்கெற் பெற்றோருக்கு!

வடமராட்சிப் பகுதியில் உள்ள 'றான்' அலுவலகத்தில் நேற்று கப்பலுக்கான பயணச்சீட்டுக்களைப் பெற்றுக்கொண்ட அனைவரையும் இன்று காலை 8.30 மணிக்கு குறிப்பிட்ட அலுவலகத்துக்கு பயண ஒழுங்குகளை மேற்கொள்வதற்காக வருமாறு 'றான்' அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (ம-10)

# கண்டியில் கிரனேட் வெடிப்பு பதினான்கு பேர் படுகாயம்

கொழும்பு,நவ.27

கண்டி காசல் வீதியில் கதிரேசன் ஆலயத்துக்கு முன்பாக அமைந்துள்ள சிற்றுண்டிச்சாலை ஒன்றில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தில் 14 பேர் காயமடைந்தனர்.

தேர்தல் பிரசாரத்தை முடித்துக் கொண்டு வந்த பொ.ஐ.முன்னணியின் ஆதரவாளர்கள் அந்த சிற்றுண்டிச்சாலையில் உணவருந்த வந்தனர் என்றும் -

அவர்களில் ஒருவர் மறைத்து எடுத்து வந்த கிரனேட் ஒன்று தவறுதலாக வீழ்ந்து வெடித்ததால் இந்த அனர்த்தம் நிகழ்ந்தது என்றும்-

தெரிவிக்கப்பட்டது. இந்தக் குண்டு வெடிப்பால் சிற்றுண்டிச்சாலை மிகமோசமாகச் சேதமடைந்தது. (ம)

## ஐரோப்பிய ஒன்றிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கனாஸ் ஆகியோரே நாளை இங்கு வரவிருக்கின்றனர்.

ஐரோப்பிய யூனியன் தேர்தல் கண்காணிப்புக் குழுவைச் சேர்ந்த றொபேர்ட், ஜெறாட் ஆகிய இரு பிரதிநிதிகளும் ஏற்கனவே இங்கு வந்து தங்கியுள்ளனர்.

தேர்தல் முடியும் வரை அவர்கள் இருவரும் இங்கு தங்கி நின்று கண்காணிப்புப்பணியில் ஈடுபடுவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் -

வாக்களிப்புத் தொடர்பாக வழக்கமாக சர்ச்சைகளை ஏற்படுத்தும் தீவுப்பகுதிக்கு அந்தப் பகுதியைச் சேர்ந்த ஆசிரியர்கள் மற்றும் அதிகாரிகளே வாக்களிப்பு நிலைய அலுவலர்களாக நியமிக்கப்பட்டிருப்பதாகத் தங்களுக்குத் தெரியவந்திருக்கின்றது என்றும் -

மூத்த தேர்தல் அதிகாரி ஒருவரும் அப்பகுதி உதவி அரசாங்க அதிபர் ஒருவரும் முக்கிய கட்சி ஒன்றின் கைப்பொம்மைகளாக இருந்து, அக்கட்சியின் விருப்பப்படி இந்த நியமனங்களைச் செய்து, வாக்களிப்பு மோசடிகளுக்குத் துணை போகின்றார்கள் என்றும் -

ஐரோப்பிய யூனியன் தேர்தல் கண்காணிப்பாளர்களிடம் முறையீடு செய்வதற்கு தமிழ்க் கட்சிகள் சில தயாராகி வருவதாக ஒரு தகவல் தெரிவித்தது. (உ)


# அதிரடி வெளியீடு




O/L பரீட்சைக்கு
தோற்றவுள்ள மாணவர்களிற்கான
ஆங்கில பாட மாதிரி
வினாத்தாள்கள் விடைகளுடன்.
பரீட்சைத் திணைக்களத்தின்
வழிகாட்டலுக்கு அமைய தயாரிக்கப்பட்டது.
தொகுப்பு:-
த. தனேந்திரன்
B.Com (Hons) M.M.Spl, H.N.Dip. in.Acc.
கிடைக்குமிடங்கள்:- பூபாலசிங்கம், ஸ்ரீலங்கா, சுப்பிரமணியம், துர்க்கா ஸ்ரேசனர்ஸ், மொடேன், சிதம்பரப்பிள்ளை.
சொற்ப பிரதிகளே கையிருப்பில்.

# பிறிமா மா விநியோகம்

நாளை (28.11.2001) புதன்கிழமை காங்கேசன் துறைமுகத்திலிருந்து இறக்கப்படவுள்ள மாவை நேரடியாகப் பெறவிரும்புவோர், இன்று ஓடர்களைப் பதிவுசெய்யும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

நிர்வாகம்,
வி.எஸ்.பி.குறூப்.
தொலைபேசி: 2653 (94980)

NEW SCIENCE COLLEGE
JAFFNA.
பௌதிகவியல்
M. KARUNANITHY
காந்தப்புலம்
Sat.,Sun. - 7.00 - 8.00
ஆரம்பம்:- 01.12.2001 Sat.
விசேடவிடுமுறை வகுப்பு
Mon.→ Fri.-2.00 -3.00
சடமும் கதிர்ப்பும்
ஆரம்பம்:- 29.11.2001 Thu.
PAPER CLASS
2002 Tue.-Thu. - 6.15 a.m.
2001 (Revision)
Mon.→Thu.-6.00 - 7.00
நடைபெறுகிறது.

எமது புதிய வீடியோ CD வெளியீடு
பிரபுதேவா, கௌசல்யா
✪ மனதை திருடிவிட்டாய
பிரதிகளை உடன் பெறலாம்.
அல்டி
எலக்ரோனிக்ஸ் யாழ்ப்பாணம்.

பொருளியற் கல்லூரி
DAY CLASS
கலை, வர்த்தகம்
ஆரம்பம்:
யாழ்ப்பாணம்: 28.11.2001
புதன்
8.15 (ப.நே)
இணுவில்: 29.11.2001
வியாழன்
8.30 (ப.நே) (94957)

PHYSICS
பௌதீகவியல் கல்வி நிலையம்
பலாலி வீதி, கந்தர்மடம் சந்தி அருகில்.
❖ மீட்டல் வகுப்புகள்
❖ குழு வகுப்புகள்
விரும்பிய அலகுகள், விரும்பிய காலத்திற்குள் முடிக்கப்படும்.
ஆசிரியர்:-
S.மூர்த்தி (B.Sc.) (94945)


# ஓராண்டு நினைவஞ்சலி



| மண்மீது | விண்மீது |
|---|---|
| 1939 - 09 - 10 | 2000 - 11 - 27 |

அமரர்

## ஆறுமுகம் சண்முகநாதன்

(இளைப்பாறிய முகாமையாளர், மக்கள் வங்கி)

ஆண்டொன்று ஆனதையா உன்அன்பு முகங்கண்டு
அரியாலை மண்ணுன்னை அன்புடனே தேடுதையா
ஊன்உறக்கம் இல்லாது ஊருக்காய் உழைத்தாய்
உத்தமனாய் வங்கிச் சேவையதில் உயர்ந்தாய்
வீண்பொழுது போக்கிநீ வீணனாய் அலையாமல்
விருப்புடனே நற்பணிகள் செய்துமே வந்தாய்
மாண்புறும் உன்னுடலும் இராணுவ வாகனத்தால்
மண்மீது சாய்ந்ததுவோ மறுகிநாம் நிற்கின்றோம்
காண்போம் உன்னுருவைக் கண்களால் நாமென்று
காத்திருந்தோம் நாமிங்கு கடுகிநீ சென்றதேனோ
மாண்புடைய பாரதத்தில் மன்னுயிரும் பிரிந்ததுவோ
மறுபிறப்பு தனிலேனும் வருவாய் எம்முடனே
ஆண்டு பல ஆனாலும் ஆறாது எம் துயரம்
அன்பு நிறை அப்பாவே ஆறுதலைத் தாராயோ
மீண்டொருகால் வாராயோ மிகைமகிழ்வு தாராயோ
மேலான ஈசற்கும் விண்ணப்பம் செய்வோமே!

பிரிவால் துயருறும்,
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரமக்கள்.

(C/19477)

# ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பு



பண்டிதர்

## தம்பிப்பிள்ளை கிருஷ்ணபிள்ளை

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

மறைந்த எமது குடும்பத் தலைவரின் அந்தியேட்டிக் கிரியைகள் 28.11.2001 புதன்கிழமையும் சபிண்டிகரணக் கிரியைகள் 29.11.2001 வியாழக்கிழமையும் நடைபெறும். இதனைத் தொடர்ந்து 30.11.2001 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறுகின்ற ஆத்ம சாந்திப் பிரார்த்தனை, நினைவலை பகிர்தல், மதிய போசனம் ஆகியவற்றில் குடும்ப சகிதம் தவறாது கலந்து கொள்ளும் வண்ணம் பணிவன்புடன் அழைக்கின்றோம்.

"பொன்மொழியாரகம்"
வதிரி,
கரவெட்டி.

- குடும்பத்தினர்.

(C-19440)


# பொதுத் தேர்தல் யாழ்.மாவட்டம் 05-12-2001

## நாடாளுமன்றத் தேர்தல் - ஐக்கிய தேசியக் கட்சி



தி.மகேஸ்வரன்
முன்னாள் பா.உ.
முதன்மை வேட்பாளர் யாழ்.மாவட்டம்
இல. 4

உங்கள் தார்மீக அஸ்திரம்
உங்கள் வாக்கு
அது பொன்னானது
புனிதமானது
தவறாது வாக்களியுங்கள்.

(94865)



ந.ராஜசூரியர்
கட்டடக் கலைஞர்
வேட்பாளர் இல. 05
யாழ்.மாவட்டம்



உண்மையான சுதந்திரமும், சகோதரத்துவமும்,
சமாதானமும் மலர மீன் சின்னத்துக்கு
வாக்களியுங்கள்

தம்பிராஜா சுபத்திரன்
(றொபேட்)

சுயேச்சைக்குழு

ஈ.பி.ஆர்.எல்.எவ்.

(93950)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27.11.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.